
இராமகாதைக்குக் கம்பனின் நன்கொடை

முனைவர் பேராசிரியர்
அ.அ. மணவாளன்



இராஜபாளையம் கம்பன் கழக அறக்கட்டளை

இராமகாதைக்குக் கம்பனின் நன்கொடை

முனைவர், பேராசிரியர்
அ.அ. மணவாளன்

இராஜபாளையம் கம்பன் கழக அறக்கட்டளை
12, தாண்டல் கந்தசாமிராஜா தெரு,
இராஜபாளையம் - 626 117.
தமிழ்நாடு - இந்தியா
தொலைப்பேசி : (04563) 231592
கைப்பேசி : 94874 02652

நூலைப்பற்றி

நூலின் பெயர்	:	இராமகாதைக்குக் கம்பனின் நன்கொடை
நூலாசிரியர்	:	முனைவர், பேராசிரியர் அ.அ. மணவாளன்
பதிப்புரிமை	:	இராஜபாளையம் கம்பன்கழக அறக்கட்டளை இராஜபாளையம்.
முதல் பதிப்பு	:	நவம்பர் 2011
விலை	:	ரூ.100/-
கிடைக்குமிடம்	:	என்.எஸ்.முத்துகிருஷ்ணராஜா செயலர், இராஜபாளையம் கம்பன் கழக அறக்கட்டளை 12, தாண்டல் கந்தசாமி ராஜா தெரு, இராஜபாளையம் - 626 117. தொலைப்பேசி : (04563) 231592 கைப்பேசி : 94874 02652
அச்சு	:	நவீன் ஆப்செட் பிரிண்டர்ஸ் தாண்டல் கந்தசாமி ராஜா தெரு, இராஜபாளையம் - 626 117.
நூலின் அளவு	:	1 X 8 டெம்மி
பக்கங்கள்	:	96 + xx
பயன்படுத்திய தாள்	:	18.6 மேப்லித்தோ

முன்னுரை

தியாகத்திலே, கதர் யாகத்திலே, நேர்மையென்னும் யோகத்திலே சிறந்து விளங்கியவரும், பல்வேறு உயர் பதவிகளை வகித்தவரும் ஆகிய திரு. பி.எஸ்.குமாரசாமி ராஜா அவர்களையும், ஆலைகள் வைத்தும், கல்விச் சாலைகள் வைத்தும் ஊரின் பெயர் விளங்கி ஒளிர நிறுத்திய திரு.பி.ஏ.சி. ராமசாமி ராஜா அவர்களையும் உலகினுக்குத் தந்த பெருமை யுடையது இராஜபாளையம்.

இந்த நகரத்தின் எழிற் பதாகைகள், எத்திசையும் புகழ் மணக்கும் மாம்பழங்களும் இங்குள்ள சிறந்த இலக்கிய அமைப்புகளும் ஆகும்.

முப்பத்திரண்டு ஆண்டுகளாகக் கம்பன் புகழ்பாடிக் கன்னித் தமிழ் வளர்த்து, அரும்பணி ஆற்றிவரும் கம்பன் கழகம் 'அவை' களுள் ஒன்று.

கோவைத் தொழிலதிபரும் அறநெறிச் செம்மலும் ஆகிய அமரர் ஜி.கே. சுந்தரம் அவர்கள் தலைமையில், தியாகச் செம்மல் அமரர், கம்பனடிப்பொடி, திரு.சா.கணேசன் அவர்கள் 25.10.1980 இல் இராஜபாளையம் கம்பன் கழகத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

கம்பனைக் கற்றுத் துறைபோய அறிஞர்களை அழைத்துச் செவி நுகர் கனிகளை வழங்கிடச் செய்கிறது இராஜபாளையம் கம்பன் கழகம். அன்றியும், கண்வழி நுழைந்து மனத்தினில் நிறைந்து என்றென்றும் சிந்தனை துளிக்கும் தேனடைகளென நூல் வெளியிடுவதையும் இது தனது கடமையாய்க் கொண்டுள்ளது.

'கவிச் சக்கரவர்த்தி கம்பன்' (1981), 'இராமனைத் தரிசிப்போம்' (1982), 'சீதையை வணங்குவோம்' (1990), 'அனுமனைப் போற்றுவோம்' (1994), 'தம்பியர் அறுவர்' (1998), 'அரசியர் அறுவர்' (2000), 'கம்பனில் வாழ்வியல் நெறிகள்' (2002), 'இராவணனைச் சந்திப்போம்' (2003), 'கம்பர் கவி இன்பம்' (2004), 'இராமனைத் தரிசிப்போம்' (2005) - இரண்டாம் பதிப்பு, 'கம்பனும் நாமும்' (2006), 'கம்பன் நம் சத்குரு' (2007), 'கம்ப நாடகக் காட்சிகள்' (2008), 'இராம கீதை' (2009), 'கம்பனிடம் கற்கலாம்' (2010) ஆகியவை இக்கழகம் தந்துள்ள ஆய்வுப் பேழைகள்.

'இராமகாதைக்குக் கம்பனின் நன்கொடை' என்னும் இந்தத் தொகுப்பு நூலைத் தயாரித்த டாக்டர். அ.அ. மணவாளன் அவர்கள் பச்சையப்பன் கல்லூரியில் ஆங்கிலத் துணைப் பேராசிரியராகவும் (1969-1973). உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் முதுநிலை ஆய்வாளராகவும் (1974-1977). சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்மொழித் துறையில் இணைப் பேராசிரியராகவும் பணியாற்றி (1978-1996) ஓய்வு பெற்றவர். தமிழ், ஆங்கிலம், இந்தி ஆகிய மொழிகளில் ஆசிரியப் புலமையும், இலக்கியப்புலமையும் உடையவர். இலக்கியக் கொள்கைகள், இலக்கியத் திறனாய்வு, ஒப்பிலக்கியம், மொழிபெயர்ப்பு ஆகிய ஆய்வுத் துறைகளில் ஈடுபாடுடையவர். இந்தோ அமெரிக்கப் பண்பாட்டுப் பரிமாற்றத் திட்டத்தின்கிழ் இந்தியானா, கொலம்பியா மற்றும் நியூயார்க் பல்கலைக் கழகங்களில் ஒப்பிலக்கிய வருகைதரு பேராசிரியராகப் (1988-1989) பணியாற்றியவர்.

இந்நூலினை மதுரையின் அட்சய பாத்திரம் பேரருட்செல்வர் சங்கர சித்தாராமன் அவர்கள் வெளியிட, இராஜபாளையம் கம்பன் கழகப் பொருளாளர் திரு. பி.ஆர்.விஜயராகவ ராஜா பெற்றுக் கொள்வதில் பெருமிதம் கொள்கிறோம்.

இந்நூலின் அச்சுப்படிகளைத் திருத்தி உதவிய மதுரைத் தமிழாசிரியர் புலவர் திரு. கி. வேலாயுதன், திரு. உமாசங்கர் அவர்களுக்கும் எங்கள் நன்றியுரியது.

கம்பன் விழாக்களை காந்திகலை மன்றம் ராமராஜா மண்டபத்தில் நடத்த 32 ஆண்டுகளாய் அனுமதி வழங்கிய மானேஜிங் டிரஸ்டி, குருபக்தமணி திரு. பி.ஆர்.ராமசுப்பிரமணிய ராஜா அவர்களுக்கு எங்கள் நன்றி உரித்தாகும்.

இந்நூலைக் குறுகிய காலத்தில் உயரிய முறையில் அச்சிட்டு உதவிய இராஜபாளையம் நவீன் மினி ஆப்செட் பிரிண்டர்ஸ் திரு. எம். கார்த்திகேயன் அவர்களுக்கு இராஜபாளையம் கம்பன் கழகம் தனது நன்றியைத் தெரிவிக்கிறது.

தங்களன்புள்ள,

எம்.ஏ. சுப்பிரமணிய ராஜா — என்.எஸ். முத்துகிருஷ்ண ராஜா,

பி.ஆர். விஜயராகவ ராஜா — சங்கர சித்தாராமன்

என்.எஸ். ராமகிருஷ்ணன்.

உறுப்பினர்கள், இராஜபாளையம் கம்பன் கழக அறக்கட்டளை.

வணக்கம்

இந்தியப் பண்பாட்டின் அடிப்படை இதிகாசங்களாய மகாபாரதம், இராமாயணம் என்னும் இரண்டு வடமொழிப் பெருங்காப்பியங்களும், இந்தியாவில் வழங்கும் பல்வேறு மாநில மொழிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட மொழி பெயர்ப்புகளைப் பெற்றுள்ளன. இவற்றுள் சமஸ்கிருதம் என்னும் வடமொழி தருமொழி *(Source language)* எனவும், இந்த இதிகாசங்களை மொழிபெயர்த்துக் கொண்ட இந்திய மாநில மொழிகள் பெறுமொழி *(Target language)* எனவும் வழங்கப் பெறும். இந்தியப் பொதுப் பண்பாட்டினைப் பகிர்ந்து கொள்ளும் நோக்கோடு நிகழும் இம்மொழி பெயர்ப்புகள் ஒப்பிலக்கிய நோக்கில், இலக்கியத் தாக்கத்திற்கு உட்பட்டன *(literary influence)* என்று வழங்கப்படுகின்றன.

இத்தகைய இலக்கியத் தாக்கத்திற்கு உட்பட்டு மொழிபெயர்ந்த தருமொழி நூல்கள் (மகா பாரதம், இராமாயணம் போன்றன) பெறுமொழிப் பண்பாட்டிற்கேற்ப சில மாற்றங்களையும், புதிய பொருண்மைகளையும் உள்ளடக்கி வழங்கா நிற்கும். ஆண்டுகள் பலவாக வழங்கிவருமிடத்து இம்மாற்றங்களும், புதிய பொருண்மை களும் தருமொழிக்கு மொழிபெயர்ந்து, மூல நூலிலேயே வழங்கா நிற்கக் காண்கிறோம்.

இந்நிலையில் பெறுமொழி தருமொழியாகவும், தருமொழி பெறுமொழியாகவும் மாறி நிற்கக் காண்கிறோம். இம் மாற்றம் எதிர்த்தாக்கம் *(Counter influence)* என்று வழங்கப்படுகிறது. இந்த ஒப்பிலக்கியத் தொடர்தான் இந்நூலில் நன்கொடை *(Contribution)* என்னும் பெயரைப் பெற்றுள்ளது.

கம்பனின் இராமாவதாரத்தில் (இராமாயணத்தில்) இடம் பெற்றுள்ள சில கூறுகள், இத்தகைய எதிர்த்தாக்கத்தால்

மொழிபெயர்ந்து வான்மீகி இராமாயணத்தின் தென்புல வழக்கில் (*Southern recension*) இடம் பெற்று வழங்கி வருகின்றன. இத்தகைய கூறுகளில் சிலவற்றை இந்நூல் கம்பனின் நன்கொடையாகக் காட்டி விளக்குகிறது.

இந்நூல் நான்கு பெருந் தலைப்புகளையும், ஏழு உள் தலைப்புகளையும் கொண்டுள்ளது. (காண்க: பொருளடக்கம்) அவை வருமாறு:

இராமகாதையும் அதன் வளர்ச்சியும் என்னும் முதல் பெருந்தலைப்பு, வான்மீகம் முதலான இராமாயண நூல்களுக்கு அடிப்படையாக அமைந்த **இராமகாதையின்** வரலாற்றைக் கூறுகிறது. வேத பாடங்கள், பௌத்த ஜாதகக் கதைகள் முதலாயின இராமாயணக் காப்பியத்திற்குரிய அடிப்படைத் தரவுகளை இத் தலைப்பு விளக்குகிறது.

வான்மீக இராமாயணம் வடமேற்கு, வடகிழக்கு, வடக்கு, தெற்கு என நான்கு **புலவழக்குகளை** (*Recensions*) உடையதாக அமைந்த தன்மையையும், அவற்றிடையே காணப்பெறும் வேறுபாடுகளையும் **இரண்டாவது** பெருந்தலைப்பு (வான்மீகமும் அதன் புல வழக்குகளும்) விளக்குகிறது. **மூன்றாவது** தலைப்பு கம்பனுக்கு முன்னும் பின்னும் தமிழில் தோன்றிய இராமாயண நூல்களைப் பற்றிக் கூறுகிறது.

நான்காவதாக அமைந்த, **தென்புல வழக்கு வான்மீகத்திற்குக் கம்பனின் நன்கொடை** என்னும் தலைப்புதான் இந்நூலின் மையக் கருத்தை விளக்குவதாக அமைந்துள்ளது.

(4.a)''இராமன் முதலானோரின் பிறப்பு-கிரக நிலைகள்'' என்னும் தலைப்பு, இராமன், பரதன், இலக்குவன், சத்துருக்கனன் ஆகியோர் பிறந்த போதிருந்த கிருக நிலைகளைக் கம்பன் கூறுவதை விளக்குகிறது.

இந்திய நாடு முழுவதிலும், இராமாயணக் கதை வழங்கும் பிற நாடுகளிலும் **இராமநவமி** உற்சவம் கொண்டாடப் பெறுகிறது. இந்தச் செய்தியை வடபுல வழக்கு வான்மீகம், மற்றும் திறனாய்வுப் பதிப்பு வான்மீகம் கூறவில்லை. கம்பனைப் பின்பற்றித் தென்புல வழக்கு வான்மீகி இராமாயணத்தில் தான் இச்செய்தி கூறப்படுகிறது. இதைப் பின்பற்றி ஏனைய மாநிலமொழி இராமாயணங்களில் இச்செய்தி கூறப்படுவதை இந்தத் தலைப்பு விளக்குகிறது.

(4 b, c) இவ்விரு தலைப்புகளிலும் அகலிகை வரலாற்றைப் பல்வேறு இராமாயணங்கள் பலவகையாகக் கூறுவதை விவரிக்கின்றன. இவற்றிற்கடிப்படை கம்ப ராமாயணம் என்பதையும் காட்டுகின்றன. *(4 d.)* சீதையின் திருமணம் இராமன் - சீதையின் களவு மணத்திற்குப் பின்னர் நிகழ்ந்தது என்னும் கருத்தை விளக்குவதாக அமைந்துள்ளது.

(4 e.) **சேது பந்தனம்** என்னும் தலைப்பின்கீழ் இராமனின் வானர சேனை, பாண்டிய நாட்டின் தென்கிழக்குக் கடலைத் தாண்டி இலங்கையுள் செல்வதற்காகத் தரைப் பாலம் கட்டிய வரலாறு கம்பனுக்கு முன்னைய பல்வேறு தமிழ் நூல்களின் அடிப்படையில் விளக்கப்படுகிறது.

(4 f.) இது கம்பனின் தமிழ்ப் பற்றும், மொழிப்பற்றும் வெளிப்படுமாறு அமைந்துள்ள பகுதி.

(4 g.) இது வான்மீகத்தில் இல்லாத ஒரு தொன்மக் கதை. (இரணிய வதைப்படலம்). வீடணன் தன் தமையனுக்கு அறிவுரை கூறுவதாகப் படைத்துள்ள இப்பகுதி, கம்பனின் தொன்மைப் புலமையைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

நன்றியுரை

நெடுங்காலமாகக் கம்பன் புகழைப் பரப்பும் தார்மீக நோக்கத்தோடு கம்பன் கழகத்தைத் தோற்றுவித்துக் கம்பன் புகழைப் பரப்பிவரும் இராஜபாளையம் கம்பன் கழகத்தினர்க்கு என் உளமார்ந்த பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இக் கம்பன் கழகச் செயலாளராகத் தொண்டாற்றி வரும் அறிஞர் முத்துகிருஷ்ணராஜு அவர்களின் விழைவுக் கேற்ப இராமாயணக் காப்பியத்திற்குக் கம்பன் ஆற்றியுள்ள தொண்டுகளைச் சுருங்கக் கூறும் இச் சிறுநூலை அமைத்துத் தந்துள்ளேன். இவ்வகையில் இக் கம்பன் கழகத்திற்கு என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை. அன்புள்ள,

அ.அ. மணவாளன்

அணிந்துரை

மலர்க்கடைக்கு ஒரு விளம்பரம்

முனைவர் பேராசிரியர் ம.ரா.போ.குருசாமி

தமிழில் உள்ள ஏனைய நூல்களைவிடக் கம்பராமாயணத்திற்கு ஒழுங்காக விழா எடுப்பதே பெரிதும் போற்றப்படுகிறது. காரணம் என்ன? சிலப்பதிகாரம், பெரியபுராணம் போன்ற பல சீரிலக்கியக் கதைக் காவியங்களைவிட, இராம்னின் கதை கூறுகின்ற கம்பராமாயணமே நாடெங்கிலும் ஒழுங்காக விழாக்களின் மையப்பொருளாக அமைவதற்குக் காரணம் என்ன?

பாரதநாடு கொண்டாடுகின்ற இரண்டு இதிகாசங்களில் ஒன்று இராமாயணம் என்பதை மட்டும் காரணமாகக் கொள்ளமுடியாது. மகாபாரதமும் ஓர் இதிகாசம்தானே? இராமாவதாரத்தின் மாண்பினை நுவல்பொருளாகக் கொண்டிருப்பது ஒருகாரணம் என்றும் சொல்ல முடியாது; ஏனென்றால் இராமன், கண்ணன் என்ற இரண்டு அவதாரங் களில் கண்ணன் அவதாரத்தையே 'பூரண அவதாரம்' என்று கொள்வது இந்த நாட்டு மரபு. கதைப்பின்னல்களை வைத்து நோக்கினாலும் பாரதக் கதையே சிறப்புடையது என்பதில் ஐயம் இருக்க முடியாது.

ஒரு காரணம் சொல்லலாம்; சமுதாய எல்லையிலே இராம கதை பரவியுள்ள அளவிற்குப் பாரதக் கதை பரவியிருக்க வில்லை. பல்வேறு மொழிகளில் பல்வேறு கதை வடிவங்களில் இராம காதை பாரதக் கதையைவிட மிகுதியாகப் போற்றப்படுகிறது.

இராமாயண விழாக்கள் நடத்துதற்கென்று இலக்கிய அமைப்புகள் நாடெங்கிலும் உள்ளன; கடல்கடந்த நாடுகளிலும் இராமாயணம் அளவிற்குப் பாரதம் கொண்டாடப் படுவதில்லை.

இந்தப் பொதுவிதிக்குத் தமிழகம் விலக்கு இல்லை. பெருநகரங்கள் எல்லாவற்றிலும் கம்பர் பெயரால் கழகங்கள் உள்ளன. ஆண்டுதோறும் கம்பர் விழா நடத்துவதில்

போட்டியே நிலவுகின்றது என்றுகூடச் சொல்லலாம். இராசபாளையம் கம்பன் கழகம் ஆண்டுதோறும் கம்பன் விழா நடத்துவதோடு நின்றுவிடுவதில்லை; தக்க அறிஞர்களைக் கொண்டு திறனாய்வு நூல்களை ஆண்டுதோறும் வெளியிட்டு வருவது இராசபாளையக் கம்பன் கழகத்தின் சிறப்பாகும்.

அந்தச் சிறப்பான பணியின் தொடர்ச்சியாக இவ்வாண்டில் ஒப்பிலக்கியப் பேரறிஞர் முனைவர் அ.அ.மணவாளனின் நூல் வெளிவருகிறது. இந்த நூலை வெளியிடும் இராசபாளையம் கம்பன் கழகத்தை முதலில் பாராட்டுகிறேன்.

ஆய்வரங்கிலே ஒப்பிலக்கிய ஆய்வு தனிச் சிறப்புக்கு உரியது. குறைந்தது இரண்டு மொழி நூல்களை ஆராய்வது ஒப்பிலக்கியத்துறைக்குச் சிறப்பாகும். நண்பர் மணவாளனின் ஆய்வு மிகப் பல மொழிகளில் உள்ள இராம காதையை நாற்பது இராமாயணங்களுக்குமேல்- ஆராயும் சிறப்புடையது. பல்வேறு மொழியின் மொழிபெயர்ப்புகளை ஆய்வுக் களமாகக் கொள்ளாமல், இயன்றவரையில் அந்தந்த மொழிகளிலுள்ள இராமாயண நூல்களையே ஆராய்ந்திருப்பது மணவாளன் ஆராய்ச்சியின் தனிச் சிறப்பாகும். தமிழ், இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் முதுகலைப் பட்டம் பெருமளவுக்கு மேலும் முனைவர் பட்டம் பெற்றவர் நண்பர் மணவாளன். தெலுகு தாய்மொழி. பல்வேறு மொழி இராமாயணங்களை அவ்வம் மொழிவல்லாருடன் கலந்து படித்து ஆராய்ந்தவர் அறிஞர் மணவாளன். ஆகவே, முனைவர் மணவாளனின் ஒப்பிலக்கிய ஆராய்ச்சிக்குத் தனிச் சிறப்பு உண்டு.

பிர்லா அறக்கட்டளையின் உதவியோடு பல ஆண்டுகள் இராமாயணத்தை ஆராய்ந்து, நூல் உருவாக்கியவர் பேராசிரியர் மணவாளன். தமிழில் அந்தப் பெருநூலின் ஒரு பகுதி –600 பக்க அளவில் வெளிவந்துள்ளது; (இராமகாதையும், இராமாயணங் களும் தொகுதி-I, கி.பி. 2005) (காண்க - முன்சேர்க்கை 48 இராமாயணங்கள்) இன்னொரு பகுதி வெளியாவதைத் தமிழாய்வுலகம் –குறிப்பாக இராமாயண ஆய்வுலகம் – ஆர்வத்தோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

இப்போது இராசபாளையம் கம்பன் கழகம் வெளியிட்டுள்ள 'இராம காதைக்குக் கம்பனின் நன்கொடை' என்ற நூல்பற்றிச் சுருக்கமாகக் காண்போம்.

இராம காதை தொன்றுதொட்டு எப்படித் தோன்றி மாறுதல்கள் உற்று வளர்ந்தது என்பதை ஆராய்ச்சி முறையில் விளக்குவது முதல் இயல்.

இராமாயணம் என்றாலே வான்மீகரின் இராமாயண நினைவே எவர்க்கும் முதலில் எழும். அதற்கு ஆதிகாவியம் என்றே ஒரு பெயர் உண்டு. ஆதியில் தோன்றியதாகப் பொதுவாகக் கருதப்படும் வான்மீக ராமாயணம் இன்றைய வடிவில் முதலில் தோன்றவில்லை. அதுமட்டுமன்று; வான்மீக மூலம் பாரத நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு பாடங்களோடும் வடிவங்களோடும் வழங்கு கிறது. இந்த நிலை பற்றி விரிவாக ஆராய்கிறது இந் நூலின் இரண்டாம் இயல்.

வான்மீகத்துக்கு முன்னும் இராமகாதை வழங்கியது போலவே கம்பருக்கு முன்னும் பின்னும் தமிழில் இராமகாதை வழக்கு உண்டு. இச்செய்தியைச் சான்றாதாரங்களுடன் விளக்குவது மூன்றாவது இயல்.

இந்த மூன்று இயல்களையும் நூலின் பாயிரம்போல் முன்னுரையாகக் கொள்ளலாம்.

நான்காம் இயலே இந்நூலின் கருப்பொருள் எனல் வேண்டும். இந்த இயல் ஏழு பிரிவுகளைக் கொண்டது. ஒவ்வொரு பிரிவும் கம்ப ராமாயணத்தை மையமாகக் கொண்டு ஒவ்வொரு கதைப் பகுதியையும் பகுத்தாய்ந்து விரிகிறது.

ஏழு பிரிவுகளில் இரண்டு பிரிவுகள் அகலிகை பற்றியன. விரிவும் விளக்கமும் கொண்ட இப்பிரிவுகளே இந்த நூலின் சிறப்புப் பகுதி என்று கூறுவது மிகையாகாது.

இராமனும் அவன் தம்பியரும் பிறந்த கிரக நிலைகளைப் பேசுவது ஒரு பகுதி. அகலிகை தொடர்பான செய்திகளைப் பேசுவன இரண்டு பகுதிகள். சீதை திருமணம் பற்றியது ஒரு பகுதி. சேதுபந்தனம் பற்றியது ஒரு பகுதி. பிற இராமாயணங் களில் இல்லாததும் கம்பரில் மட்டும் காணப்படுவதுமாகிய

இரணிய வதைப்படலம் பற்றியது ஒரு பகுதி. வடமொழியில் அமைந்துள்ள இராமாயணப் பாத்திரங்களின் பெயர்களைத் தமிழ் மரபுக்கேற்பக் கம்பன் உருவாக்கியுள்ள தமிழாக்கம் பற்றியது ஒரு பகுதி; இந்த ஒரு பகுதி மட்டும் கதைக்குப் புறத்தே கருத்தைச் செலுத்துகிறது என்பது குறிப்பிடத் தக்கது. இரணியன் வதைப்படலமும் இராம காதைக்கு நேரிடைத் தொடர்புடைய தன்றாயினும், சின்ன ராமாயணம் என்று சொல்லத் தக்க அளவுக்கு இராம-இராவண நிகழ்ச்சிகளை வேறொரு பாங்கில் விளக்குவது.

இந்த ஏழு பிரிவுகளில் சேதுபந்தனமும் இரணிய வதைப்படலமும் இராமாயணத்தின் பிற்பகுதியோடும் தொடர்புடையவை; பெயராக்கம் பொது நிலையது. முதல் நான்கு பிரிவுகளும் இராம காதை நிகழ்ச்சிகளின் முற்பகுதியைச் சார்ந்தவை.

அறிஞர் மணவாளன் எழுதி வெளியாகியுள்ள பேராய்வின் முதற்பகுதி ஆரணிய காண்டம் வரையுள்ள செய்திகளைக் கொண்டது; வெளிவரவுள்ள இரண்டாம் பகுதி மற்றுள்ள காண்டங்களின் செய்திகளைக் கொண்டது.

இந்த நூல் அந்த இருபகுதிகளையும் உட்கொண்டு அமைந்துள்ளது – விரிவாக அல்ல, சுருக்கமாக. பெருநூல் பற்றிய அறிமுகம் என்றுகூடச் சொல்லலாம்.

பிறமொழி/இனப் பாங்குகளை இந்த நூல் சுட்டுகிறது; என்றாலும், கம்பரின் தனி முத்திரை பதிந்துள்ள தன்மையினைச் சுட்டிக் காட்டுவதே இந்த நூலின் பொதுப்போக்கு.

அகலிகை வரலாறு, அகலிகைப் புதிர் என்ற இரண்டு பகுதிகளே இந்நூலின் உயிர்ப் பகுதி என்று முன்னமே குறித்தேன். இப்பகுதிகளில் முனைவர் மணவாளனின் பன்னூற் பயிற்சியும் நூண்மான் நுழைபுலனும் மிகத் தெளிவாக விளங்குகின்றன. அவருடைய விவாதக் கருத்துகளைச் சுருக்கமாகக் கூடச் சொல்லிட நான் விரும்பவில்லை; மணவாளனின் கட்டுரையைப் படிக்க முனைவோருக்குச் சுவை குறைந்துவிடக் கூடாது என்பதே காரணம். ஆனால், -

இந்தப் பகுதியைப் படிக்கும்போது ஏற்படும் உணர்வை மறைக்க விரும்பவில்லை. ஏற்கெனவே வெளிவந்துள்ள நூலில் உள்ள கருத்துகளே ஏறத்தாழ அதே வாசகங்களுடன் விவாதிக்கப்படுகின்றன. அப்படியானால் கூறியது கூறல் என்ற குற்றமாகி விடாதோ? இல்லை; இல்லவே இல்லை.

வேறொரு பயனை விளைப்பதாக இருந்தால், கூறியது கூறலையும் நூற்குணமாகவே பெரியோர் கொள்வர். அப்படியாயின், மணவாளன் கண்டு காட்டுகின்ற பயன் என்ன?

அகலிகை வரலாற்றில் ஒரு புதிர் உள்ளது. விரசமான விவரங்கள் கொண்ட அந்த விவாதத்தில் தலை தூக்கி நிற்பது ஒரு புதிர். நிகழ்ந்துவிட்ட விரசத்தில் அகலிகையின் பங்கு என்ன? அவளிடம் புலப்பட்ட உணர்ச்சி யாது?

இராம காதையைச் சொல்லும் ஒவ்வொரு படைப்பாளியும் ஒவ்வொரு வகையிலே இந்தப் புதிரை அடையாளம் கண்டு, தத்தம் வழிநூல் படைத்து மொழிந்துள்ளனர். கம்பர் இந்த இடத்தில் காட்டும் புலமைத் திறமும்/பண்பாட்டுணர்வும் வல்லாளர் ஆய்வுக்கும் பாராட்டுக்கும் உரியன. பல்வேறு ஆசிரியர்களின் படைப்பும் திறனாய்வும் இந்தப் பகுதியில் விவரமாக ஆராயப்படுகின்றன.

ஏற்கெனவே வெளிவந்துள்ள நூலின் பகுதியை முனைவர் மணவாளன் மீண்டும் ஏன் விவரிக்க வேண்டும்?

முன் நூலின் செய்திகளையே மீண்டும் சொல்லி, அந்த அளவில் நிறுத்தியிருந்தால், நூற்குற்றம் என்று சொல்ல இடம் உண்டு. ஆனால்...

முன்பு கூறியதையே மீண்டும் கூறுவதோடு ஆசிரியர் மணவாளன் நிறுத்தவில்லை. மேலே சில சொல்லுகிறார்.

பிறர்மனை நயத்தல்/ பிழைத்தல் என்பது ஒரு நிரந்தரப் பாடுபொருள்; முன்னும் உண்டு, இன்றும் உண்டு; இனியும் தொடரும் என்றே சொல்ல வேண்டியுள்ளது.

வெ.ப.சுப்பிரமணிய முதலியார், ச.து.சு. யோகியார், புதுமைப்பித்தன், கோவி மணிசேகரன் ஆகியோரும் இந்த விரசச் சங்கடத்தை மனங் கொண்டு இலக்கியம் படைத்துள்ளனர். வங்க மொழியில் துவிஜேந்திரலால் ராய்

என்பவர் எழுதிய அகலிகை நாடகம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இந்தப் படைப்பின் செய்திகளை முன்னைய நூலில் மணவாளன் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளவில்லை. இப்போது அவற்றையும் இந்த நூலில் ஆராய்கிறார்.

தொட்டனைத்து ஊறும் அறிவு என்பதற்கேற்ப இவற்றைப் படிந்தறிந்தபோது தோன்றிய கருத்துகள் முதன்முதலாக இந்நூலில் விவாதிக்கப் படுகின்றன. இந்தப் புதிய விவாதத்திற்குப் பழைய செய்திகளும் பின்புலமாக இருக்க வேண்டுமே என்பதால் இடையறாக் கல்வி முயற்சியுடையவராகிய டாக்டர் மணவாளன் புதிய விவாதப் பின்புலமாகப் பழைய செய்திகளையும் தந்துள்ளார் என்பதை வாசகர்கள் உணரவேண்டும்.

வான்மீகர் முதல் கோவி மணிசேகரன் முடிய அகலிகையின் பங்கும் பாங்கும் எத்தகையன என்பதைத் தம் படைப்புகளிலே சுட்டியுள்ளனர். இந்தப் பின்னணியில் கம்பர் நிலை யாது என்பதை அறிவதற்கு முனைவர் மணவாளன் எழுதிச் சேர்த்துள்ள விவாதம் மிகவும் உதவியாக அமைகிறது. மேலும்... பெண்ணியத் தத்துவம் தூண்டிய உணர்வுள்ள அகலிகையைக் கதை மாற்றங்களிலே காணமுடிகிறது என்பதைத் திறம்பட விளக்கியுள்ளார் நம் ஆசிரியர்.

இலக்கிய இயக்கங்களைப் பற்றி விளக்கும் தமிழகத் திறனாய்வாளர் பலர், மேலைநாட்டு நூல்களின் செய்திகளை இடம் மாற்றி விரித்துரைத்துக் கொண்டுள்ளனர். இலக்கியம் வாழ்க்கையின் பிரதிபலிப்பு என்ற உண்மையை உணர்வோமானால், ஒவ்வொரு சமூகத்தின் உணர்வுகளும் அந்தந்தச் சமூக நிகழ்ச்சிகளின் வழியொட்டித்தான் இலக்கிய இயக்கங்களும், இலக்கியக் கொள்கைகளும் உருவாவதை உணரமுடியும். இந்த வகையில் அறிஞர் மணவாளன் மிகச் சிறந்த பணியைச்செய்துள்ளார். அகலிகைகதையின் பல்வேறு நிகழ்ச்சிகளை வரலாற்றுப் பின்னணியிலும் பண்பாட்டுப் பின்னணியிலும் விளக்கியிருப்பது இந்த நூலின் தனிப்பெருஞ் சிறப்பு என்று நான் கருதுகிறேன்.

''அகலிகை பாத்திரம் ஒரு மாயையா அல்லது மானுட வாழ்க்கையின்

நிரந்தரமான ஒரு கூறா?அல்லது விடுவிக்கவே முடியாத ஒரு புதிரா?

தெரியவில்லையே!''

என்று முடிக்கும்போது அகலிகை என்ற பாத்திரத்தின் சிந்தனைக்கும் செயலுக்கும் இடம்தரும் படைப்பு இனியும் தோன்றலாமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

வேறு எதற்காக இல்லாவிட்டாலும் அகலிகை படைப்பின் நுட்பங்களை எடுத்துக்காட்டி விளக்கிய ஆய்வாளர் மணவாளனுக்குத் தமிழ்த் திறனாய்வுலகம் நன்றி செலுத்தும் கடப்பாடு உடையது.

நூலின் எல்லாக் கருத்துகளையும் இந்த அணிந்துரையில் எடுத்து விவாதிக்க நான் முயலவில்லை. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறே பதம்.

மலர்க் கடைக்கு விளம்பரம் தேவை இல்லை. அறிவிப்புப் பலகை வைத்தால், பலகை எழுதினவனின் தொழிலுக்கு ஆதரவு நல்கியதாகத்தான் இருக்கும். இந்த அணிந்துரை தந்து, நான் மலர்க் கடைக்கு விளம்பரப் பலகையாகியுள்ளேன்.

நன்றி, வணக்கம்.

கோயம்புத்தூர் ம.ரா.போ. குருசாமி

இராமாயண நூல்கள்

வ. எண்.	நூலின் பெயர்	ஆசிரியர்	காலம் நூற்றாண்டு	மொழி	சமயம்
1.	தசரத ஜாதகம்	தெரியவில்லை	கி.மு. 5	பாலி	பௌத்தம்
2.	அனாமகம் ஜாதகம்	தெரியவில்லை	கி.மு. 3	பாலி	பௌத்தம்
3.	வால்மீகி ராமாயணம்	வால்மீகி	கி.மு. 4-3	சமஸ்கிருதம்	இந்து
4.	பாரதம்	வியாசர்	கி.மு. 4-3	சமஸ்கிருதம்	இந்து
5.	தசரத கதானம்	தெரியவில்லை	கி.மு. 1	பாலி	பௌத்தம்
6.	இரகு வம்சம்	காளிதாசர்	கி.பி. 4-5	சமஸ்கிருதம்	இந்து
7.	பௌம சரியு (சரிதம்)	விமல சூரி	கி.பி. 4-5	பிராகிருதம்	சமணம்
8.	வாசுதேவ ஹிண்டி.	சங்கதாசர்	கி.பி. 5	பிராகிருதம்	சமணம்
9.	நரசிம்ம புராணம்	தெரியவில்லை	கி.பி. 5	சமஸ்கிருதம்	இந்து
10.	இராவண வஹ அல்லது சேது பந்த	பிரவரசேனர்	கி.பி. 6	பிராகிருதம்	இந்து
11.	பாகவத புராணம்	தெரியவில்லை	கி.பி. 6-7	சமஸ்கிருதம்	இந்து
12.	பட்டி காவியம் அல்லது இராவண வதம்	பட்டி	கி.பி. 7	சமஸ்கிருதம்	இந்து
13.	ஜானகி ஹரண்	குமாரதாசர்	கி.பி. 8-9	சமஸ்கிருதம்	இந்து

வ. எண்.	நூலின் பெயர்	ஆசிரியர்	காலம் நூற்றாண்டு	மொழி	சமயம்
14.	உத்தர புராணம்	குணபத்திரர்	கி.பி. 9	ப்ராகிருதம்	சமணம்
15.	துன் ஹு‍வாங்	தெரியவில்லை	கி.பி. 9	திபேத்திய மொழி	
16.	கம்பரராமாயணம்	கம்பர்	கி.பி. 10	தமிழ்	இந்து
17.	இராமசரிதம்	அபிநந்தர்	கி.பி. 10	சமஸ்கிருதம்	இந்து
18.	இராமாயண ககவின் (இந்தோனேசிய ராமாயணம்)	யோகீஸ்வரர்	கி.பி.10-11	பழைய ஜாவானிய மொழி	இந்து
19.	சம்போ எகோடோபா (ஜப்பானிய ராமாயணம்)	மினமோ டோனோ தமே நோரி	கி.பி. 10	ஜப்பான்	-
20.	சம்பு ராமாயணம்	போசராசன்	கி.பி. 11	சமஸ்கிருதம்	இந்து
21.	இராமாயண மஞ்சரி	க்ஷேமேந்திரர்	கி.பி. 11	சமஸ்கிருதம்	இந்து
22.	புசுண்டி ராமாயணம்	தெரியவில்லை	கி.பி. 12	சமஸ்கிருதம்	இந்து
23.	பத்ம புராணம்	ரவிசேனர்	கி.பி 12-15	சமஸ்கிருதம்	இந்து
24.	உதார ராகவம்	சாகல்ய மல்வர்	கி.பி. 12-14	சமஸ்கிருதம்	இந்து
25.	ஹொபுத்சுஷு (ஜப்பானிய ராமாயணம்)	தைரானோ யசுயோரி	கி.பி. 12	ஜப்பான்	-
26.	திபேத்திய உரை ராமாயணம்	தமர்ஸ்டன் காஸ் ரிக்யல்	கி.பி. 13	திபேத்தியமொழி	-

வ. எண்.	நூலின் பெயர்	ஆசிரியர்	காலம் நூற்றாண்டு	மொழி	சமயம்
27.	ரங்கநாத ராமாயணம்	கோன புத்தா ரெட்டி	கி.பி. 13	தெலுங்கு	இந்து
28.	பாஸ்கர ராமாயணம்	பாஸ்கரர் மற்றும் மூவர்	கி.பி. 13	தெலுங்கு	இந்து
29.	அசாமி ராமாயணம்	மாதவ கந்தலி	கி.பி. 14	அசாமி	இந்து
30.	கண்ணச ராமாயணம்	இராம பணிக்கர்	கி.பி. 14	மலையாளம்	இந்து
31.	அத்யாத்ம ராமாயணம்	தெரியவில்லை	கி.பி. 14-16	சமஸ்கிருதம்	இந்து
32.	கிருத்திவாச ராமாயணம்	கிருத்திவாசன்	கி.பி. 15	வங்காளி	இந்து
33.	மொல்ல ராமாயணம்	ஆதுகூரி மொல்ல	கி.பி. 15	தெலுங்கு	இந்து
34.	ஆனந்த ராமாயணம்	தெரியவில்லை	கி.பி. 15	சமஸ்கிருதம்	இந்து
35.	தொரவெ ராமாயணம்	குமார வால்மீகி என்னும் நரஹரி	கி.பி. 16	கன்னடம்	இந்து
36.	எழுத்தச்சன் அத்யாத்ம ராமாயணம்	துஞ்சத்து எழுத்தச்சன்	கி.பி. 16	மலையாளம்	இந்து
37.	பாவார்த்த ராமாயணம்	ஏகநாதர்	கி.பி. 16	மராட்டி	இந்து
38.	இராமசரித மானசம்	துளசிதாசர்	கி.பி. 16	இந்தி	இந்து
39.	ஜகமோகன் ராமாயணம்	பலராமதாசர்	கி.பி. 16	ஒரியா	இந்து

வ. எண்.	நூலின் பெயர்	ஆசிரியர்	காலம் நூற் றாண்டு	மொழி	சமயம்
40.	பாரசீக ராமாயணம்	அப்துல்காதர்	கி.பி. 16	பாரசீகம்	-
41.	தக்கை ராமாயணம்	எம்பெருமான்	கி.பி. 17	தமிழ்	இந்து
42.	ஹிகாயத் செரி ராமா	தெரியவில்லை	கி.பி. 13-17	மலாய் மொழி	இந்து
43.	ராம வத்து (பர்மிய ராமாயணம்)	தெரியவில்லை	கி.பி. 17	பர்மிய மொழி	-
44.	மகாரடிய லாவனா (பிலிப்பைன்ஸ் ராமாயணம்)	தெரியவில்லை	கி.பி. 17-19	பிலிப்பைன்ஸ் மொழி	-
45.	ராமகியேன் (ராமகீர்த்தி) (தாய் ராமாயணம்)	முதலாம் இராமன் (King Rama I)	கி.பி. 18	தாய்(லாந்து) மொழி	-
46.	குவாய் துவாரபி	தெரியவில்லை	கி.பி. 18	லாவோஸ் மொழி	-
47.	பிரா லக் பிரா லாம்	தெரியவில்லை	கி.பி. 19	லாவோஸ் மொழி	-
48.	பிரகாஷ் ராமாயணம்	பிரகாஷ் ராம்	கி.பி. 19	காஷ்மீரி	இந்து

பொருளடக்கம்

1. இராமகாதையும் அதன் வளர்ச்சியும்

வேதங்களில் இராமகாதை

இக்குவாகு ராம், அஷ்வபதி, ஜனகன், சீதா போன்ற இராமாயணப் பாத்திரங்களின் பெயர்கள் வேதங்களில் காணப்படுவதைக் கொண்டு வேதகாலத்தில் இராம காதை வழங்கிவந்தது என்னும் ஒரு கருத்து நிலவி வருகிறது. ஆனால் இந்தப் பெயர்களைத் தாங்கிய பாத்திரங்களுக்கிடையிலான கதையோ, இராமாயணத் தொடர்பான வேறு கதைக் குறிப்புகளோ வேதங்களில் குறிப்பிடப்படவில்லை. ஜனகன், சீதை ஆகிய இருவரைப் பற்றிய குறிப்புகள் பல இடங்களில் காணப்படினும் தந்தை-மகள் என்னும் உறவு பற்றிய செய்திகள் இடம்பெறவில்லை.

எனவே, வேதகாலத்தில் இராமாயணம் இயற்றப்பெற்று இருந்தது என்பதற்கோ அல்லது இராம காதை தொடர்பான பாடல்களோ கதைகளோ வழங்கி வந்தன என்பதற்கோ வேதகால இலக்கியங்களில் எத்தகைய சான்றுகளும் காணப் படவில்லை என்பது தெளிவாகிறது. பழம் வரலாற்றுப் பெயர்கள் பலவற்றோடு இராமாயணப் பெயர்கள் பொருந்துகின்றன என்னும் உண்மையால் இப்பெயர்கள் வேதகாலத்திலும் அதற்கு முன்னரும் வழக்கில் இருந்து வந்தன என்னும் செய்தி புலனாகின்றது.[1]

இராம காதையும் பௌத்த நூல்களும்

வால்மீகி ராமாயணம் கி.மு. 4 அல்லது 3 ஆம் நூற்றாண்டில் தோன்றியது. தசரத ஜாதகம் முதலான புத்தஜாதகக் கதைகள் கி.மு. 5ஆம் நூற்றாண்டிற்கும் கி.மு.முதல் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் தோன்றியவை. எனவே வால்மீகியின் இராமாயணம் ஜாதகக் கதைகளின் அடிப்படையில் இயற்றப்பட்டிருக்கலாம் என்னும்

1. காமில் புல்கே, ராம்கதா (தோற்றமும் வளர்ச்சியும்). (ஹிந்தி). அலகாபாத்: 1950, பக்.1-24.

கருத்தைச் சில அறிஞர்கள் முன்வைத்துள்ளனர். இராமன், பரதன், சீதை போன்ற தலைமைப் பாத்திரங்களின் ஒழுகலாறு களுள் அஹிம்சை, சாந்தம் போன்ற சத்திரியர்களுக்கு ஏலாத பண்புகள் காணப்படுவதால் அவை புத்தமதக் கோட்பாடு களின் செல்வாக்கால் படைக்கப்பெற்றிருக்கலாம் என்னும் கருத்தும் நிலவுகிறது.

வால்மீகியின் காப்பியம் இராம காதையின் மூலமன்று; வால்மீகியின் காலத்திற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே இராமகாதைச் செய்திகள் பல்வேறு கதைகள் மூலமாகவும் நாட்டுப்புற வாய்மொழிகள் மூலமாகவும் இந்தியாவின் பல்வேறு பிராந்தியங்களில் வழங்கி வந்தன; அவற்றை அடிப்படையாகக்கொண்டு புத்த ஜாதகக் கதைகள், வால்மீகி ராமாயணம், சமணக் கருத்துகளை உட்கொண்ட சிறுசிறு நூல்கள் தோன்றின.

புத்த ஜாதகக் கதைகளில் கூறப்படும் இராமாயணச் செய்திகள் உரைநடை வடிவில் பௌத்தக் கோட்பாடுகளை விளக்கும் முகமாகக் கூறப்படுகின்றன. ஜாதகக் கதைகளைப் பொறுத்த வரையில் தசரதனின் தலைநகரம் வாரணாசி; இராமனும் சீதையும் உடன்பிறப்புகள்; வனவாசம் செல்லும் இடம் இமயமலைப்பகுதி; வனவாச காலம் 12 ஆண்டுகள். வால்மீகியின் ஆதிராமாயணத்தில் தலைநகரம் அயோத்தி; இராமனும் சீதையும் தொடக்கம் முதலே கணவன் மனைவியர்; வனவாசம் சென்ற இடம் தண்டகாரண்யம்; வனவாச காலம் 14 ஆண்டுகள்; குப்தர் சற்று முன்னர் வனவாசம் தண்ட காரணியத்தைத் தாண்டிச் சென்று இராவண வதத்தையும் உள்ளடக்கியதாக வான்மீகம் விரிவடைந்தது.

இத்தகைய வேறுபாடுகளை நோக்க, நாட்டில் பண்டு தொட்டே வழங்கி வந்த இராமாயணம் தொடர்பான கதைகளைக் கருவாகக் கொண்டு பௌத்த நூல்களும் வால்மீகி போன்ற கவிஞர்களும் தத்தம் கோட்பாடுகளுக்கேற்பப் பாத்திரங்களையும் கதைநிகழ்ச்சிகளையும் அமைத்துக்

கொண்டனர் என அறிகிறோம். சில பிற்கால ஜாதகக் கதைகளில் வால்மீகியின் தொடர்களும் கருத்துகளும் ஆங்காங்கே காணப்படுதலின் அவை, வான்மீகத்திற்குப் பின்னர்த் தோன்றியிருக்கலாம் அல்லது பிற்சேர்க்கையாக இணைக்கப் பட்டிருக்கலாம் எனவும் அறிஞர்கள் கருதுவர்.

ஜாதகக் கதைகள்

பௌத்த மதத்தினருக்குரிய பழைய இலக்கியம் ஜாதகக் கதைகள் என்னும் பெயரில் வழங்குகிறது. புத்த பகவான் தம்முடைய முற்பிறவிகளில் மனிதனாகவும் விலங்கு களாகவும் அவதரித்து மக்களுக்கு வழிகாட்டியாக வாழ்ந்த வரலாறுகளை இந்த ஜாதகக் கதைகள் கூறுகின்றன. மக்களிடையே வழங்கிவந்த பல்வேறு கதைகளைப் பயன் படுத்திப் புத்தமதக் கருத்துகளை உபதேசிக்க இக்கதைகள் பயன்படுத்தப்பெற்றன. இத்தகைய பழங்கதைகளுள் இராம காதைச் செய்திகள் பலவும் இடம்பெற்றுள்ளன. எனவே, ஜாதகக் கதைகளுக்கும் முற்பட்ட காலத்திலிருந்தே இராம காதை மக்களிடையே வழங்கிவந்தமை புலனாகிறது.

ஜாதகக் கதையின்அமைப்பு

தோற்றுவாய், எடுத்துக்காட்டுக்கதை, முடிவுரை என்னும் மூன்று கூறுகளை உடையதாக ஒவ்வொரு ஜாதகக் கதையும் அமைந்துள்ளது. கதை கூறுவதற்குக் காரணமான உடன்கால நிகழ்ச்சிகள் தோற்றுவாய்ப் பகுதியில் கூறப்படுகின்றன. மானுடச் சிக்கலை மையமிட்ட அந்நிகழ்ச்சிகளுக்குப் பரிகாரமாக அல்லது விளக்கமாகப் புத்தபெருமான் ஒரு கதை கூறுகிறார். அது எடுத்துக்காட்டுக் கதைப் பகுதியில் இடம்பெறுகிறது. அத்தகைய எடுத்துக்காட்டுக் கதையில் முற்பிறவியில் புத்தர் எந்தப் பாத்திரமாகச் செயல்பட்டார் என்னும் விளக்கம் முடிவுரையில் கூறப்படுகிறது.

இம் மூன்று கூறுகளுள் இடையில் அமைந்த கதைப் பகுதிகளில்தாம் இராம காதை பற்றிய செய்திகள்

இடம்பெறுகின்றன. இக் கதைகள் தசரத ஜாதகம், அனாமகம் ஜாதகம், தசரத கதானம் என்னும் மூன்று தொகுப்புகளுள் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் தசரத ஜாதகம் காலத்தால் முற்பட்டதாகவும் மிகவும் சிறப்பானதாகவும் புகழ்ந்து பேசப்பெறுகிறது.

தசரத ஜாதகம்

ஜாத கட்ட வண்ணனை என்னும் தொகுப்பில் தசரத ஜாதகம் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த ஜாத கட்ட வண்ணனை கி.பி. 5ஆம் நூற்றாண்டில் தோன்றிய ஒரு சிங்கள நூலிலிருந்து பாலியில் மொழிபெயர்க்கப்பட்டது. இதில் காணப்படும் கதைகள் பழைய பாலி மொழியில் இயற்றப்பட்ட பாடல் களுக்கு எழுதப்பட்ட உரைவடிவில் இயற்றப்பட்டவை.

அதாவது, பண்டைய பாலி கவிதை இலக்கியத்திற்கு எழுதப்பெற்ற உரைகளில் பல கதைகள் கூறப்பட்டிருந்தன. இவை கி.பி.5ஆம் நூற்றாண்டளவில் சிங்களமொழியில் பெயர்க்கப்பட்டு வழங்கி வந்தன. பின்னர் இக் கதைக்ள் மீண்டும் புதிய பாலி மொழியில் ஜாத கட்ட வண்ணனை என்னும் பெயரில் பெயர்க்கப்பட்டன. இந்த வடிவம்தான் தற்போது வழக்கில் உள்ளது. பழைய பாலிமொழியில் அமைந்த கவிதைகளோ அவற்றிற்கு அமைந்த உரைகளோ தற்போது வழக்கில் இல்லை.

எனவே, கி.மு. வில் தோன்றிய கதைகள் சிங்களத்திற்கு மொழிபெயர்ந்து கி.பி யில் மீண்டும் பாலி வடிவம் பெற்றுள்ளன என அறிகிறோம். அதனால் மூலவடிவம் கருதி தசரத ஜாதகம் கி.மு. 5 ஆம் நூற்றாண்டுக்கு உரியது எனச் சில அறிஞர்கள் கருத, பின்னைய வடிவம் கருதிக் கி.பி.5 ஆம் நூற்றாண்டுக்கு உரியது எனச் சில அறிஞர்கள் கருதுகின்றனர்.

அனாமகம் ஜாதகம்

கி.பி.3ஆம் நூற்றாண்டளவில் அனாமகம் சீன மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது. இதற்கடிப்படையான இந்திய

நாட்டின் முதல் நூல் இன்னதென அறிய இயலவில்லை; கிடைக்கவும் இல்லை. மறைந்து போன மூல நூலின் அடிப்படையிலும் தசரத ஜாதகத்தின் சாயலின் அடிப்படை யிலும் இந்த நூலும் கி.மு.5ஆம் நூற்றாண்டுக்கு உரியது என அறிஞர்கள் கருதுகின்றனர்.

இந்த ஜாதகக் கதையில் இராமாயணப் பாத்திரப் பெயர்கள் எவையும் குறிப்பிடப்பெறவில்லை. ஆனால், இராமன் சீதை இருவரின் வனவாச வாழ்க்கை, சீதையைக் கடத்திச் செல்லுதல், ஜடாயுவின் வாழ்க்கை வரலாறு, வாலி சுக்கிரிவன் போர், சேது பந்தனம், சீதையின் பரீட்சை ஆகிய இராம காதை நிகழ்ச்சிகள் பெயர் குறிப்பிடப் பெறாமல் கூறப்பெறுகின்றன. இவையெல்லாம் போதிசத்துவரின் வாழ்க்கையில் நடைபெறுவனவாகக் காட்டப்பெறுகின்றன.

தசரத கதானம்

கி.பி.2ஆம் நூற்றாண்டிற்குரியதாகக் கருதப்படும் மறைந்துபோன இந்திய மூலத்தின் சீன மொழிபெயர்ப்பாகிய (கி.பி.472) திபிடகத் தொகுப்பில் அடங்கியுள்ள 121 வீரதீரக் கதைகளில் (அவதானங்கள்) தசரத கதானம் என்னும் பெயர் காணப்படுகிறது. சீனத் திபிடகத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள பல கதைகளில் கனிஷ்க மன்னன் தலைமைப் பாத்திரமாக வருவதால் இக் கதைகள் கி.பி. 2 ஆம் நூற்றாண்டிற்குரியனவாகக் கருதப்படுகின்றன. எனினும் பாலி மொழியின் மூலக் கதைதான் சீன மொழியில் பெயர்க்கப் பெற்றுப் பின்னர் மீண்டும் பாலியில் மொழிபெயர்க்கப் பட்டிருத்தலால் முதல் நூல் கி.மு.வில் தோன்றி இருக்கலாம் என்னும் கருத்தும் அறிஞர்களிடையே நிலவுகிறது.

தசரத கதானத்தின் சிறப்பு அம்சம் என்னவென்றால், இதில் சீதை என்னும் அரசகுமாரியின் பாத்திரமே இடம் பெறாததுதான். எனவே, சீதையின் பிறப்பு, திருமணம், வனவாசம், இராவணனால் கடத்தப் பெறல்,

இராம-இராவணப் போர் என்னும் நிகழ்ச்சிகள் எவையும் இல்லாத ஓர் இராமாயணமாக இக்கதை காணப்படுகிறது.

எல்லா ஜாதகக் கதைகளும் இராமனைப் புத்த பகவானின் அவதாரங்களில் ஒன்றாகப் படைத்துக் காட்டுகின்றன. (புல்கே 56-62).

வான்மீகி ராமாயணம்

வால்மீகியை ஆதிகவி என்றும் அவர் இயற்றிய இராமாயணத்தை ஆதி ராமாயணம் என்றும் இந்திய இலக்கிய மரபு போற்றிப் புகழ்கிறது. வடமொழி என்று கூறப்பெறும் சமஸ்கிருத மொழியைப் பொறுத்தவரை இக்கூற்று உண்மையானதுதான். காப்பிய இலக்கிய வகைக்கென்று தனித்ததொரு சுலோக யாப்பை முதன்முதலாக இயற்றி வழக்கிற்குக் கொண்டு வந்தவர் வால்மீகிதான் என்னும் கருத்திலும், இதிகாசம் என்னும் பெருங்காப்பியப் படைப்பை முதன் முதலில் சமஸ்கிருத மொழியில் இயற்றியவர் வால்மீகியே என்னும் கருத்திலும் ஐயமில்லை.

வடமொழி இலக்கிய வரலாற்று மரபு ஒருபுறம் இருக்க,

தேவ பாடையின் இக்கதை செய்தவர்
மூவ ரானவர் தம்முளும் முந்திய
நாவினான் உரையின் படி.... *(பாயிரம் – 10)*

எனவும்,

வாங்கரும் பாதம் நான்கும் வகுத்த வான்மீகி என்பான்
(கம்ப.1.2:1)

எனவும் வான்மீகத்தின் முதன்மையையும், வால்மீகி முனிவர் முதன்முதலாகச் சுலோக யாப்பினைத் தோற்றுவித்தவர் என்னும் செய்தியையும் கம்பன் கூறுவதனால், தமிழ்ப் பண்பாட்டு மரபும் வால்மீகியின் இதிகாச முதன்மையினை ஏற்றுப் போற்றி வந்திருக்கக் காண்கிறோம்.

எனினும் இராமாயணக் கதையைத் தோற்றுவித்தவர் வால்மீகி முனிவர் அல்லர் எனவும், அவருக்கு முன்னரே இராம காதை தொடர்பான கதைகள் பல இந்தியாவின் பல பகுதிகளில் வழங்கி வந்தன எனவும் அறிகிறோம்.

இராமாயணக் கதைக் குறிப்புகள் வால்மீகிக்கு முன்னரே இந்தியாவின் பல்வேறு பகுதியில் வாய்மொழியாகவும் கதைகளாகவும் வழங்கிவந்தன என்னும் கருத்தை உட்கொண்டு அறிஞர்கள் பலர் இராம காதையின் தோற்றம் குறித்துப் பல்வேறு கருத்துகளை முன்வைத்துள்ளனர். இவர்களுள் டாக்டர் வெபர், டாக்டர் யாகோபி மற்றும் டாக்டர் தினேஷ் சந்திர சென் போன்றோர் முக்கியமானவர்கள்.[2]

தசரத ஜாதகம் போன்ற புத்த ஜாதகக் கதைகள் மற்றும் ஹோமரின் காப்பியமாகிய இலியதம் (The Ilid) ஆகியன இராம காதையின் தோற்றத்திற்குரிய அடிப்படை மூலங்கள் என்பது டாக்டர் வெபரின் கோட்பாடு. ஜாதகக் கதைகள் பெரும்பாலும் வான்மீகத்தை ஒட்டிச் செல்வன. ஒரு பெண்ணைக் கடத்திச் செல்லுதல் – அதன் பொருட்டுப் பெரும் போர் விளைதல் என்பதை மையமாக வைத்து இலியதத்தோடு இராம காதையைத் தொடர்புபடுத்துதல் வலுவற்ற கோட்பாடு. ஏனெனில் இத்தகைய நிகழ்ச்சிகள் உலகின் பல்வேறு பண்பாடுகளில் காணப்படும் பொதுவான மானுடச் சமுதாயக் கூறுகள். எனவே வெபரின் கருத்தைப் பல மேனாட்டு அறிஞர்களும் இந்திய அறிஞர்களும் முன்னரே மறுத்துள்ளனர்.

டாக்டர் வெபரைப் போலவே, டாக்டர் யாகோபியும் வேறு இரு மூலங்களை இராம காதைக்குரிய அடிப்படைகளாகக் கூறுகிறார். அவர் கருத்தின்படி இராம காதை இரு வேறு கூறுகளால் இணைக்கப்பட்ட ஒரு நெடுங்கதை. முதற்கூறு, அயோத்தியில் நடைபெற்ற நிகழ்ச்சிகளின் அடிப்படையில்

---

2. a. Albrecht Weber, Uber das Ramayana, Berline 1870, Pp.1-88.
   b. Hermann jacobi, Das Ramayana, Bonn 1893.
   c. Dinesh Chandra Sen, The Bengali Ramayana, Calcutta, 1920.

அமைவது. இரண்டாவது கூறு, தண்டகாரணியத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளையும் இராவண வதத்தையும் பற்றி அமைவது. இந்த இரு கூறுகளுள் அயோத்தி நிகழ்ச்சிகள் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டவை என்றும், இரண்டாவது கூறின் மூலங்கள் வேதங்களில் காணப்படுவன என்றும் யாகோபி கருதுகிறார். இக் கருத்தை இக்கால அறிஞர்களுள் பலர் ஏற்றுக் கொள்கின்றனர்.

வேத காலத்தில் இராமாயணக் கதையோ, இராமன் தொடர்பான கதைகளோ வழக்கில் இல்லை என்னும் கருத்தை யாகோபி மறுக்கவில்லை. எனினும் வேதகாலக் கடவுளர்களோடு இராமாயண பாத்திரங்களைத் தொடர்பு படுத்திக் கூறும் தம் கோட்பாட்டை விட்டுவிடவும் அவர் விரும்பவில்லை. எவ்வாறாயினும் டாக்டர் யாகோபியின் கோட்பாடு ஏற்றுக் கொள்ளத் தக்கதாக இல்லை என்னும் காமில் புல்கேயின் கருத்து (103-106) பொருத்தமாகத் தோன்றுகிறது.

வால்மீகி முனிவரால் இயற்றப்பெற்ற இராமகாதையின் மூலம் ஆதிராமாயணம் என்றும், இன்றுள்ள இராம காதையின் வடிவம் வான்மீகம் என்றும் பெரும்பாலான இராமாயண அறிஞர்கள் கருதுகின்றனர்; ஆதிராமாயணம், அயோத்தியா காண்டம் முதல் யுத்த காண்டம் முடிய ஐந்து காண்டங்களாக இருந்தது என்றும், அது ஏறக்குறைய கி.மு. நான்கு அல்லது மூன்றாம் நூற்றாண்டளவில் தோன்றியிருக்கலாம் என்றும் கருதுகின்றனர்.

இன்று வழக்கில் உள்ள வால்மீகி இராமாயணம், சில இடைச் செருகல்களும் பிற்சேர்க்கைகளும் நீங்கலாக, பால காண்டம் முதல் உத்தர காண்டம் முடிய ஏழு காண்டங்களை உடையதாகக் கி.பி. 2ஆம் அல்லது 3 ஆம் நூற்றாண்டளவில் நிலைபெற்று விட்டது எனப் பெரும்பாலான அறிஞர்கள் கருதுகின்றனர் (புல்கே 30-32). இதற்குப் பின்னர்ப் பல்வேறு கிளைக் கதைகளும், வருணனைகளும், தத்துவார்த்தக்

கருத்துகளும் இடைச் செருகல்களாகக் காலந்தோறும் ஏறக்குறைய கி.பி.10ஆம் நூற்றாண்டு வரை சேர்க்கப் பெற்று வந்தன என்பதை வால்மீகி இராமாயணத்தின் திறனாய்வுப் பதிப்பை வெளியிட்டுள்ள அறிஞர்கள் பலரும் எடுத்துக்காட்டியுள்ளனர்.

பதிப்பு

1951-1971 வால்மீகி ராமாயணம், திறனாய்வுப் பதிப்பு (வடபுல வழக்கு), பரோடா பல்கலைக் கழகம் கிழைக்கலை ஆய்வு நிறுவனம்

1995 வால்மீகி ராமாயணம் (தென்புல வழக்கு) கோரக்பூர்: கிதா பிரஸ், நான்காம் பதிப்பு

1998 வால்மீகி ராமாயணம் (தென்புல வழக்கு) தர்மாலயா மறுபதிப்பு: கோவை-108: ஆர்ஷவித்யாஆசிரமம், ஆனை கட்டி.

2. வான்மீகமும் அதன் புலவழக்குகளும்

இராம காதை பற்றிய கதைகள் இந்தியாவின் வடக்கு, மேற்கு, தெற்கு ஆகிய பல பிரதேசங்களிலும் வாய்மொழிக் கதைகளாக வழங்கிவந்தன எனவும், பின்னர்ச் சிறுகச் சிறுக எழுத்து வடிவம் பெற்று வழங்கிவந்தன எனவும், பல நூற்றாண்டுகள் கழிந்த பின்னர் இலக்கிய வடிவமாக நிலைபெறலாயின எனவும், அந்நிலையில் இராம காதை முதன் முதலாக வடமொழியில் வால்மீகியால் இதிகாச வடிவம் பெற்றது எனவும் அறிஞர்கள் கருதுகின்றனர்.

வால்மீகியின் காப்பியமும் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் முதலில் பாணர்கள் வழியாகவும் இலக்கிய அறிஞர்கள் வழியாகவும் வாய்மொழியாகக் கேட்கப்பெற்று வந்தது எனவும், பின்னர் அந்தந்தப் பிரதேச மொழி எழுத்துகளில் பெயர்த்தெழுதப் பெற்று (transliterated) வழங்கி வந்தது எனவும் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

இவ்வாறு பல்வேறு மாநில மொழிகளில் கேட்கப்பட்டும் கற்கப்பட்டும் கற்பிக்கப்பட்டும் வந்த நிலையில் இராம காதையின் நிகழ்ச்சிகள், கதை நிகழ் இடங்கள், பாத்திரங்கள் போன்றவற்றில் பல்வேறு மாற்றங்களும், புதிய சேர்க்கைகளும் இடம்பெறலாயின. ஏதேனும் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியைப் பற்றிக் கூறினால், எந்தப் பிரதேச வால்மீகி இவ்வாறு கூறுகிறார் எனக் கேட்குமளவுக்குப் பாட வேறுபாடுகளும் கதை வேறுபாடுகளும் மிகலாயின.

இத்தகைய மாற்றங்கள், சேர்க்கைகள், திரிபுகள் ஆகியவற்றின் அடிப்படையில் வால்மீகி ராமாயண ஏடுகளை வடபுல ஏடுகள், வடமேற்கு ஏடுகள், கீழைப்புல ஏடுகள், தென்புல ஏடுகள் எனப் பாகுபடுத்தி இராமாயண அறிஞர்கள் ஆராயலாயினர். கி.பி.19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இப்பல்வேறு புல வழக்குகள் அச்சேறி நூல் வடிவம் பெற்ற நிலையில் இவற்றின்

வேறுபாடுகளை ஆராய்ந்தறிவது அறிஞர்கட்கு எளிதாய் இயல்வதாயிற்று.

இந்தியாவின் தலையாய இதிகாசமாகிய வால்மீகி இராமாயணம் இவ்வாறு பல வழக்குகளை உடையதாக இருக்கும் நிலையில் இதற்கொரு திறனாய்வுப் பதிப்பு தயாரிக்க வேண்டும் என்று கருதிய அறிஞர்கள் பலரின் முயற்சியின் விளைவாகப் பரோடா பல்கலைக் கழகத்தில் உள்ள கீழைக்கலை ஆய்வு நிறுவனம் கி.பி.1951 ஆம் ஆண்டில் பேராசிரியர் ஜி.எச்.பட் (G.H.Bhatt) அவர்களை முதல் பொறுப்பாசிரியராகக் கொண்டு இப்பணியைத் தொடங்கியது; நாடெங்கிலும் இருந்த நூலகங்களையும், வெளிநாடுகளில் இருந்த இந்தியவியல் தொடர்பான நூலகங்களையும் அணுகிச் சுமார் 2500 இராமாயணச் சுவடிகளைத் திரட்டி, அவற்றுள் 86 ஏடுகளைத் தேர்வு செய்த்து. அவற்றுள்ளும் முழு ஏடுகளாகத் தேவநாகரி, சாரதா, தெலுகு, கிரந்தம், மலையாளம் மற்றும் நேவாரி ஆகிய எழுத்துகளில் பெயர்த்து எழுதப்பட்டவற்றை அடிப்படையாகக் கொண்டு திறானாய்வுப் பதிப்புப் பணி தொடங்கியது.

இப்பதிப்புப் பணியில் பாலகாண்டத்திற்கு 37 ஏடுகளும், அயோத்தியா, ஆரணியில், சுந்தர காண்டங்களுக்குத் தலா 29 ஏடுகளும் கிஷ்கிந்தா காண்டத்திற்கு 32 ஏடுகளும், யுத்த காண்டத்திற்கு 34 ஏடுகளும், உத்தர காண்டத்திற்கு 41 ஏடுகளும் ஒப்புநோக்கி ஆராயப்பெற்றன.

கி.பி.1020இல் நேபாள மொழியின் நேவாரி எழுத்தில் பெயர்த்து எழுதப்பட்ட வால்மீகி ஏடுதான் இதுவரை கிடைத்தவற்றுள் மிகப் பழமையான ஏடு. காட்மண்டில் உள்ள பீர் நூலகத்தில் (Bir Library) பாதுகாக்கப் பெற்று வந்த இந்த ஏடு வான்மீகத்தின் வடபுல வழக்கிற்கு உரியது.

இவ்வாறு பல்வேறு வான்மீக ஏடுகளை அறிஞர்கள் ஆராய்ந்த நிலையில், சில அடிப்படைகளில் மூல வான்மீகத்திலிருந்து வேறுபட்டு வழங்கும் பல ஏடுகளைக்

கண்டறிந்தனர். அவற்றைப் பாகுபடுத்தி ஆராய்ந்ததில் வடமேற்கு, வடக்கு, கிழக்கு, தெற்குப் பகுதிகளுக்கே உரிய மாற்றங்களும் சேர்க்கைகளும் புகுந்திருப்பதைக் கண்டு, அவற்றின் அடிப்படையில், வடபுல வழக்கு, வடமேற்கு வழக்கு, கீழைப்புல வழக்கு, தென்புல வழக்கு என நான்கு வழக்குகளை இனங் கண்டனர். எல்லா வழக்குகளிலும் பொதுவாகக் காணப்படும் பாடப் பகுதிகள் வடபுல வழக்காகக் கொள்ளப் பெற்றன. சிற்சில வேறுபாடுகள் தவிரப் பெரும்பாலும் ஒத்திருப்பதன் அடிப்படையில் வடமேற்கு வழக்கு, வடபுல வழக்கோடும், கீழைப்புல வழக்கு, தென்புல வழக்கோடும் சேர்க்கப்பெற்று, முடிவாக வடபுல வழக்கு (Northern Recension), தென்புல வழக்கு (Sourthern Recension) என இருவகைப் பாடங்களாக வகுத்துக் கொண்டுஆய்வு செய்யப்பெற்றன. கீழைப்புல வழக்குகளில் சில, வடமேற்கு மற்றும் வடபுல வழக்குகளோடும் ஒத்திருக்கக் கண்ட அறிஞர்கள் அவற்றை வடபுல வழக்கோடும் இணைத்து ஆராய்ந்துள்ளனர்.

இந்தத் திறனாய்வுப் பதிப்பில், வடபுல வழக்கைப் பாடமாகத் தந்து, அதனின்று வேறுபடும் பாடங்களையெல்லாம் அடிக்குறிப்பில் விளக்கமாகத் தந்துள்ளனர். இப்பதிப்பினை ஆய்வு செய்து வெளியிட்ட அறிஞர்களின் பட்டியல் கீழ்வருமாறு:

பாலகாண்டம்	- G.H.பட்	*- 1962*
அயோத்தியா காண்டம்	- P.L. வைத்தியா	*- 1962*
ஆரணிய காண்டம்	- J.C. திவான்ஜி	*- 1963*
கிட்கிந்தா காண்டம்	- D.R.மஸ்கட்	*- 1965*
சுந்தர காண்டம்	- G.C. ஜலா	*- 1966*
யுத்த காண்டம்	- P.L. வைத்தியா	*- 1971*
உத்தர காண்டம்	- U.P.ஷா	*- 1975*

வடமேற்கு, வடகிழக்கு (கிழைப்புலம்), மற்றும் வடபுல வழக்குகளில் மட்டும் காணப்பெறும் செய்திகளில் முக்கியமானவை:

1. தசரதனின் மகள் சாந்தா என்னும் பாத்திரத்தைப் பற்றிய விளக்கம் (பாலகாண்டம்)

2. பரதனும் சத்ருக்கனனும் இராஜகிருகம் சென்று தங்கியிருந்ததை இரண்டு சருக்கங்களில் விளக்குதல் (கிழைப் புல வழக்கு-பாலகாண்டம், வடமேற்கு வழக்கு – அயோத்தியா காண்டம்) தென்புல வழக்கில் இவர்கள் இருவரும் சென்றதாக வெறும் குறிப்பு மட்டும் காணப்படுகிறது. (பாலகாண்டம்)

3. ஒரு பிராமணன் கைகேயிக்குச் சாபமிடுதல் (அயோத்தியா காண்டம்)

4. சீதை சனகனுக்கும் மேனகாவுக்கும் பிறந்தவள் (ஆரணிய காண்டம்)

5. தாரை இராமனைச் சபித்தல் (கிஷ்கிந்தா காண்டம்)

6. ''தேவர்கள், திருமால் மேற்கொள்ளும் ஓர் அவதாரத்தின் மூலம் இராவணனை வதம் செய்யத் திட்டம் தீட்டி இருப்பதாக தசரதன் என்னிடம் கூறினான்'' எனக் கும்பகருணன் இராவணனிடம் கூறுதல் (யுத்த காண்டம்).

வடமேற்கு வழக்கில் மட்டும் காணப்பெறும் செய்திகள்

1. கைகேயி ஒரு அந்தணரிடம் போர்க் கலையைக் கற்றுக் கொள்கிறாள். அந்தக் கலை கைவரப் பெற்றதால் போர்க் களத்தில் தன் கணவனைக் காப்பாற்றுகிறாள். (அயோத்தியா காண்டம்)

2. நாக பாசத்தில் இலக்குவன் கட்டுண்டு நிற்கும்போது நாரதன் வந்து இராமனுக்கு அவன் நாராயணனின் அவதாரம் என்பதை நினைவூட்டுகிறான். (யுத்த காண்டம்)

1135

3. இராவணன் ஒரு ஹோமம் செய்து வருவதாகவும், அந்த யாகம் நிறைவுற்றால் அவனை யாரும் வெல்ல முடியாதென்றும் வீடணனின் மூலமாக அறிந்த வானரசேனை, அவன் யாகத்தைக் கலைக்க முயன்று தோல்வியுற்றது. இறுதியாக, அங்கதன் மண்டோதரியின் கூந்தலைப் பிடித்து இழுத்துக் கொண்டு இராவணனிடம் வருகிறான். அதைக் கண்டதும் இராவணன் வெகுண்டெழுந்து அங்கதனைத் தாக்குகிறான். இவ்வாறு இராவணனின் யாகம் நிறைவுறாமல் நின்றுவிடுகிறது. (யுத்த காண்டம்)

தென்புல வழக்கு வான்மீகத்தில் மட்டும் உள்ளவை

பிற்சேர்க்கையாகக் கருதப்படுவன

பாலகாண்டம்

1. இராமன் முதலான நால்வரின் பிறப்பின்போது இருந்த கிரக நிலைகள் சுட்டப்பெறுகின்றன. (SR I:18:8&11)
2. பாலகாண்டத்தில் இடம்பெற்றுள்ள பல புராணக் கதைகள்:

(அ) திருமால் கஷ்யப முனிவரின் விருப்பப்படி அவருடைய மகன் திருவிக்கிரமனாக அவதாரம் செய்தல். (SR 1:29:10&17)

(ஆ) ஜன்ஹு முனிவர் கங்கையைக் குடித்தல் (SR 1.43:34&41)

(இ) பாற்கடல் கடைந்தபோது திருமால் மோகினி வடிவம் கொண்டு அமுதத்தைக் கவர்ந்து சென்றது.

(ஈ) திருமாலின் கூர்ம அவதார வருணனை (SR 1.45:27&32)

(உ) சகரனின் பிறப்பு – இக்குவாகு – ரகுவம்ச முதல்வன் (SR 1.70:28&37)

அயோத்தியா காண்டம்

1. கைகேயியின் தாயார் அவளுடைய தந்தையாரால் கைவிடப்பட்ட கதை. (SR 2:35)
2. யமுனையாற்றைக் கடந்து செல்ல உதவுமாறு சீதை யமுனையை வேண்டுதல். (SR 2:55:13&21)
3. இராமன், சீதை, இலக்குவன் மூவரும் சித்திர கூடத்தில் வால்மீகியைச் சந்தித்தல்.(SR 2:56:16&17)

ஆரணிய காண்டம்

1. ஜனஸ்தானத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றி அகம்பன் இராவணனிடம் கூறுதலும் – இராவணன் மாரீசனிடம் செல்லுதலும் (SR 3:31)
2. அயோமுகி என்னும் அரக்கியின் வரலாறு (SR 3:69:11&18)

கிஷ்கிந்தா காண்டம்

கடும் சீற்றத்தோடு வந்த இலக்குவனைச் சமாதானப் படுத்துவதற்காகச் சுக்ரீவன் தாரையை இலக்குவனிடம் அனுப்புதல் (SR 4:33:25&61)

(இதில் தாரை தன்னைச் சுக்ரீவனின் மனைவியென்று கூறுகிறாள் *(4.33:58)* யுத்த காண்டத்தில் சுக்ரீவன் தாரையைத் தன் காதலியாகக் கூறுகிறான். *(6:126:30)*

சுந்தர காண்டம்

அனுமன் இலங்கைக் காவல் தெய்வத்துடன் போரிடுதல் (SR 5:3:20&50)

யுத்த காண்டம்

1. சுக்ரீவன் இராவணனுடன் பொருதல் (SR 6:40&41). தர்மாலயாவில் 40ஆவது சருக்கம் மட்டும் இதைக் கூறுகிறது.

2. ஆதித்ய இருதயத்தைப் பாராயணம் செய்யுமாறு இராமனுக்கு அகத்தியர் அறிவுரை கூறுதல் (SR 6:105) (தர்மாலயாவில் 107 ஆவது சருக்கம்)

3. தாரையையும் பிற வானர மனைவியரையும் அயோத்திக்கு அழைத்து வருமாறு சீதை இராமனை வேண்டுதல் (SR 6:123:23&38) (தர்மாலயாவில் 126 ஆவது சருக்கத்தில் இச்செய்தி கூறப்படுகிறது – 25; 26 சுலோகம்)

சுலோக வேறுபாடுகள்

பாலகாண்ட சுலோக வேறுபாடுகள்:

பாலகாண்டத்தின் முதல் நான்கு சருக்கங்கள் நூலின் பதிகம் அல்லது பாயிரம் போன்று அமைந்துள்ளன. அவை வால்மீகி, நாரதரைக் கண்டு இராமன் வரலாறு அறிதல்; பிரமதேவர் வால்மீகியின் இராமாயண முயற்சியை ஆசிர்வதித்தல்; வால்மீகி நிட்டையில் அமர்ந்து இராமாயண வரலாறு முழுவதையும் ஞானக் கண்ணால் கண்டு உணர்ந்து காவியத்தை இயற்றி முடித்தல்; குச, லவர்கள் இருவரும் அக்காவியத்தை இனிமையாகப் பாடுவதைக் கேட்டு

இராமபிரான் அவர்களைத் தம் அவைக்கு அழைத்து அக்காவியத்தைப் பாடுமாறு வேண்ட அவ்விருவரும் பாடத் தொடங்குதல் ஆகிய செய்திகளைத் தருகின்றன.

பாலகாண்டமே பிற்சேர்க்கை என்னும் ஒரு கருத்து ஒருபுறம் இருக்க, இன்றுள்ள பாலகாண்டத்தின் மேற்சுட்டிய நான்கு சருக்கங்களும் மிகப் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டன என்பதில் ஐயமில்லை.

பாலகாண்ட மொத்த சுலோகங்கள்

			சருக்கம்	சுலோகங்கள்	மிகை
வடபுல வழக்கு	- திறனாய்வுப் பதிப்பு	:	76	2001	-
தென்புல வழக்கு	- கோரக்பூர் பதிப்பு	:	77	2269	268
தென்புல வழக்கு	- தர்மாலயா பதிப்பு	:	77	2355	354

வடபுல வழக்கு வான்மீகத்தைவிட தென்புல வழக்கு கோரக்பூர் பதிப்பில் 268 சுலோகங்களும், தென்புல வழக்கு தர்மாலயா பதிப்பில் 354 சுலோகங்களும் மிகையாகக் காணப்பெறுகின்றன.

அயோத்தியா காண்ட சுலோக வேறுபாடுகள்

வடபுல, வடமேற்கு மற்றும் கிழைப்புல வான்மீகப் பாடங்களுக்கும் தென்புல வழக்கு வான்மீகப் பாடத்திற்கும் இடையில் சில வேறுபாடுகள் காணப்பெறுகின்றன.

''உன் தாய் தன் கணவன் இறப்பதையும் பொருட் படுத்தாமல், தான் வேண்டிய இரகசியத்தை அறிவதிலேயே பிடிவாதமாய் இருந்தாள். நீயும் தாயைப் போலவே தசரதன் மரணத்திற்கு வருந்தாமல் இருக்கிறாய்'' எனச் சுமந்திரன் கடிந்துரைக்கும் செய்தியும் (சருக்கம் 35), இராம இலக்குவர்கள் சீதையுடன் வால்மீகி ஆசிரமம் சென்று அவரை வணங்கி ஆசி பெறும் செய்தியும் தென்புல வான்மீகத்தில் மட்டும் கூறப்படுகின்றன(சருக்கம் 56:16-17).

இவ்வாறு இராமன் முதலானோர் பிறந்தபோது இருந்த கிரக நிலைகளையும் தென்புல வழக்கு வான்மீகம் மட்டுமே கூறுகிறது. தசரதன் பிறந்தபோது இருந்த கிரக நிலைகளின் அடிப்படையில் கணிக்கப்பட்ட அவனுடைய ஜாதகத்தில் அவனது இறுதிக்காலம் குறிக்கப் பட்டதாகவும் (NR. 11.26:6&9; SR 11.29:8&11) இருவகை வான்மீகங்களும் கூறுகின்றன. ஆனால் இராமன் பிறந்தபோது இருந்த கிரக நிலைகள் வடபுல வழக்கில் சுட்டப்பெறவில்லை.

காப்பியத் தலைமகனுக்கு ஜாதகம் கணிக்காத ஒரு பண்பாட்டில், அவனது தந்தைக்கும் மனைவிக்கும் ஜாதகங்கள் கணிக்கப் பெற்றதாகக் குறிக்கப்படுவதன் காரணம் விளங்கவில்லை. நாடு முழுவதும் கொண்டாடப்பெறும் இராம நவமி விழாவிற்கு அடிப்படையான கிரகநிலைகள் தென்புல வழக்கில் காணப்படும்போது அவை வடபுல வழக்கில் ஏன் சுட்டப்பெறவில்லை என்பது புரியாத புதிராக உள்ளது.

அயோத்தியா காண்ட மொத்த சுலோகங்கள்

			சருக்கம்	சுலோகங்கள்	மிகை
வடபுல வழக்கு	- திறனாய்வுப் பதிப்பு	:	111	3160	-
தென்புல வழக்கு	- கோரக்பூர் பதிப்பு	:	119	4294	1134
தென்புல வழக்கு	- தர்மாலயா பதிப்பு	:	119	4357	1197

அயோத்தியா காண்டம் வடபுல வழக்கைவிட தென்புலவழக்கு கோரக்பூர் பதிப்பில் 1134 சுலோகங்களும் தென்புல வழக்கு தர்மாலயா பதிப்பில் 1197 சுலோகங்களும் மிகையாகக் காணப்பெறுகின்றன.

ஆரணிய காண்ட சுலோக வேறுபாடுகள்

வடபுல, வடமேற்கு மற்றும் கிழைப்புல வான்மீகப் பாடங்களுக்கும் தென்புல வழக்கு வான்மீகப் பாடத்திற்கும் இடையில் கீழ்வரும் வேறுபாடுகள் காணப்பெறுகின்றன:

இராவணனின் ஒற்றர்களுள் ஒருவனாகிய அகம்பன் ஜனஸ்தானத்தில் நடந்த கர தூடணர் வதையை இராவணனுக்குக் கூறிச் சீதையைக் கவர்ந்துவந்து இராமனைப் பழிவாங்குமாறு கூறுகிறான். அதன்படி. இராவணன் மாரீசனிடம் சென்று சீதையைக் கவர்ந்து வருவதற்கு அவனது உதவியை நாடுகிறான். இராமனின் தெய்வீக வல்லமையை இராவணனுக்கு விளக்கமாகக் கூறி மாரீசன் அவனைத் திரும்ப இலங்கைக்கு அனுப்பி வைக்கிறான். தென்புல வழக்கு

வான்மீகத்தின் 31 ஆவது சருக்கம் இச்செய்தியைக் கூறுகிறது. ஆனால் வான்மீகத்தின் வடபுல, வடமேற்கு மற்றும் கிழைப்புல வழக்குகளில் இச் செய்தி காணப்பெறவில்லை. சூர்ப்பணகைதான் கர, தூடணர் வதையை முதலில் இராவணனுக்குக் கூறுவதாக இந்த மூன்றும் கூறுகின்றன. பிற இந்திய இராமாயணங்களிலும், இராமாயணககவின் முதலான தென்கிழக்காசிய இராமாயணங்களிலும் அகம்பன் ஒற்றுரைக்கும் செய்தி காணப்பெறவில்லை. எனவே தென்புல வழக்கின் 31ஆம் சருக்கம் முழுவதும் (50சுலோகங்கள்) பிற்சேர்க்கையாக இருத்தல் வேண்டும் என அறிஞர்கள் கருதுகின்றனர் (புல்கே 413).

சீதையின் பிரிவால் பெரிதும் வருத்தமுற்ற இராமன் இயற்கைப் பொருள்களை விளித்துப் புலம்பும் செய்திகள் தென்புல வழக்கு வான்மீகத்தின் 62, 63ஆம் சருக்கங்களிற் கூறப்படுகின்றன. மேலும் 60 ஆம் சருக்கத்தில் கூறப்படும் செய்திகளில் பல மீண்டும் இவ்விரு சருக்கங்களிலும் காணப்படுகின்றன. இவையெல்லாம் வடபுல, வடமேற்கு மற்றும் கிழைப்புல வான்மீகங்களில் காணப்படவில்லை.

மேலும், தென்புல வழக்கின் 69ஆம் சருக்கத்தின் 11 முதல் 18 வரையிலான சுலோகங்களிற் கூறப்படும் அயோமுகி என்னும் அரக்கியின் மானபங்க வரலாறு பிற புல வழக்கு வான்மீகங்களில் கூறப்பெறவில்லை.

ஆரண்ய காண்ட மொத்த சுலோகங்கள்

				சருக்கம்	சுலோகங்கள்	மிகை
வடபுல வழக்கு	-	திறனாய்வுப் பதிப்பு	:	71	2059	-
தென்புல வழக்கு	-	கோரக்பூர் பதிப்பு	:	75	2473	414
தென்புல வழக்கு	-	தர்மாலயா பதிப்பு	:	75	2540	481

ஆரண்ய காண்டம் வடபுல வழக்கைவிட தென்புல வழக்கு கோரக்பூர் பதிப்பில் 414 சுலோகங்களும் தென்புல

வழக்கு தர்மாலயா பதிப்பில் 481 சுலோகங்களும் மிகையாகக் காணப்பெறுகின்றன.

கிட்கிந்தா, சுந்தர, யுத்த காண்டங்களின் சுலோக வேறுபாடுகள்

	வடபுலவழக்கு (திறனாய்வுப் பதிப்பு)	தென்புல வழக்கு (கோரக்பூர் பதிப்பு)	தென்புல வழக்கு (தர்மாலயா பதிப்பு)	மிகை
கிட்கிந்தா காண்டம்	1980	2462	2539	482/559
சுந்தர காண்டம்	2486	2865	2885	379/399
யுத்த காண்டம்	4435	5676	6049	1241/1614

கிட்கிந்தா காண்டம் வடபுல வழக்கைவிட தென்புலவழக்கு கோரக்பூர் பதிப்பில் 482 சுலோகங்களும் தென்புல வழக்கு தர்மாலயா பதிப்பில் 559 சுலோகங்களும் மிகையாகக் காணப்பெறுகின்றன.

சுந்தர காண்டம் வடபுல வழக்கைவிட தென்புலவழக்கு கோரக்பூர் பதிப்பில் 379 சுலோகங்களும் தென்புல வழக்கு தர்மாலயா பதிப்பில் 399 சுலோகங்களும் மிகையாகக் காணப்பெறுகின்றன.

யுத்த காண்டம் வடபுல வழக்கைவிட தென்புலவழக்கு கோரக்பூர் பதிப்பில் 1241 சுலோகங்களும் தென்புல வழக்கு தர்மாலயா பதிப்பில் 1614 சுலோகங்களும் மிகையாகக் காணப்பெறுகின்றன.

வான்மீகத்தின் வடபுல வழக்கின் மொத்த சுலோகங்கள் – 16,121
கோரக்பூர் தென்புல வழக்கின் மொத்த சுலோகங்கள் - 20,039
தர்மாலயா தென்புல வழக்கின் மொத்த சுலோகங்கள் - 20,725

மகாபாரதம்

வியாசரின் படைப்பாகக் கருதப்படுகிற பாரதக் காப்பியம் வால்மீகியின் இராமாயணத்திற்குப் பின்னர்

இயற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது. இன்று வழக்கில் உள்ள பாரதத்தில் இராம காதைச் செய்திகள் காணப்படுவதும், வால்மீகி ராமாயணத்தில் பாரதச் செய்திகள் காணப்படாமையும், வால்மீகி முனிவர் ஆதிகவி எனக் கூறப்படுவதும் இக்கருத்துக்கு அரண் செய்கின்றன.

சாங்காயனம் முதலான சூத்திரங்களிலும் பாணினியத்திலும் பாரதக் கதை பற்றிய செய்திகள் குறிப்பிடப்படுகின்றன; ஆனால் இராமாயணம் குறித்த செய்திகள் குறிப்பிடப் படவில்லை. பாரதக் காப்பியம் பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் எல்லாம் பாரதக் கதை வால்மீகியின் காலத்திற்கு முன்னரேயே தோன்றிவிட்டது என்றும், கால அடைவில் பல்வேறு செய்திகள் இடைப்பிறவரலாகச் சேர்க்கப்பெற்றுக் கிறித்து சகாப்தத்தின் தொடக்க நூற்றாண்டுகளில் மகாபாரதமாகப் பெருகிவிட்டது என்றும், இவ்விரண்டு காலகட்டத்திற்கும் இடையில் வால்மீகி இராமாயணம் தோன்றியது என்றும் கருதுகின்றனர். மேலும், பாரதம் இந்தியாவின் மேற்குப் பகுதியிலும், இராமாயணம் கிழக்குப் பகுதிகளிலும் தனித்தனியே தோன்றி வழங்கி வந்தன எனவும், பிற்காலத்தே இவையிரண்டும் ஒன்றோடொன்று தொடர்பு கொள்ளப்பெற்ற நிலையில் பாரதம் மகாபாரதமாக வளர்ந்துவிட்டது எனவும் அறிஞர்கள் கருதுகின்றனர்.

வியாசரின் மூல பாரதம் (Text) 24,000 சுலோகங்களை உடையதாக இருந்தது (தேஷ் பாண்டே, 7) புனேயிலுள்ள பண்டார்கர் ஆராய்ச்சி நிறுவனம் பல்வேறு (ஐரோப்பிய, அமெரிக்க, இந்திய அறிஞர்கள்) அறிஞர்களைக் கொண்டு 1918 முதல் 1966 வரையிலான சுமார் அரை நூற்றாண்டுக் கடும் உழைப்பிற்குப் பின்னர் மகாபாரதத்திற்கு ஒரு திறனாய்வுப் பதிப்பை வெளியிட்டுள்ளனர் (தேஷ் பாண்டே II). அதன்படி, திறனாய்வுப் பாடத்தில் 73,900 சுலோகங்களும், வடபுல வழக்கில் (Northern Recension) 82,136 சுலோகங்களும் தென்புல வழக்கில் (SR) 95,585 சுலோகங்களும் உள்ளன. (தேஷ்

பாண்டே,3) இவ் விவரங்கள், பாரதம் இரண்டு அல்லது மூன்று காலகட்ட வளர்ச்சியைப் பெற்றுத் தற்போதைய நிலையை அடைந்துள்ளது என்னும் மேலே சுட்டிய அறிஞர்களின் கருத்துக்கு அரண் செய்யக் காண்கிறோம்.

அதாவது, மூல பாரதம் மகாபாரதமாக மலர்ந்த நிலையில் இராமாயணச் செய்திகள், பாரதக் காப்பியத்தில் இடம் பெறலாயின என அறிகிறோம்.

இராமாயணச் செய்திகள் மகாபாரதத்தில் கீழ்க்காணும் இடங்களில் கூறப்பட்டுள்ளன: (விவரங்கள் திறனாய்வுப் பதிப்பின்படி தரப்படுகின்றன).

1. ஆரணிய பருவம் (III. 147:28&38)
2. துரோண பருவம் (VII.59:1&31)
3. சாந்தி பருவம் (XII.22:51&62)
4. ஆரணிய பருவம் (III.252&275)

திறாளய்வுப் பதிப்பின்படி இராமாயணச் செய்திகள் (ராமோபாக்கியானம்) 704 சுலோகங்களில் கூறப்படுகின்றன என்றும் இதில் 200 சுலோகங்கள் போர் வருணனைகளாக உள்ளன என்றும் அறிகிறோம்.

இராமாயணச் செய்திகளைக் கூறுமிடத்து, மகாபாரதம் பல இடங்களில் வால்மீகத்திலிருந்து வேறுபடுகின்றது. காட்டாகச் சிலவற்றைக் கீழ்வருமாறு குறிக்கலாம்.

1. தசரதன் மக்கட்பேறு வேண்டி யாகம் செய்ததாகவோ, யாகத்தில் பெற்ற பாயசத்தை மனைவியர்க்கு வழங்கியதாகவோ பாரதத்தில் குறிப்பில்லை.
2. சீதை தெய்வீகப் பிறப்பு (அயோனிஜா) என்னும் குறிப்பு எங்கும் காணப்பெறவில்லை.
3. கைகேயி ஒரு வரம் பெற்றதாக மட்டுமே கூறப்படுகிறது.
4. மந்தரை, துந்துபி என்னும் கந்தர்வப் பெண்ணின் அவதாரமாகக் கூறப்படுகிறாள்.

5. வாலியும் சுக்ரீவனும் ஒரே ஒரு முறைதான் போரிட்டதாகக் குறிக்கப்படுகிறது.

6. இராவணனின் திருவோலக்க வருணனை, லங்கா தகனம், அனுமன் மருத்துமலை கொணர்தல், சீதையின் அக்னி பரீட்சை போன்றன கூறப்படவில்லை.

7. போரில் கும்பகருணனை இலக்குவன் கொல்கிறான்.

இத்தகைய வேறுபாடுகள் காரணமாக, மகாபாரதம் வான்மீகம் அல்லாத மற்றொரு இராமகாதையின் அடிப் படையில் இராமாயணச் செய்திகளைக் கூறுகிறது என்று ஹாப்கின்ஸ், லட்விக் போன்ற அறிஞர்கள் கூறுகின்றனர். தற்போதுள்ள வான்மீகத்திற்குப் பல காலம் முன்பு வழக்கி லிருந்த முந்தைய வடிவத்தை அடிப்படையாகக்கொண்டு மகாபாரதத்தில் உள்ள இராமாயணக் குறிப்புகள் கூறப் பட்டுள்ளன என யாகோபி என்னும் அறிஞர் கருதுகின்றனர்.

இவர்களுள் யாகோபியின் கருத்தை ஆதரிக்கும் காமில் புல்கே, பாரதத்தில் வரும் சில இராமாயண நிகழ்ச்சிகளை வான்மீகத்தின் துணையில்லாமல் புரிந்து கொள்ள இயலாது என்று கூறுகிறார். சுமார் 86 இடங்களில், மகாபாரதச் சொற்களும் தொடர்களும் வான்மீகத்தில் உள்ளது போலவே காணப்படுவதாகத் திறனாய்வுப் பதிப்பு எடுத்துக் காட்டுவதாலும் இராமாயணம், வால்மீகி போன்ற சொற்களும் தொடர்களும் மகாபாரதத்தில் காணப்படுவதாலும் மகாபாரதத்தில் உள்ள ராமோபாக்கியானம் பெரும்பாலும் வான்மீகத்தை ஒட்டியே அமைந்துள்ளது எனக் கூறுவதில் தவறேதும் இல்லை என்றும் புல்கே கூறுகிறார். [3]

பதிப்பு

1918&1966. **The Mahabharatha: Critical Edition, Bhandarkar Oriental Research Institute, Pune.**

3. a. புல்கே 46-45.
b. C.R. Desh Pande, Transmission of the Mahabharatha Tradition, Simla: IIAS, Pp.3,7,11.

3. கம்பனுக்கு முன்னும் பின்னும் தமிழில் தோன்றிய இராமாயணங்கள்

முன்னர்

கம்பனுக்கு முன்னர்த் தோன்றிய இராமாயண நூல்களைப் பற்றிய விவரங்கள் தெரியவில்லை. இராமசரிதம் என ஆசிரியப்பாவில் யாக்கப்பெற்ற ஓர் இராமாயணம் இருந்ததாகத் தொல்காப்பிய உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டி யுள்ளனர் என்னும் கருத்து நிலவுகிறது. ஆயினும் அந்நூலைப் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டவில்லை. இராமாயண நிகழ்ச்சிகள் குறித்த குறிப்புகள் 'அகநானூறு', 'பரிபாடல்' போன்ற சங்க நூல்களிலும், 'மணிமேகலை' காப்பியத்திலும், பிற்காலப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களிலும் காணப்படுதலின் இராமாயணம் பற்றிய ஒரு நூலேனும் கம்பனுக்கு முன்னர்த் தோன்றியிருக்கலாம் என இந்நூலாசிரியரால் கருதப்படுகிறது.

பின்னர்

கம்பனுக்குப் பின்னர்த் தோன்றிய முழுமையான நூல்கள் வருமாறு:

1. தக்கை ராமாயணம்: எம்பெருமான் கவிராயர்; கொங்குநாடு, 16ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதி
2. இராம நாடகக் கீர்த்தனை: சீர்காழி அருணாசலக் கவிராயர்;16ஆம் நூற்றாண்டு
3. இராமாயண வெண்பா: வித்துவான் சுப்ரமணிய ஐயர்; 1930.
4. கோவிராமாயணம்: கோவி மணிசேகரன்; 2006.

4. தென்புல வழக்கு வான்மீகத்திற்குக் கம்பனின் நன்கொடை

(a) இராமன் முதலானோரின் பிறப்பு - கிரகநிலைகள்

மக்கட்பேறு வேண்டி இயற்றிய யாகம் முடிந்து பன்னிரு மாதங்கள் கடந்த பின்னர்த் தசரதனுக்கு இராமன் முதலான மக்கள் நால்வரும் பிறக்கின்றனர். வான்மீகத்தில் நால்வர் பிறப்பினைப் பற்றிய இருவகை நிலைகள் காணப் பெறுகின்றன. வடபுலவழக்கு வான்மீகத்தில் மக்கள் நால்வர் பிறந்தனர் என்னும் குறிப்பு மட்டும் காணப்பெறுகிறது. தென்புல வழக்குப் பதிப்புகளில் (கோரக்பூர், தர்மாலயா) நால்வரின் பிறப்பின்போது இருந்த கிரக நிலைகள் கீழ்வருமாறு கூறப்படுகின்றன:

> சித்திரைமாதம் வளர்பிறையில் நவமிதிதியில் புனர்வசு நட்சத்திரத்தில் ஐந்து கிரகங்கள் உச்சமாய் நிற்க கர்க்கடக லக்கினத்தில் இராமனாகிய மகனைக் கோசலை ஈன்றாள். (SR.I.18:9&10)
>
> பரதன், புஷ்ய நட்சத்திரத்தில் (பூசம்) மீன லக்னத்தில் பிறந்தான். (SR.I .18:15)
>
> சுமத்திரையின் இரண்டு புதல்வர்களும் ஆயில்ய நட்சத்திரத்தில் சூரியன் உச்சனாயிருக்க கர்க்கடக லக்கினத்தில் பிறந்தார்கள். (SR.I .18:15)

பரோடா பல்கலைக்கழகத் திறானாய்வுப் பதிப்பின் பாலகாண்டத்தைப் பதிப்பித்த பேராசிரியர் பட் (G.H.Bhatt) என்பவர் இப் பகுதிக்குரிய அடிக்குறிப்பில், இராமன் முதலானோரின் பிறப்பின்போது இருந்த கிரக நிலைகளைப் பற்றிய சுலோகங்கள் தென்புல வழக்கு ஏடுகளில் மட்டும் (G.I, G2, G3, MI, M2) காணப்படுகின்றன என்றும், வடபுல மற்றும் வடமேற்கு வழக்குகளில் காணப்பெறவில்லை என்றும் கூறுகிறார்.[4]

4. a. The Valmiki Ramayana: Critical edition, Vol.I, Balakanda, ed. G.H.Bhatt, 1959, (I.17:5)

மேற்சுட்டிய திறனாய்வுப்பதிப்பு வரிசையில் உத்தர காண்டத்தைப் பதிப்பித்த பேராசிரியர் U.P. ஷா என்னும் அறிஞர், இராமன் முதலானோரின் கிரக நிலைகள் பற்றிய விவரங்கள் தென்புல வழக்கு வான்மீக ஏடுகளில் மட்டுமே காணப்படுகின்றன என்றும், வடபுல வழக்கு வான்மீக ஏடுகளில் காணப்பெறவில்லை என்றும், இவை இடைச் செருகலாகத் தென்புலவழக்கு ஏடுகளில் பிற்காலத்தே தென்னகத்தாரால் செருகப்பட்டன என்றும் கருதுகிறார்.[5]

'ஐந்து கிரகங்கள் உச்சத்தில் இருக்கும்போது, வியாழனும் சந்திரனும் கூடியிருக்கையில் சூரியன் மேட ராசியில் இருக்கும்போது நவமி திதியில் கர்க்கடக லக்கினத்தில் புனர்வசு நட்சத்திரத்தில் ஓர் அதிசயப் பிறவி தோன்றியது' என்று போசராசனின் சம்பு ராமாயணம் இராமன் பிறந்திருந்த போதிருந்த கிரக நிலைகளைக் கூறுகிறது(1.29). இச் செய்தியைத் தென்புல வழக்கு வான்மீகத்தையொட்டிக் கூறுகிறது. பரதன் முதலான தம்பியர்கள் பிறந்தபோதிருந்த கிரகநிலைகளை இந்த ராமாயணம் கூறவில்லை என்பதும் சிந்திக்கத்தக்கது.[6]

இச் செய்தியைக் குறிப்பிட்டு விளக்கிய பின்னர் மறைத் திரு. காமில் புல்கே, ' இந்த விவரங்கள் பல, இந்திய மொழி ராமாயணங்களிலும் காணப்படுகின்றன என்று கூறி அத்யாத்ம ராமாயணம், ஆனந்த ராமாயணம், பத்மபுராணம், கிருத்திவாச ராமாயணம், பலராமதாஸ் ராமாயணம், ராமசரிதமானசம், பாவார்த்தராமாயணம் ஆகியவற்றை எடுத்துக் காட்டுகிறார். (ராமகதா, ப.332). எனினும் கம்பராமாயணம் தெலுகு, ரங்கநாத ராமாயணம், பாஸ்கர ராமாயணம் எழுத்தச்சனின் அத்யாத்ம ராமாயணம் என்பவற்றைப் புல்கே குறிப்பிடாமல் விட்டது ஏன் என்று விளங்கவில்லை.

---

5. "Thus the date of birth and the references to signs of Zodiacs at the time of birth of Rama found only in Southern versions is a Southern incertion". "Ramanayana Manuscripts of Different Versions", The Ramayana Tradition in Asia, P.102.

6. V.Raghavan, Ramanayana in classical Sanskrit and Prakrit Literature, Chennai: 2004, Pp. 109-110

சமஸ்கிருதம் தவிர்ந்த ஏனைய இந்திய மொழிகளில் ராம காதையை முதலில் படைத்துக் கூறுவது கம்பராமாயணம்தான். கி.பி. பத்தாம் நூற்றாண்டில் தோன்றிய கம்பராமாயணம்,

வேய்புனர் பூசமும் விண்ணுள் ளோர்களும்
தூயகற் கடகமும் எழுந்து துள்ளவே
திருவுறப் பயந்தனள் திறம்கொள் கோசலை (1.5;101-103)

பூசமும் மீனும் பொலிய நல்கினாள்
மாசறு கேகயன் மாது மைந்தனை. (104)

அலைபுகும் அரவினோடு அலவன் வாழ்வுற
இளையவற் பயந்தனள் இளைய மென்கொடி. (105)

மடங்கலும் மகமுமே வாழ்வின் ஒங்கிட
விடங்கிளர் விழியினாள் மீட்டும் ஈன்றனள். (106)

என இராமன், பரதன், இலக்குவன், சத்துருக்கனன் ஆகியோர் பிறந்தபோதிருந்த கிரக நிலைகளைக் கூறுகிறது. இதனால் இந்திய மாநில மொழிகளில் தோன்றிய இராமா யணங்களுள் தமிழில் தோன்றிய இராமாயணத்தில்தான் இச் செய்தி முதன்முதலாக க் கூறப்பட்டுள்ளதென அறிகிறோம்.

வான்மீகத்தின் பல்வேறு வழக்குகளை (recensions) ஆராய்ந்த மறைத் திரு காமில் புல்கே தென்புல வழக்கு வான்மீகத்தில் மட்டும் காணப்பெறும் கிரக நிலைகள் பற்றிய விவரங்கள் பெரும்பாலும் கி.பி. 5 அல்லது 6ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் இடைச்செருகலாகச் சேர்க்கப் பட்டிருக்கலாம் எனக் கருதுகிறார் (ராமகதா, ப.282).

பேராசிரியர் U.P.ஷா, மறைத்திரு புல்கே ஆகியோர் கூறும் ஆய்வுக் குறிப்புகளின்படி தென்புல வழக்கு வான்மீகத்தில் குறிப்பாக, கிரந்த ஏடுகளிலும் மலையாள ஏடுகளிலும் இச் செய்திகள் இடைச்செருகலாகச் சேர்க்கப்பெற்றன என்று அறிகிறோம். அவ்வாறாயின் இச் செய்திகளுக்குரிய ஆதாரம் எது என ஆராய நேர்கிறது. தற்போதைய தரவுகளின் அடிப்படையில் நோக்கினால் கம்பராமாயணம் தான் இச்செய்தியை முதலில் கூறுகிறது. கிரந்த எழுத்துகளின்

வழக்கு பிற்காலச் சோழர்களின் வழக்கில், சுமார் பத்தாம் நூற்றாண்டிற்குப் பின்னர்த் தமிழகத்தில் தோன்றிய மணிப் பிரவாள நடை காரணமாகப் பரவலான பயன்பாட்டிற்கு வந்தது என அறிகிறோம். எனவே, கம்பன் காலத்திற்குப் பின்னர்ப் பெயர்த்து எழுதப்பட்டு வந்த தென்புல வழக்கு வான்மீகத்தில் இவை சேர்க்கப்பட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது.

இந்த யூகம் வைணவ சமய எழுச்சியோடும் இராமானுசர் முதலான ஆச்சாரியர்களின் உபய வேதாந்தச் சொற்பொழிவு களோடும் வைத்து ஆராயத்தக்கது.

இனி, கம்பராமாயணத்தைப் பின்பற்றி இச்செய்திகள் வான்மீகத்தில் இடம் பெற்றிருக்கலாம் எனக் கொண்டால், கம்பன் கூற்றுக்கு ஆதாரம் எது என்னும் வினா எழுவது இயற்கை. ஆனால் தற்போதைய தரவுகளின் நிலவரப்படி இவ் வினாவிற்குரிய விடையைக் காணவியலவில்லை. ஆழ்வார் களும் திருவோணத்தான் எனக் கண்ணன் பிறந்த நட்சத்திரத் தைக் குறித்துள்ளார்களே தவிர, இராமனின் கிரக நிலைகளைப் பற்றி எதுவும் கூறவில்லை. தெலுகு, கன்னட, மலையாள, தமிழ்நாட்டுப்புற வழக்குகளைத் தொகுத்து ஆராயின் ஏதேனும் குறிப்புக் கிடைக்கலாம். அதுவரை இவ்வினா, விடைகாணா வினாவாகவே தொடரும்.

ஆரியபட்டர் என்னும் புகழ் பெற்ற வானியல் அறிஞரும், வராகமிகிரர் என்னும் புகழ் பெற்ற சோதிடநூல் வல்லுநரும் தோன்றிய வடபுலப் பண்பாட்டைச் சார்ந்த வான்மீக ஏடுகளில் இராமன் பிறந்த கிரக நிலைகள் சுட்டப்பெறவில்லை என்பதும், நாளையும், கோளையும் மறுத்துக் 'கோளறுபதிகம்' பாடிய தென்புலப் பண்பாட்டைச்சார்ந்து வழங்கிவரும் வான்மீக ஏடுகளில் இவை சுட்டப்பெறுகின்றன அல்லது இடைச்செருகலாகப் புகுத்தப்பெற்றுள்ளன என்பதும் வியப்பூட்டுவனவாக உள்ளன. எனவே, இக்கருத்து சமூகவியல் வல்லுநர்களின் துணையோடும், தொல்லியல் அறிஞர்களின் துணையோடும் இணைந்து மேலும் ஆழமாகச் சிந்திக்கத்தக்கதாக அமைகிறது.

(b) அகலிகை வரலாறு

வான்மீகம் (தென்புல வழக்கு)

விசுவாமித்திரர் இராம இலக்குவர்களுக்கு அகலிகையின் சாப வரலாற்றைக் கிழ்வருமாறு உரைக்கிறார்:

ஒருநாள் கௌதமர் அங்கிருந்து (ஆசிரமத்திலிருந்து) தூரமாகச் சென்றிருந்தபோது, அச் செய்தியை அறிந்த இந்திரன், அங்கு வந்து அகலிகையை நோக்கி, ''இடையழகியே, காம வயப்பட்டவர்கள், பெண்களின் கலவிக்கேற்ற சமயத்துக்காகக் காத்திரார்; நான் உன்னை அடைய விரும்புகிறேன்'' என்றான். கௌதம் வேடம் பூண்டு வந்தவன் இந்திரன் என அறிந்தே அந்தத் துர்ப்புத்தியுடையவள், தேவர்களின் அரசனே தன்னை விரும்பி வந்துள்ளான் என்று பெருமிதம் எய்தியவளாய் அவன் விருப்பத்திற்கு ஆட்பட்டாள்; பின்னர் மகிழ்ந்த உள்ளத்த வளாய், ''வானவர் ஏறே! மிகவும் தன்யளானேன்; மானத்தைக் காப்பவரே! உம்மையும் என்னையும் வெளிப்படாமல் காத்துக் கொள்வீராக; இங்கிருந்து விரைந்து செல்லுவீராக'' என வேண்டினாள். இந்திரனும் சிரித்தவாறே, ''அழகிய ஜகனமுடையாய், மிகவும் திருப்தியடைந்தவனாக, வந்த வழியே திரும்பிச் செல்கிறேன்'' எனக் கூறி வெளியே வந்தவன், ஆசிரமம் நோக்கி நீராடி வரும் கௌதம முனிவரைக் கண்டதும் நடுங்கித் தலை குனிந்தான். ரிஷி வேடந்தாங்கிய வனை இன்னானென உணர்ந்த கௌதமன் வெகுண்டு, ''தீய சிந்தையுள்ளவனே, என் உருவம் எடுத்துச் செய்யத்தகாததைச் செய்த நீ விருட்சணங்கள் இழந்தவனாவாய்'', எனச் சபித்தான். *(ஐ.48:18-30)* பின்னர் அகலிகையை நோக்கி, ''நீ ஆயிரம் ஆண்டுகளாக இங்கேயே கல்லாய்ச் சமைந்து, காற்றையே ஆகாரமாக உட்கொண்டு, உள்ளத் தவிப்புடன் புழுதி மூடி எவ்வுயிருக்கும் புலப்படாதவளாய்க் கிடப்பாயாக. எக்காலத்தே தசரத இராமன் இக்காட்டிற்கு வருகிறாரோ அப்போது தூய்மையடைந்து, அவருக்கு அதிதி பூசை இயற்றி அறந்துறந்த ஆசையை ஒழித்துக் கண்மூடித்தனம் நீங்கி உன்

சொந்த வடிவம் பெற்று என்னை வந்தடைவாய்'' எனக் கௌதமன் சபித்தான் (ஐ.48:32-35) பின்னர் இந்திரன், சாபத்தால் நொந்து மீண்ட வரலாற்றை விரிவாக உரைத்து, இராமனை நோக்கி விசுவாமித்திரர், ''இராம, இத்தகைய முனிவரின் ஆசிரமத்திற்குள் வந்து அகலிகையைச் சாபக் கொடுமை யினின்று மீட்பாயாக'' என்றார். மூவரும் ஆசிரமத்துள் நுழைந்ததும் அதுவரை யாருக்கும் புலப்படாமல் இருந்த அகலிகை அவர்கள் கண்களுக்குப் புலப்பட்டாள். அப்போது இராம இலக்குவர்கள் இருவரும் அவள் பாதங்களில் வீழ்ந்து வணங்கினர். கௌதமர் கூற்றை நினைவு கூர்ந்த அகலிகை அவர்கட்கு அதிதி பூசை செய்து மகிழ்வித்தாள். அப்போது அங்கு வந்த கௌதமரின் ஆசியையும், மரியாதையுடன் கூடிய உபசரிப்பையும் பெற்று மகிழ்ந்தவர்களாய் மூவரும் மிதிலை நோக்கிச் சென்றனர் *(I.49:13,14,18,19,20,24)*.

பௌத்த, ஜைன ராமாயணங்கள் அகலிகை வரலாற்றை முற்றுமாக ஒதுக்கிவிட்டன. பட்டி காவியத்திலும் அகலிகை வரலாறு காணப்பெறவில்லை (V.11Raghavan, P.64)

கம்பன் காப்பியப்படி மிதிலை நோக்கி மூவரும் சென்று கொண்டிருக்கையில் ஓர் ஆசிரமத்துக்குள் நுழைகிறார்கள். அப்போது இராமனின் திருப்பாதத் துகள்பட்டு வழியில் கிடந்த ஒரு கல் பெண்ணுருவாக மாறிட அப்பெண் ஒரு புறத்தே ஒதுங்கி நின்றாள். இதைக் கண்டு பெரிதும்வியப்பெய்திய இராமனை நோக்கி விசுவாமித்திரன், இவள் அகலிகை, கௌதம முனிவரின் மனைவி என்றான்.'' அதனைக் கேட்ட 'இராமன், ''என்னே இவ் உலக இயற்கை! அன்னை போல்வாளுக்கு இத் துன்பம் ஊழ்வினையால் நேர்ந்ததா அன்றி இம்மைக் குற்றங்களால் நேர்ந்ததா'' என்று வினவினான். அப்போது இந்திரனால் அகலிகை குற்றப்பட்ட வரலாற்றையும், அதனால் இருவரும் கௌதமனால் சபிக்கப்பெற்ற வரலாற்றையும் விசுவாமித்திரன் விளங்கக் கூறினான். அதனைக் கேட்டு உலகியல் உணர்ந்த இராமன், ''அன்னையே, சென்றது குறித்து வருந்தல் வேண்டா; மாதவன்

கருணைக்குப் பாத்திரமாகும் வண்ணம் நடந்து கொள்வாயாக; போய் வருக'' என்று அருளலும் அகலிகை அவனை வணங்கிக் கௌதமன் இருப்பிடம் நோக்கிச் சென்றாள் (I.9:14-25)

தெலுகு இராமாயணங்கள் மூன்றிலும் தென்புல வழக்கு வான்மீகத்தைப் போலவே அகலிகை வரலாறு கூறப்படுகிறது. மூன்றிலும் இந்திரன் சேவல் வடிவம் கொண்டு பொய்யாகப் பொழுது புலர்தலைக் காட்டிக் கௌதமன் காலைக்கடன்களுக்காக வெளியே செல்லுமாறு செய்கிறான்.

நீவு இந்துருடு அவுட்ட எருகுதுகாமே இந்து ரம்மனு
ஜலஜாக்ஷி தம்பர்னசால லோபலகி பலபேதி கொனி
போயி பரக கிரீடிஞ்செ... கௌதமுடு அந்தலோ வச்சி...
படதி பாஷாணமய் படியுண்டு மீவு (பால: பக்.44-45)

என்று இந்திரனென அறிந்தே அகலிகை அவனை வரவேற்றுப் பன்னக சாலைக்குள் அழைத்துச் சென்று மகிழ்வித்தாள் எனவும் பின்னர்க் கௌதமனால் கல்லாகச் சபிக்கப் பெற்றாள் எனவும் ரங்கநாத ராமாயணம் கூறுகிறது.

பாஸ்கர ராமாயணமும் ஏறக்குறைய இதேபோன்று கீழ்க்காணுமாறு அகலிகையின் குற்றத்தை விளக்குகிறது.

அனுடு அகல்யா இந்துருண்டு பிரியம்புன கௌதமவேஷி
ஜனவாடனி மதிலோயெறிங்கி முகமந்தங்க
இக்கடரம்முக்ரக்
குனன் மனசிஜூ நம்முலம் துனிசெமானமு சிக்கின மன்ம
துடம்வை நனு ரதிசாதுரிம் கவிசி நன்னுனு நின்னுனு
காவு (பா: பாடல் 521)

(''அன்றைக்கு அகல்யா இந்திரனே என்மீது விருப்பம் கொண்டு கௌதம வேடம் கொண்டு வந்துள்ளான்'' என மனத்துள் உணர்ந்து கொண்டு புன்முறுவலுடன் ''இங்கே சீக்கிரம் வாருங்கள்'' என அழைத்து அவனை மகிழ்வித்துத் தானும் மகிழ்ந்து ''என்னையும் தங்களையும் பாதுகாத்துக் கொள்ளுங்கள் என்று கூறினாள் '')

தன் கருத்தை முற்றுவித்துக் கொண்ட இந்திரன் அஞ்சி வெளியேறுகையில் எதிர்ப்பட்ட கௌதமனால் ஆண்மை யிழக்குமாறு சபிக்கப்படுகிறான்; அகலிகை கல்லாகச் சபிக்கப் படுகிறாள்.

அகலிகையின் சாப நீக்கத்திற்குப் பின்னர் இராம இலக்குவர்கள் அகலிகையின் பாதங்களில் வீழ்ந்து வணங்கி னர். அவள் இராமனுக்கு அதிதி பூசை செய்கிறாள். அப்போது அங்கு வந்த கௌதமர் அகலிகையை அழைத்துச் செல்கிறார். இராமன் முதலானோர் மிதிலை நோக்கிச் செல்கின்றனர்.

மிதிலை செல்லும் வழியில் ஒரு கல்லின் மீது இராமனின் பாதம் பட்டதும் அக்கல்லில் இருந்து ஓர் அழகிய பெண் தோன்றினாள். அதனைக் கண்ட விசுவாமித்திரன் உன் பாதத் துளியால் இக்கல் பெண்ணுருவம் பெற்றது என்று கூறி அந்த அழகிய பெண்ணின் வரலாற்றைக் கூறிக்கொண்டே மிதிலையை நோக்கிச் சென்றான் (பால.61-64) எனச் சுருக்கமாக மொல்ல ராமாயணம் அகலிகை வரலாற்றை உரைக்கிறது.

கன்னட பம்ப ராமாயணம் அகலிகை வரலாற்றை உரைக்கவில்லை. தொரேவே ராமாயணம் பின்வருமாறு கூறுகிறது:

> களையிழந்து காணப்பட்ட கௌதம வனத்தைக் கண்டு அதன் காரணத்தை வினவிய இராமனுக்கு விசுவாமித்திரன், ''அகலிகையின் மீது மோகம் கொண்ட இந்திரன் கௌதமனின் ஆசிரமத்துக்குள் வந்து அவளுடன் கூடியிருக்கையில் வெளியில் இருந்து வந்த கௌதமன் அதைக் கண்டு வெகுண்டு உடல் முழுதும் பெண்குறியாகுமாறு இந்திரனைச் சபித்தான். மேலும் இந்திரன் ஆண்மை யிழந்தான். அகலிகை கல்லாகச் சபிக்கப் பெற்றாள். அது நிகழ்ந்தவிடம் இதுதான்'' என்று விளக்குகிறான். அப்போது இராமனின் பாதத்துளி பட்டதும் ஒரு கல்லின் நடுவிலிருந்து அகலிகை தோன்றுகிறாள். இராமனைக் கண்டு வணங்கிப்

புகழ்கிறாள். இதனைக் கண்டு அதிசயித்த இராமனுக்கு ''நான் முன்பு கூறிய அகலிகை இவள் தாள். நின் அருட்பார்வையால் மீண்டும் தன்னுருவினை அடைந்தாள்'' என்று விசுவாமித்திரன் விளக்கம் தருகிறான். அப்போது அங்கு வந்த கௌதமன் இராமனைக் கண்டேன் என உணர்ந்து வணங்குகிறான். அவனையும் அகலிகையையும் வாழ்த்தி மூவரும் மிதிலை நோக்கிச் செல்லலாயினர் (I.12:17-23).

துளசி ராமாயணம் சாபவிமோசனம் மட்டும் கூறுகிறது. சாபம் பெற்ற வரலாற்றைக் கூறவில்லை.

கல்லாகச் சபிக்கப்பெற்ற கௌதமனின் மனைவி நின் பாதத் துளிக்காகக் காத்திருக்கிறாள். அருள்கூர்ந்து விமோசனம் செய்க (தோகா-210). பழைய உருப் பெற்றதும் அகலிகை இராமனைக் கைகூப்பி வணங்குகிறாள். மகிழ்ச்சிப் பரவசத் தால் பேச நா எழாது இராமனின் பாதங்களைப் பற்றிக் கொண்டு கண்ணீர் உகுக்கிறாள். பின்னர் ஒருவாறு தெளிந்து, ''இரகு நந்தன, மெய்யுணர்வு பெற்றோர் மட்டுமே காணக்கூடிய உன்னை, தூய்மை இழந்த பெண்ணாகிய நானும் காணும் பேறுபெற்றேன். இப்பேற்றிற்குக் காரணமாகிய என் கணவரை வணங்குகிறேன். என்றும் உன் திருப்பாதங்களை விட்டு நீங்காத வரம் அளித்தருள்வாயாக'' என்று வேண்டி அவ்வாறே வரம்பெற்று, மீண்டும் அவனிருதாள் வண்ங்கி மிக்க மன மகிழ்ச்சியோடு தன் கணவரின் ஆசிரமம் புக்காள் (சந்தம் 1-4).

தமிழ் வில்லுப்பாட்டு

வாராறே மூன்று பேரும்
அதலிகா வனமதிலே
அவசரமாய் வாரபோது
கருங்கல்லின் மேலேயல்லோ
கார்வண்ணன் பாதம் பட்டிடுமாம்
அந்தக் கல்லுமொரு பெண்ணாகி
கார்வண்ணனை வணங்கிடுவாள்
அதை யறிந்தார் மாயபிரான்

"சுவாமி, உலகிலுள்ள மானிடர்களின் பாதம் ஒரு கல்லில் பட்டால் ரத்தம் கசிந்து வரும். இங்கு என் பாதமானது இந்தக் கல்லில் படவும் இந்தக் கல் பெண்ணாகி என்னை வணங்கக் காரணம் என்ன?" என்று எம்பெருமான் கேட்டபோது, "இராமா இதுவெல்லாம் உன் மகிமையல்லாமல் வேறு ஒன்றும் கிடையாது. அதாவது, இந்தப் பெண் கௌதமருடைய தேவி, இவள் பெயர்தான் அகலிகை. இவள் கௌதமருக்குச் செய்த குற்றத்திற்காக வேண்டி இந்தப் பெண்ணைக் கௌதமர் கல்லாகச் சாபமிட்டார்.

"எந்தனுட சாபமது
எப்போது நிவர்த்தி யாகும்"
அகலிகையாள் கேட்டபோது
"... வந்திடுவார் மூன்றுபேரும்
அந்த நல்ல சமயத்திலே
அச்சுதனார் திருப்பாதம்
கல்லதிலே பட்டபோது
கல்லும் பெண்ணாய் மாறிடுமாம்"

என்று கௌதம மகாமுனிவர் சொன்ன வாக்கின்படி, ராமா, உன் பாதம் பட்டவுடன் கல்லும் பெண்ணாக மாறிவிட்டது" என்று விசுவாமித்திரர் விளக்கினார். அப்போது இராமன், "சுவாமி அப்படியானால் இந்த அகலிகை என்ற பெண்ணைக் கௌதம மகாமுனிவரிடம் கூட்டிக் கொண்டுபோய் ஒப்படைத்து விட்டுத்தான் போகவேண்டும்[7]" என்று சொல்லவும், அப்படியே அவர்கள் அகலிகையை ஒப்படைத்துவிட்டு மேலே சென்றார்கள்.

தொகுப்புரை:

அகலிகை வரலாறு குறித்துப் பல்வேறு இராமாயணங்கள் கூறுவனவற்றைக் கீழ்வரும் தலைப்புகளில் தொகுத்து ஆராயலாம்.

7. தி.கி.சோதிநாயகம், பக். 220-222.

1. அகலிகை வரலாறு கூறும் நூல்கள்; கூறாத நூல்கள்.
2. சாபவிமோசனத்துக்கு முன் அகலிகை வரலாறு உரைப்பன; பின்னர் உரைப்பன.
3. சாப வரலாறு கூறுமிடத்து, அகலிகை இந்திரனை அறிதலும் அறியாமையும்.
4. சாபம் / விமோசனம் வேறுபாடுகள்.

அகலிகை வரலாறு கூறுவன / கூறாதன

வான்மீகம், இரகுவம்சம், நரசிம்ம புராணம், கம்ப ராமாயணம், தெலுகு ராமாயணங்கள், கன்னட தொரேவே ராமாயணம், எழுத்தச்சன் ராமாயணம், துளசி ராமாயணம், தமிழ் வில்லுப்பாட்டு ஆகியன அகலிகை வரலாற்றை உரைக்கின்றன. தசரத ஜாதகம், விமல சூரியின் பௌமசரிதம், வாசுதேவ ஹிண்டி, குணபத்ரரின் உத்தரபுராணம், கன்னட பம்ப ராமாயணம் ஆகியன அகலிகை வரலாற்றை முற்றுமாக ஒதுக்கி விடுகின்றன. ஒழுக்கத்தின் இழிந்த வரலாறு ஒன்றைக் கூறி அத்தகையவர்க்குக் குறிக்கோள் தலைவனாகத் தாங்கள் படைக்கும் இராமன் அருள்செய்வதாக வரும் நிகழ்ச்சியைப் பௌத்த, சமண சமயங்கள் விரும்பாமையே இதற்குக் காரணமாகலாம். மேலும், ஒழுக்கம் தவறித் திருந்திய ஆண் மக்களை இச்சமயக் காப்பியங்களில் காணலாமாயினும், அத்தகைய பெண் மக்களை இவை படைத்துக்காட்ட முன்வருவதில்லை. இதற்கும் இச்சமயங்களின் தத்துவப் பார்வையே காரணமாக அமைகிறது எனலாம்.

அகலிகை வரலாறு உரைக்கப் போந்த நூல்களில் துளசி ராமாயணமும், தமிழ் நாட்டுப்புறப் பாடலும் அகலிகை சாபம் பெற்றதை மட்டும் குறிப்பிடுகின்றன. அதற்கான காரணத்தைக் கூறாது விடுகின்றன. சாபத்திற்குக் காரணமான நிகழ்ச்சியைப் படைத்துக் காட்டுவதை இந்நூல்கள் விரும்பவில்லை போலும்.

சாப விமோசனம் முன்/பின்

இனி அகலிகை வரலாற்றை, முழுமையாகவோ, பகுதியாகவோ உரைப்பதிலும்கூட வேறுபாடுகள் காணப்படு கின்றன. வான்மீகம், இரகுவம்சம், தெலுகு ராமாயணங்களில் ரங்கநாதம், பாஸ்கரம் ஆகியன, கன்னட தொரவேராமாயணம், துளசி ராமாயணம் என்னும் இவை சாப விமோசனத்திற்கு முன்னரேயே அகலிகை வரலாற்றைக் கூறுகின்றன. கம்ப ராமாயணம், மொல்ல ராமாயணம், தமிழ் வில்லுப்பாட்டு ஆகியன சாப நீக்கத்திற்குப் பின்னர் அதிசயித்து நின்ற இராமனுக்கு அகலிகை வரலாற்றை எடுத்துக் கூறுகின்றன. இம்மாற்றத்தை முதன்முதலில் கம்பன்தான் செய்ததாகத் தோன்றுகிறது. நாடக நலனை மிகுவிக்கும் உத்தியாக அறிஞர் இதனைக் கருதுவர்.

இந்திரனை அறிதலும் / அறியாமையும்

அகலிகையின் துர்நடத்தை குறித்த குறிப்பு முதல் முதலாக மகாபாரதம் உத்தியோக பர்வத்தில் *(5-12:6)* காணப்படுகிறது. அந்தணனாகவும், கௌதமனாகவும் வேடம் தரித்து வஞ்சனையால் அகலிகையைக் கற்பிழக்கச் செய்தவன் இந்திரனே எனக் கருதிக் கௌதம முனிவர் அவனைச் சபித்ததாகப் பாரதத்தில் பல இடங்களில் குறிக்கப்படுகிறான். எனவேதான் அகலிகைக்கு எத்தகைய சாபமும் தரப்பட்டதாக மகாபாரதம் கூறவில்லை.

வால்மீகி ராமாயண உத்தர காண்டத்தில் (சருக்.30) அகல்யா குற்றமற்றவளாகக் கூறப்படுகின்றாள். ஆனால் இருவகை வழக்கிலும் உள்ள, வால்மீகி ராமாயண பாலகாண்டம், அகலிகையின் அழகில் ஈடுபட்டுக் கௌதம முனிவரின் ஆசிரமத்துக்குள் அம்முனிவரின் வேடம் கொண்டு நுழைந்த இந்திரனை, இந்திரன் என்று தெரிந்தே – தன் மீது மோகம் கொண்டு தன்னை அடைவதற்காக மாறுவேடத்தில் வந்தவன் இந்திரனே என்று நன்கு அறிந்தே – அகல்யா பெருமிதத்துடன் வரவேற்று அவன் விருப்பத்தை

நிறைவேற்றித் தானும் மகிழ்ந்தாள் என்று கூறுகிறது (I.48:16) மூன்று தெலுகு ராமாயணங்களும், தெலுகு கவி எர்ரன்னாவின் மகாபாரதமும் (ஆரணியபர்வம்), கன்னட தொரவே ராமாயணமும், மலையாள எழுத்தச்சன் ராமாயணமும் அகலிகையைக் குற்றப்பட்டவளாகவே கூறுகின்றன. கிருத்திவாசனின் வங்காளி ராமாயணம் இந்திரன் தன் உண்மை யான வடிவிலேயே வந்து அகலிகையின் அறிவை மயக்கி அவளை அடைந்தான் என்று கூறுகிறது. எனவே அகலிகை குற்றமற்றவள் என்று வங்காளி ராமாயணம் கூறுகிறது.

கம்ப ராமாயண அகலிகைக்குக் கௌதம வேடத்தில் வந்தவன் இந்திரன் என்று முதலில் தெரியவில்லை. அவனை அவள் வரவேற்றதாகவும் கம்பன் கூறவில்லை. எனவே, கௌதமன் என்றே கருதி வந்தவனின் விருப்பிற்கு உடன்பட்டிருக்கலாம். பின்னர் உறவின்போது இவன் கௌதமன் அல்லன் என்று உணர்ந்தாளாயினும் இச்செயல் தனக்குத் தக்கதன்று என்று எண்ணவில்லை; மாறாகத் தானும் விரும்பி அவனுக்கு உடன்பட்டவளாக இருந்தாள் என்று கவிஞன் கூறுகிறான்.

வால்மீகி முதலானோர் காட்டும் அகலிகை விரும்பியே கற்பினை இழந்தாள் என்றும், கம்பன் படைத்த அகலிகை, வந்தவன் தன் கணவன் என்று கருதி உடன்பட்டாளாதலின் அகலிகையின் கற்பிழப்பு ஒரு விபத்து என்றும், அவள் வஞ்சமறியாத தூயவள் என்றும், அவள் கற்பரசி என்றும் சில அறிஞர்கள் கருதுகின்றனர்; ''நெஞ்சினால் பிழைப்பிலாள்'' எனவரும் கம்பன் தொடரை இக்கருத்துக்குச் சான்றாக்கு கின்றனர்.[8]

கற்பென்பது உடல் தூய்மை எனக் கொண்டால் இருவரும் ஒரே பண்பினர்தாம்; உள்ளத் தூய்மை-அதாவது, அறிந்தே உடல் தூய்மை அழிய விரும்பாத பண்பு-கற்பு எனக் கொண்டாலும் இருவர்க்கிடையே இன்றியமையாத வேறுபாடு

8. தெ.ஞானசுந்தரம், கம்பன் மலர், 1991 (கோவை கம்பன் கழகம்), பக்.21-22.

இருப்பதாகத் தெரியவில்லை. 'ஒக்க உண்டிருத்தலோடும்' என்னும் தொடர் இவளது ஈடுபாட்டையும், 'உணர்ந்தனள்' என்னும் தொடர் தன் கணவனல்லன் என்பதைத் தெளிவாக உணர்ந்து கொண்டாள் என்பதையும், 'தக்கதன்று என்ன ஓராள்' என்னும் தொடர், 'இவன் கணவன் அல்லன்; இது தகாது' என்று நினைக்கவில்லை என்பதையும், 'தாழ்ந்தனள் இருப்ப' என்னும் தொடர், பின்னும் விருப்புற்று அவனோடு உறைந்தனள் என்பதையும் தெளிவாகக் காட்டுகின்றன. எனினும், இருவகை அகலியருள், இந்திரனைப் பற்றி அறிந்து, 'அவனாலேயே விரும்பப்படுகிறோம்' என்று ஆணவமுற்று, அவனை விரும்பி வரவேற்கும் கீழ்மைப் பண்பை உடையவளாக வான்மீகம் காட்டும் அகலிகை விளங்குகிறாள். கணவனென்றே கருதி அனுமதித்த ஒருவன் கணவனல்லன், ஒரு கயவன் என்பதை உணர்ந்துகொண்ட பின்னர் விதிர்த்து, எழுந்து, எதிர்த்து, விலகாமலும், 'தக்கது அன்று' என்று சிந்திக்காமலும் அவனுடன் இருத்தலை விரும்பித் தொடர்ந்த சபலமுடையவளாகக் கம்பனின் அகலிகை படைக்கப் பட்டுள்ளாள்.

கம்பனின் மாற்றம் குற்றத்தின் கடுமையைக் குறைக்கவும், குற்றத்திற்கு அடிப்படையான மன விகாரத்தை நீக்கவும் பயன்படுகிறது. எனினும், நெஞ்சினால் பிழைப்பிலாள் என்னும் தொடர் அகலிகைக்குப் பொருந்துவதாகத் தோன்றவில்லை; கம்பனின் கருத்தாகவும் படவில்லை. ஏனெனில், ''மனைவிக்குரிய மாண்புகளை அழித்து அதனால் இழிதகைமை பூண்ட (கௌதமனின்) மனைவி *(I.9:13)*'' என்றும், ''நிரந்தரம் உலகில் நிற்கும் நெடும்பழி பூண்டாள்'' *(I.9:20)* என்றும் விசுவாமித்திரனின் வாக்காகவும், ''விலைமகள் அனைய நீயும்'' என்று கௌதமனின் வாக்காகவும் குறிப்பிடும் கவிஞன், பின்னர் ''நெஞ்சினால் பிழைப்பிலாள்'' என்று விசுவாமித்திரன் வாக்காகவே கூறுவானா என்பது சிந்திக்கத்தக்கது. மேலும், இந்தப் பாடலை உடுக்குறியிட்டுக் கம்பன் கழகம் பதிப்பித்துள்ளது.

வை.மு.கோ.வும் இந்தப் பாடல் சில பிரதிகளில் இல்லை என்று கூறுகிறார்.

அகலிகை கல்லுருவம் அடைந்த வரலாற்றைக் கூறும் பரிபாடல் அடிகளுக்கு (19:50-52) உரைவகுக்கும் பரிமேலழகர், ''கல்லுருவெய்தியவாறு இதுவென்று கொண்டோற் பிழைத்த தண்டம் கூறுவாருமாய்'' என்று கூறுவதால், அகலிகை குற்றப்பட்டுத் தண்டனை பெற்றாள் என்பதை அவர் ஏற்றுக்கொள்கிறார் என்று அறிகிறோம்.[9] ''தேக சௌந்தரியமும் தேவர்களுக்குரிய தேஜசும் உடைய வேற்று ஆடவரைக் கண்டால் காமவயப்படுதல் மகளிர்க்கு இயல்பு'' என்னும் கோணிகா புத்திரரின் கருத்தை மேற்கோளாகக் காட்டும் வாத்சாயனர், இவ்வாறு ஆசைநாயகனை வைத்திருந்த ஒரு பெண்ணாக அகலிகையைக் குறிப்பிடுகிறார் என்பதும் இங்குக் கருதத்தக்கது.[10]

எனவே இந்தப் பாடல் கம்பன் பாடலாக இருக்குமா என்னும் ஐயம் எழுகிறது. கற்பு என்னும் ஒழுக்க நிலையில் 'மிக்க கற்புடையவள், சிறிது கற்புடையவள்' என்னும் விழுக்காட்டுத் தன்மையையோ, 'அவளைவிட இவள் கற்பில் சிறந்தவள் என்பது போன்ற ஒப்பீட்டு ஒழுக்கத்தையோ (Comparative morality) கம்பன் போற்றுவதாக அவன் காப்பியம் வேறெங்கும் காட்டவில்லை. ''அன்னை நீ போதுஎன்னப் பொன்னடி வணங்கிப் போனாள்'' என்னும் பாடலொடு கம்பன் இந்தப் படலத்தை முடித்திருக்கலாம். தன் பாத்திரங்கள் குற்றப்பட்டு நிற்குமிடத்துக் கம்பன் பெரும்பாலும் கருத்துரைப்பதில்லை. குற்றச்சூழலை வருணிப்பதுடன் நின்றுவிடுதலைக் காண்கிறோம். வாலி வதையில் இராமனின் மௌனநிலை இங்குச் சிந்திக்கத் தக்கது.

இராமனைப் பொறுத்தவரையில், ''என்னே இவ்வுலகத் தியற்கை'' என இக்கதைத் தொடக்கத்தில் வியந்தவன், அவள்

---

9. பரிபாடல் மூலமும், பரிமேலழகருரையும், உ.வே.சாமிநாதையர், சென்னை: 1935, ப.141.
10. Biswaranarayan Shastri, "Ramayana in Assamesse Literature", The Ramayana Tradition in Asia, P. 558, n.4.

கதையை விசுவாமித்திரன் கூறி முடித்ததும், ''மாதவன் கருணைக்குப் பாத்திரம் ஆகும் வண்ணம் நடந்து கொள்க. போய் வருக'' என்று அவளுக்கு அறிவுரை கூறுவதைச் சிந்தித்தால், அகலிகையின் குற்றம் பற்றிய இராமனின் கருத்தும், கவிஞனின் கருத்தும் நன்குதெளிவாகும்.

சாபம் – விமோசனம்: வேறுபாடுகள்

இந்திரன், அகலிகை இருவரும் சபிக்கப்பட்ட வரலாற்றிலும், விமோசனம் பெற்ற வரலாற்றிலும் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன.

இந்திரன் சாப வரலாறு

இந்திரன் விருட்சணங்களை இழக்குமாறு கௌதமனால் சபிக்கப்பட்டதாக வால்மீகி ராமாயண பாலகாண்டம் கூறு கிறது. வடபுல, தென்புல வழக்குகள் ஆகிய இருவகை வான் மீகங்களும் இச்செய்தியை ஒன்றுபோலவே கூறுகின்றன.[11]

இதன் விளைவாக இந்திரனின் விருட்சணங்கள் அறுந்து தரையில் விழுந்தன என்றும் கூறுகின்றன. தேவர்களின் வேண்டுகோளால் இந்திரனுக்கு ஆட்டின் விருட்சணங்கள் பொருத்தப்பட்டன என்று அடுத்த சருக்கத்தில் கூறப்படுகிறது.

ஆனால் வால்மீகி ராமாயண உத்தரகாண்டத்தில் இந்திரன் தோல்வி அடைவானாக என்று கௌதமன் சபித்ததாகக் கூறப்படுகிறது. மேலும் மானுடர்கள் செய்யும் இத்தகைய பாவத்தில் பாதிப்பங்கு இந்திரனை அடையுமாக என்றும், இந்திர பதவி இனிமேல் எப்போதும் நிலையாக இருக்காது என்றும் சபித்ததாகவும் உத்தர காண்டம் கூறுகிறது. (சருக்.60:32-35)[12]

---

11. வடபுல வழக்கு:
 The Valmiki Ramayana, Critical edition (Baroda, M.S. University, 1959) Balakanda 47:26-27
 தென்புல வழக்கு:
 1. Srimad Valmiki Ramayana, Balakanda (Gorakpur: Gita Press, 1969), 48:27-28
 2. Srimad Valmiki Ramayana, Dharmalaya Edition, (Palghat, Kalpathi Subrahmanya Vadhyar & Sons, 1940) 48:30-32

12. காமில் புல்கே, ராமகதா (ப.299)

கௌதமனின் சாபத்தால் இந்திரனின் தாடி வெளுத்து விட்டதாக மகாபாரதம் கூறுகிறது (சாந்தி பர்வம், 329:14 (1), கீதா பிரஸ்).

கம்ப ராமாயணம், ''ஆயிரம் மாதர்க்குள்ள அறிகுறி உனக்குண்டாக'' என்று இந்திரன் சபிக்கப்பட்டதாகக் கூறுகிறது. (1.9:21) இந்தப் பாடலுக்குரிய விளக்க உரையில், ''இங்ஙனம் சபித்ததாகக் கூறியது பிறநூல் மேற்கொண்டாகும்'' என்று வை.மு.கோபாலகிருஷ்ணமாச்சாரியார் கூறுகிறார். (பால.9:78) ஆனால், இங்கே இவர் குறிப்பிடும் பிற நூல் எது என அறிய இயலவில்லை. எனினும் வான்மீகத்தில் இச்செய்தி இல்லை என்பதை வை.மு.கோ உணர்ந்திருந்தார் என்பது தெளிவாகிறது.

ஆனால் கௌதமனின் சாபத்தால் இந்திரனுக்கு உடலெங்கும் ஆயிரம் மாதர்க்குள்ள அறிகுறிகள் தோன்றிய வரலாறுதான் பெரும்பாலான இந்திய இராமாயணங்களில் கூறப்படுகின்றது. இவற்றுள் இன்றியமையாதன:

பிரம்ம புராணம் (59, 87); ஸ்கந்த புராணம் (நாகர் காண்டம், இத்.207), கதாசரித் சாகர் (3,17), பத்ம புராணம் (5:51,28), அத்யாத்ம ராமாயணம் (1.5:26), ரங்கநாத ராமாயணம் (1:29), ஆனந்த ராமாயணம்(1.3:19), அசாமி ராமாயணம், கிருத்திவாச ராமாயணம் (1:59), தொரவே ராமாயணம், தத்துவ சங்கிரக ராமாயணம் (1.25) ஆகியன.

இவற்றுள் பிரம்ம புராணம் ஏறக்குறைய கி.பி. 10ஆம் நூற்றாண்டு அல்லது அதற்குப் பின்னர்த் தோன்றியது. இது ஒரு மூலநூல் அன்று. ஒரு தொகுப்பு நூல். அரிவம்சத்தை அடிப்படையாகக் கொண்டும் கௌதமி மகாத்மியத்தைச் சார்ந்தும் இராமகாதைச் செய்திகளைக் கூறுவது.

ஸ்கந்த புராணம் கி.பி.எட்டாம் நூற்றாண்டிற்குப் பின்னர்த் தோன்றியது. இன்ன காலத்திற்கு உரியன என அறியவியலாத பல்வேறு கதைகளை இடையறாது சேர்த்துவந்த இடைச்

செருகல் நூல். கதாசரித் சாகர் என்பதும் தொகுப்பு நூல் – மூல அடிப்படை கி.பி. பதினொன்றாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவை (காண்க. நூல் அட்டவணை) தத்துவ சங்கிரக ராமாயணம் கி.பி.17ஆம் நூற்றாண்டிற்கு உரியதாகக் கருதப்படுகிறது.[13] அதாவது மேலே சுட்டிய நூல்களுள் முழு இராமாயணங்களாகக், குறிப்பிட்ட காலத்தில், ஒரு கவிஞனால் படைக்கப்பட்டனவெல்லாம் கம்பராமாயணத்திற்குப் பின்னர்த் தோன்றியன என்பது கருத்து.

கால அடிப்படையில் நோக்கினால், இன்றுவரை கிடைத்துள்ள தரவுகளின்படி, கம்ப ராமாயணம்தான் இந்திரனுக்கு ஆயிரம் குறிகள் தோன்றுமாறு சபிக்கப்பட்ட செய்தியை முதன் முதலாகக் கூறுகிறது எனக் கொள்ள நேர்கிறது. வை.மு.கோபால கிருஷ்ணமாசாரியாரின் குறிப்பு பிற்கால வடமொழித் தொகுப்பு நூல்களாகிய புராணங்களின் அடிப்படையில் எழுதப்பட்டதாகலாம். கம்பனின் தமிழ் மரபிலே இத்தகைய சாபம் பற்றிய நூலைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். இந்திரனின் சாப நீக்கம் பற்றிய வரலாற்றை ஆராய்ந்தால் சில தடயங்கள் கிடைக்கலாம்.

இராமாயண மஞ்சரியில் இந்திரன் கௌதமனால் கீழ்க்காணுமாறு சபிக்கப்படுகிறான்:

> **போரில் தோல்வியடைந்து சிறைப்படுவான்.**
> **இந்திரனைப் பின்பற்றி இத்தகைய தவற்றைச் செய்யும் ஆண்களின் பாவத்தில் பாதி இந்திரனைச் சேரும்.**
> **இந்திர பதவி ஒருவருக்கே உரியது என்ற நிலை மாறி இனி தக்கோர் யாராயினும் இந்திரன் ஆகலாம் (645-646).**

சாப விமோசனம்.

தேவர்களின் வேண்டுகோளால் இந்திரனுக்கு ஆட்டின்

13. (அ) காவில் சங்கிரக ராமாயணம் கி.பி. 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிக்குரியது எனவும் கூறுவர். சமஸ்கிருதம் அல்லாத பிற மொழிகளிலுள்ள இராமாயணத்தைக் கற்பது ஒருவன் கானல் நீரை அள்ளிப் பருக ஆசைப்படுவதைப் போன்றது என்னும் கருத்து இந்த நூலில் காணப்படுகிறது.

Velcheru Narayana Rao, "The Politics of Telugu Ramayanas..."Questioning Ramayanas, Oxford University Press, New Delhi (2000) P.172.

விருஷ்ணங்கள் பொருத்தப்பட்டுச் சாபவிமோசனம் அடைந்த செய்தி தென்புல வழக்கு வால்மீக பாலகாண்டத்தின் 49ஆவது சருக்கத்திலும் (6-12), வடபுல வழக்குப் பாலகாண்டத்தின் 48ஆவது சருக்கத்திலும் (6-8) கூறப்படுகிறது.

மகாபாரதத்திலும், வால்மீகி ராமாயண உத்தரகாண்டத்திலும் இச்செய்தி கூறப்பெறவில்லை.

கம்ப ராமாயணம் இந்திரனின் சாப நீக்கம் குறித்து,

அந்த இந்திரனைக் கண்ட அமரர்கள் பிரமன் முன்னால்
வந்து கோதமனை வேண்ட மற்று அவை தவிர்த்து மாறாச்
சிந்தையின் முனிவு தீர்ந்து சிறந்த ஆயிரம்கண் ஆக்க
தந்தமது உலகு புக்கார் தையலும் கிடந்தாள் கல்லாய்

என்று கூறுகிறது. இந்திரனின் அவலம் கண்டு இரங்கிய தேவர்கள் பிரமனை முன்னிட்டுக் கொண்டு கௌதமனிடம் வந்து சாப நீக்கம் வேண்டினர். முனிவனும் சினம் தீர்ந்து, இந்திரனின் உடலெங்கும் உள்ள ஆயிரம் குறிகளும் ஆயிரம் கண்களாக மாறும்படி விமோசனம் அருளினான் என்று இப்பாடலால் கம்பன் விமோசன வரலாறு கூறுகிறான்.[14]

மேனி முழுவதும் ஆயிரம் குறிகளாகுமாறு சபிக்கப்பட்டான் என்று கூறும் மேற்சுட்டிய பிரம்மபுராணம் முதலான நூல்கள் எல்லாம் இந்திரன் ஆயிரம் கண்ணனாக மாறினான் என்று கூறுகின்றன. கம்பன் கூறுவதையொட்டித் தெலுகு ராமாயணங்களும், எழுத்தச்சன் ராமாயணமும், பலராமதாஸ் ராமாயணமும் இந்திரனின் சாப விமோசனத்தைக் கூறுகின்றன. கௌதம நதியில் நீராடியதனால் இந்த மாற்றத்தைப் பெற்றான் என்று பிரம்ம புராணமும், இந்திரன் அசுவமேத யாகம் செய்ததின் பயனாய்க் குறிகள் கண்களாயின என்று கிருத்திவாச ராமாயணமும் (1:60), தேவி அருளிய

14. சென்னை கம்பன்கழகப் பதிப்பு இப்பாடலை மிகைப் பாடலாகப் பதிப்பித்துள்ளது. வை.மு.கோ. பதிப்பில் நூலுள்ளேயே வைக்கப்பட்டுள்ளது. வேறு சில பதிப்புகளும் நூலுள்ளே வைத்துப் பதிப்பித்துள்ளன. தமிழிலக்கிய மரைப ஆராயுமிடத்து இது கம்பனின் பாடலாகவே தோன்றுகிறது.

வரத்தினால் இந்திரன் ஆயிரம் கண்ணனானான் என்று பத்ம புராணமும்(5:41-48) பல்வேறு வகையாகக் கூறுகின்றன.[15]

இந்திரன் ஆண்மை இழக்குமாறு சபிக்கப்பட்டு, பின்னர் ஆட்டின் பீஜங்கள் பொருத்தப்பட்டு ஆண்மை பெற்றான் என்று இராமாயண மஞ்சரியின் பாலகாண்டம் கூறுகிறது(308).

கௌதமன் குடிலில் இல்லாதபோது, அவன் வடிவில் இந்திரன் அகலிகையை அணுகி இன்புற்றான் (உத்தர.650-652). அகலிகையோடு கூடியிருக்கையில், கௌதமன் திரும்பி வந்து கதவைத் தட்டுகிறான். கௌதமனின் சாபத்திற்கு பயந்து இந்திரன் ஒரு வண்டாக உருவெடுத்து, அகலிகையின் குறிக்குள் மறைந்து கொண்டான் (உத்தர.657). நீ மறைந்- திருந்தது போன்ற ஆயிரம் குறிகள் உன் மேனியெங்கும் தோன்றுமாக என்று கௌதமன் இந்திரனைச் சபித்தான் (உத்தர.661). விதஷ்தா, சிந்து ஆகிய இரு நதிகளும் கூடும்

'கவாக் ஷா' என்னும் இடத்தில் நீராடினால், அந்த ஆயிரம் குறிகளும் கண்களாக மாறும் என சாபம் விமோசனம் பெற்றான்(உத்தர.662).

இவ்வாறு இராமாயண மஞ்சரியின் உத்தர காண்டத்தில் அகலிகை வரலாறும் இந்திரனின் சாபமும், சாப விமோசனமும் கூறப்படுகின்றன.

இவற்றுள் இந்திரன் கௌதமன் வடிவில் வருதலும் ஆண்மை இழக்குமாறு சபிக்கப்படுதலும், அகலிகை கல்லாகச் சபிக்கப்படுதலும் பிற நூல்களிலும் காணப்படுகின்றன. ஆயிரம் குறிகள் உடையவனாகச் சபிக்கப்படுவதும், பின்னர் அவை ஆயிரம் கண்களாக மாற்றப்படுவதும் நாட்டுப்புற வழக்கில் காணப்படுகின்றன. வண்டாக உருவெடுத்து அகலிகையின் குறியுள் மறைந்து கொள்வதும் கவாக் ஷாவில் நீராடி சாப விமோசனம் பெறுவதும் காஷ்மீர வட்டார வழக்கில் மட்டும் காணப்படுகின்றன.[16]

15. கமில் புல்கே, 300.
16. V.Raghavan, Ramayana in Classical Sanskrit and Prakrit Literature. Chennai, 2004, P.142.

எவ்வாறாயினும் ஆயிரம் குறிகள் பெறுமாறு சபிக்கப் பெற்றான் எனக் கூறியதும் அதற்கு விமோசனம் கூற வேண்டிய கட்டாயம் கவிஞர்கட்கு ஏற்படுகிறது. ஒவ்வொரு கவிஞனும் தன்னுடைய சமுதாய மற்றும் இலக்கியப் பண்பாட்டிற்கு ஏற்ப விமோசன வரலாறுகளைக் கூறுகின்றான் எனக் கருதவேண்டியுள்ளது.

கம்பனின் கூற்று

கம்பன் எந்த அடிப்படையில் இந்தச் சாபத்தையும் விமோசனத்தையும் கூறியிருப்பான் என ஆராயுமிடத்துத் தமிழிலக்கிய வரலாற்றில் சில தரவுகள் கிடைக்கின்றன. கால அடைவில் முதன்முதலாக மணிமேகலையில் இது பற்றிய குறிப்பு காணப்படுகின்றது:

காமக் கள்ளாட் டிடைமயக் குற்றன
தேவர்க் காயினும் சிலவோ செப்பின்
மாதவன் மடந்தைக்கு வருந்து துயர்எய்தி
ஆயிரம் செங்கண் அமரர்கோன் பெற்றதும் (18:88-91)

அகலிகை காரணமாக இந்திரன் பெற்ற சாபமும் அதிலிருந்து விமோசனம் பெற்றதும் 'மணிமேகலையின்' இந்தக் குறிப்பால் அறியக் கிடக்கின்றன.

இதனையடுத்துச் சம்பந்தர் தேவாரத்திலும் இந்திரனின் சாபவிமோசனம் பற்றியதொரு பாடல் காணப்படுகிறது.

முன்னொரு காலத்து இந்திரன் உற்ற முனிசாபம்
பின்னொரு நாள்அவ் விண்ணவர் ஏத்தப் பெயர்வெய்தித்
தன்னருளால் கண்ஆயிரம் ஈந்தோன் சார்புஎன்பர்
கன்னியர் நாளும் துன்னமர் கண்ணார் கோயிலே
(முதல் திருமுறை – திருக்கண்ணார் கோயில் 7)

பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் பதிப்பித்த அடங்கல் முறை தேவாரத்தில், பின்னிணைப்பாகத் தரப்பெற்றுள்ள ம.பாலசுப்பிரமணிய முதலியார் தொகுத்த தலச்

சிறப்பகராதியில் கண்ணார் கோயில் பற்றிய கீழ்வரும் குறிப்பு காணப்படுகிறது.

> அகலிகையைப் புணர்ந்தது காரணமாகத்
> தேவேந்திரன் உடல் முழுமையும் ஆயிரம்
> பெண்குறி நிரம்பப் பெற்ற சாபம் நீங்க
> (தேவர்கள்) இத்தலத்து இறைவனைப் பூசித்து,
> அக்குறிகள் கண்களாக மாற்றப் பெற்றதால்
> தலப்பெயர் கண்ணார் கோயிலாயிற்று. [17]

இந்திரன் பெற்ற சாபமும், அதற்கான காரணமும், விமோசனமும், விமோசனம் வேண்டியவர்களும் (தேவர்கள்) இப்பாடலில் குறிக்கப்படுகின்றனர். சாபவிமோசனம் அருளியவர் மட்டும் கௌதமனுக்குப் பதிலாகச் சிவபெருமான் என்று குறிக்கப்பட்டுள்ளது. பிரம்ம புராணமும், வங்காளி ராமாயணமும், பத்ம புராணமும் சாபவிமோசனம் பெற்றதைத் தத்தம் மரபிற்கேற்பக் கூறுவதை மேலே கண்டோம்.

இங்கே காட்டிய தமிழ் மரபைக் காலவாரியாகக் காணுமிடத்து மணிமேகலை கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற்கும் கி.பி. நான்கு அல்லது ஐந்தாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் இயற்றப்பட்டது எனவும், திருஞான சம்பந்தரின் காலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதி எனவும் அறிகிறோம்.

இதனால் கி.பி.ஏழாம் நூற்றாண்டிற்கு முன்னர் இருந்த இரண்டு தமிழ் இலக்கிய மரபுகளிலிருந்து இந்திரன் பெற்ற சாபத்தையும், அதிலிருந்து அவன் பெற்ற விமோசனத்தையும் கம்பன் அறிந்திருக்கக்கூடும் எனத் துணிய நேரிடுகிறது. மேற்சுட்டிய காலகட்டங்களில் (கி.பி.4/5, கி.பி. 7ஆம் நூற்றாண்டுகள்) தோன்றிய அல்லது வழக்கில் இருந்த வேறு எந்த இந்திய இலக்கியங்களிலும் இந்தக் குறிப்புகள் இருப்பதாக இதுவரை வந்துள்ள ஆய்வுகள் எவையும் கூறவில்லை.

---

17. தேவாரத் திருப்பதிகங்கள், சென்னை: கங்கை புத்தக நிலையம், 1996, ப.1325.

எனவே இந்திரன் பெற்ற சாபத்தையும், சாபவிமோசனத் தையும், வான்மீகத்திலிருந்து முதன்முதலில் வேறுபட்டுக் கூறுவது கம்பராமாயணம்தான் எனக் கொள்ளக் கிடக்கிறது.

இனி, ஆதி ராமாயணமும், மூல வால்மீகி ராமாயணமும் கூறாததொரு சாபத்தையும், சாப விமோசனத்தையும் தமிழ் நூல்கள் எதன் அடிப்படையில் கூறுகின்றன என்னும் வினா எழுகிறது. தற்போதுள்ள நிலையில் தெளிவான விடை தென்படவில்லை. ஏதேனும் வாய்மொழிக் கதையோ, இதுவரை வெளிப்படாத தொன்மக் கூறுகளோ, பழங்குடி மக்களின் பழங்கதைகளோ இச் செய்திக்கு ஆதாரமாக இருந்திருக்கலாம். இது வெறும் யூகம்தான். அல்லது, மகாபாரதத்தில் வரும் சில குறிப்புகளும் வான்மீகத்தில் வரும் சொற்றொடர்களும் கூட இந்த மாற்றத்திற்குரிய கற்பனைக்குக் காரணமாக இருக்கலாமோ என்றும் எண்ணத்தோன்றுகிறது. அதாவது, மகாபாரத ஆதிபர்வத்தில் *(21:12)* இந்திரன் ஆயிரங் கண்ணன் என்று கூறப்படுகிறான். திலோத்தமையைக் கண்டு களிக்க வேண்டும் என்னும் ஆசையினால் தேவேந்திரன் தானே தன்னை ஆயிரங்கண்ணனாக ஆக்கிக்கொண்டான் என்று ஆதிபர்வத்தில் கூறப்படுகிறது*(203:26)*. மகாபாரத சாந்தி பருவம், கௌதமனின் சாபத்தால் இந்திரனின் தாடி வெளுத்துவிட்டது எனக் கூறுகிறது. எனவே, மகாபாரதத்தின் படி ஆயிரங்கண்ணன் என்ற பெயர் இந்திரனுக்கு அவன் சாபம் பெறுவதற்கு முன்னரேயே இருந்தது என்பது தெளிவாகிறது.

மேலும் அகலிகை வரலாறு உரைப்பதற்கு முன்னர் உள்ள பாலகாண்ட சருக்கங்களிலும், இந்திரன் சாபவிமோசனம் பெற்றதாகக் கூறும் சுலோகங்களிலும் இந்திரனை ஆயிரங் கண்ணன் என்று வடபுல வழக்கு வான்மீகமும் *(1:48:8)*, தென்புல வழக்கு வான்மீகமும் *(1:49:8)* கூறுகின்றன. ஆக ஆயிரங்கண்ணன் என்ற பெயர் இந்திரனுக்குப் பரவலாக வான்மீகத்தில் வழங்கப்படுகிறது என்பதும், சாப

விமோசனத்திற்கும் இப்பெயருக்கும் தொடர்பு எதுவும் இல்லை என்பதும் தெளிவாகின்றன.

இந்திரன் மேற்கொண்ட மாறுவேடங்கள்

இந்திரன் முதலில் அந்தணனாக வந்து அகலிகையின் விருந்தோம்பலை ஏற்றுக்கொண்டு பின்னர்க் கௌதமனாக வேடம் பூண்டு அவளை அடைந்தான் என்று மகாபாரத உத்தியோக பர்வம் (5:12:16) கூறுகிறது. கௌதம வேடம் பூண்டு அகலிகையை அணுகினான் என்று வான்மீக பாலகாண்டம் கூறுகிறது. கம்ப ராமாயணமும், தெலுகு ராமாயணங்களும், மலையாள, கன்னட ராமாயணங்களும் இவ்வாறே கூறுகின்றன. இந்திரன் தன் உண்மையான வடிவிலேயே வந்து அகலிகையின் அறிவை மயக்கி அவளை அடைந்தான் என்று கிருத்திவாசனின் வங்காளி ராமாயணம் கூறுகிறது.[18]

கௌதம முனிவரின் ஆசிரமத்திலிருந்து அவரை வெளியேற்றுவதற்காக இந்திரன் சேவல் வடிவம் கொண்டு அகால வேளையில் கூவி எழுப்பினான் எனத் தெலுகு ரங்கநாத இராமாயணமும், பாஸ்கர ராமாயணமும், தத்துவ சங்கிரக ராமாயணமும் கூறுகின்றன.

தன் கருத்தை முற்றுவித்துக் கொண்டு ஆசிரமத்திலிருந்து பூனை வடிவத்தில் வெளியேறினான் எனக் கம்பராமாயணமும் (1:6:76), பிரம்ம புராணமும் (87:44-50), பத்ம புராணமும் (சிருஷ்டி காண்டம், 51,57), கதாசரித் சாகரும் (3-17), பலராமதாஸ் ராமாயணமும் கூறுகின்றன.

தமிழ்ச் சங்க இலக்கியமாகிய பரிபாடலைப் பின்பற்றிக் கம்பன் இந்திரனின் பூனை வடிவத்தைக் குறிப்பிடுகிறான். இச் செய்தியைக் கூறும் பிற நூல்கள் எல்லாம் காலத்தால் கம்பனுக்குப் பிற்பட்டவை.

---

18. திலேஷ் சந்திரசென் பதிப்பு: புல்கே, ப.297.

அகலிகை பெற்ற சாபம்

வான்மீகம்

வடபுல வழக்கு வான்மீகத்தின்படி, ''காற்றையே உட்கொண்டு, வேறு உணவு எதுவுமின்றிச் சாம்பல் படுக்கையில் மனத் தவிப்புடன் கிடப்பாயாக'' என அகலிகை சபிக்கப்படுகிறாள். இவ்வியலின் தொடக்கத்திலே குறிப்பிட்டவாறு தென்புல வழக்கு வான்மீகம், ''காற்றையே உட்கொண்டு கல்லாய்ச் சமைந்து சாம்பல் படுக்கையில் உள்ளத் தவிப்புடன் கிடப்பாயாக'' என்று சபிக்கப்பட்டதாகக் கூறுகிறது.

வால்மீகியின் பெயரால் வழங்கும் உத்தரகாண்டம், ''கௌதமன் அகலிகையை நோக்கி, உன்னுடைய அழகு க்ாரணமாக இந்தத் தீங்கு நிகழ்ந்தது. எனவே இனிமேல் நீ மட்டும் அழகு சுந்தரியாக இருக்க மாட்டாய்; எல்லோரும் உன்னுடைய அழகைப் பகிர்ந்து கொள்வார்கள்'' எனக் கூறிச் சபித்ததாகக் கூறுகிறது (சருக்.30:37,38). அதாவது, ''பலர் உன்னைப் போன்ற அழகியராக மாறிவிடுவர்'' என்பது கருத்து.

மகாபாரதத்தில் அகலிகை சபிக்கப்பெற்ற செய்தி கூறப்பெறவில்லை. போசராசனின் சம்பு ராமாயணம் வடபுல வழக்கு வான்மீகத்தைப் பின்பற்றி, அகலிகை யார் கண்ணுக்கும் புலப்படாமல் கிடக்குமாறு சபிக்கப்பட்டதாகக் கூறுகிறது (1:90).

ஆக, காற்றையே ஆகாரமாகக் கொண்டு வேறு உணவின்றிக் கிடப்பாயாக என வடபுல வழக்கும் காற்றையே உட்கொண்டு கல்லாய்ச் சமைந்து கிடப்பாயாக எனத் தென்புல வழக்கு வான்மீகமும் கூறுகின்றன என அறிகிறோம்.

கருத்து வேறுபாட்டிற்குரிய வால்மீகியின் சுலோகங்கள் கீழ்வருமாறு காணப்படுகின்றன.

வாயு பக் ஷா நிராஹாரா தப்யந்தி பஸ்மஸாயினி
அத்ருஷ்ய சர்வபூதானாம் ஆஸ்ரமேஸ்மின் பவிஷ்யசி
(1.47:29)

என்று பரோடா பல்கலைக் கழகத் திறனாய்வுப் பதிப்பு கூறுகிறது. இது வடபுல வழக்கு வான்மீகம்.

வாதபக் ஷா நிராஹாரா தப்யந்தி பஸ்மஸாயினீ (1.48:30)

என்று முதலடியைச் சற்று மாற்றிக் கோரக்பூர் கீதா பிரஸ் வெளியிட்ட தென்புல வழக்கு வான்மீகம் கூறுகிறது.

வாயுபக் ஷா சிலாபூத்வா தப்யந்தி பஸ்மஸாயினி

(1.48:34)

என்று தர்மாலயா பதிப்பு கூறுகிறது. இதுவும் தென்புல வழக்கு வான்மீகம்.

மேற்கண்ட மூன்று பாடல்களிலும் முதல் இரு சீர்கள் (பாதங்கள்) வேறுபட்டும், இறுதி இரண்டு சீர்கள் வேறுபடாதும் வழங்குகின்றன. மூன்றாம் சீர் ''நொந்த மனமுடையவளாய் அல்லது மனத்தவிப்புடன்'' என்றும், நான்காம் சீர், ''சாம்பற் படுக்கையுடையவளாய்'' என்றும் பொருள்படும். முதல் சீரைப் பொறுத்தவரையில் மூன்று பாடங்களும் ''காற்றையே உணவாக க் கொண்டு'' என்னும் ஒரே பொருளைத் தருவன. கோரக்பூர் பதிப்பு மட்டும் 'வாயு' என்னும் சொல்லுக்குப் பதிலாக 'வாத' என்ற சொல்லைப் பயன்படுத்துகிறது. பொருள் வேறுபாட்டை விளைவிக்காத இந்தப் பாடம் கீழைத் தேவநாகரி ஏடுகளில் மட்டுமே (D_6, D_8) காணப்படுகிறது.

இரண்டாவது சீரின் பாடபேதம்தான் பொருள் வேறுபாட்டைத் தருவதாக அமைந்துவிட்டது. வடபுல வழக்காகிய பரோடா பதிப்பு 'நிராஹாரா' என்னும் சொல்லையும், தென்புல வழக்காகிய தர்மாலயா பதிப்பு 'ஷிலா பூத்வா' என்ற சொல்லையும் பயன்படுத்துகின்றன. ஆனால், தென்புல வழக்காகிய கோரக்பூர் பதிப்பு வடபுல வழக்கின் பாடத்தையே கொண்டுள்ளது. தென்புல வழக்குகளில் எல்லாத் தெலுகு ஏடுகளும், சில கிரந்த ஏடுகளும் (G4) வடபுல வழக்குப் பாடமாகிய 'நிராஹாரா' என்னும் சொல்லைக்

கொண்டுள்ளன. பரோடா பதிப்பு பாடபேதமாக 'சிலாபூத்வா' என்பதைக் கொடுத்து G1, G2, G3 என்னும் கிரந்த ஏடுகளிலும், M1, M2, ஆகிய மலையாள ஏடுகளிலும் இப்பாடம் காணப்படுகிறது என்னும் குறிப்பைத் தருகிறது. இவற்றுள் G1 கிரந்த ஏடு கொல்லம் ஆண்டு 993இல் *(கி.பி.1818)* எழுதப்பட்டது; G2 கிரந்த ஏடும் M1 மலையாள ஏடும்தாம் இதுவரை கிடைத்துள்ளவற்றுள் மிகப்பழைய தென்புல வழக்கு வான்மீக ராமாயணங்கள் என்பது தெளிவாகிறது. அதாவது கி.பி.15ஆம் நூற்றாண்டளவில் தென்னகத்தே உலாவிய வால்மீகி ராமாயணம் 'சிலா பூத்வா'என்னும் பாடத்தைக் கொண்டிருந்தது என்பது உறுதியாகிறது.

இங்கு வான்மீக ஏடுகளைப் பற்றி இவ்வளவு விரிவாகக் கூற நேர்ந்தது என்னவெனின், வடபுல வழக்குப்படி ''காற்றையே உட்கொண்டு வேறு உணவு எதுவுமின்றிச் சாம்பற் படுக்கையில் மனத்தவிப்புடன் கிடப்பாயாக'' என்று அகலிகை சபிக்கப்படுகிறாள். தென்புல வழக்காக மேலே காட்டியபடி, ''காற்றையே உட்கொண்டு கல்லாய்ச் சமைந்து... கிடப்பாயாக'' என்று சபிக்கப்படுகிறாள். வடபுல வழக்கு ஏடுகள் எல்லாமும், தென்புல வழக்கு ஏடுகள் சிலவும் 'நிராஹாரா' என்று பாடங் கொள்ள, சில தென்புல வழக்கு ஏடுகள் மட்டும் 'சிலா பூத்வா'(கல்லுருவாய்) என்னும் பாடங் கொண்டிருப்பது ஏன் என்று இதுவரை நடந்துள்ள ஆய்வால் புலப்படவில்லை. ஆகவே, வான்மீகி ராமாயணத்தைப் பொறுத்தவரையில் வடபுல வழக்கின்படி உணவின்றிக் கிடந்தாள் என்றும், தென்புல வழக்கின்படி கல்லாகிக் கிடந்தாள் என்றும் இருவகையான கருத்துகள் காணப்படுகின்றன என அறிகிறோம்.

வான்மீகத்தை அடுத்துத் தோன்றிய, சமஸ்கிருதம் மற்றும் இந்திய மொழிகளில் இயற்றப்பட்ட இராமாயணங்கள்

பலவற்றில் அகலிகை கல்லாகச் சபிக்கப்பெற்றாள் என்னும் செய்தி கூறப்படுகிறது. அவை வருமாறு:

இரகுவம்சம் (11.34), நரசிம்ம புராணம் (அத்.47), ஸ்கந்த புராணம் (ரேவா காண்டம் 136, நாகர் காண்டம் 208), ஜானகி ஹரண் (6:14), கதாசரித் சாகர் (3:17), மகா நாடகம்(3:17), உதார ராகவம்(3:29), கம்பராமாயணம் (1.9:22) இராமாயண மஞ்சரி (உத்தர காண்டம் 647-648), அசாமிய ராமாயணம் (9:466), ஆனந்த ராமாயணம் (1-3:16), கிருத்திவாச ராமாயணம் (1-59), தொரேவே ராமாயணம் (1-12), இராமசரித மானசம் (1-210), பாவார்த்த ராமாயணம் (1-14), தத்துவ சங்கிரக ராமாயணம் (1-25).[19]

பாஸ்கர ராமாயணம், மொல்ல ராமாயணம், அத்யாத்ம ராமாயணம், இராமலிங்காமிருதம் ஆகிய நூல்களும் இச்செய்தியைக் கூறுகின்றன.

> கம்ப ராமாயணம் அகலிகையின் சாபம் பற்றிக்
> கூறுமிடத்தில் மெல்லிய லாளை நோக்கி விலைமகள்
> அனைய நீயும் கல்இயல் ஆதி என்றான் கருங்கல்லாய்
> மருங்கு வீழ்வாள் (1.9:22)

என்று கௌதமன் சபித்ததாகக் கூறுகிறது.

வடமொழியில் காளிதாசன்தான் முதன்முதலில் அகலிகை கல்லாகச் சபிக்கப் பெற்றாள் என்று கூறுகிறான் என மேலே குறிப்பிடப்பட்டது. எதன் அடிப்படையில் காளிதாசன் இந்த மாற்றத்தைச் செய்தான் என அறிய இயலவில்லை; அவனே கற்பனையாகவும் இதனைக் கூறி இருக்கலாம். இனி, நரசிம்ம புராணம் காளிதாசனைப் பின்பற்றிக் கல்லான வரலாறு கூறுகிறதா அல்லது தானே கற்பித்துக் கூறுகிறதா என்றும் அறிய இயலவில்லை.

இதன் தொடக்கத்தில் சிந்திக்குமிடத்துக் கம்பன் எதன் அடிப்படையில் 'கல்இயல் ஆதி' என்று பாடினான் எனவும்

19. காமில் புல்கே, ப.302.

வினவத் தோன்றுகிறது. கம்பனுக்கு முன்னர்த் தமிழ் மரபில் இச்செய்தி வழங்கிவந்தது என்பதைப் பரிபாடல் 19ஆம் பாட்டு,

இந்திரன் பூசை இவள் அகலிகை இவள்
சென்ற கவுதமன் சினனுறக் கல்லுரு
ஒன்றிய படியிது என்று உரை செய்வோரும் (50-52)

என்று இலக்கியப்படுத்தி இருக்கக் காண்கிறோம். அகலிகை வரலாறு ஓவியமாக மாறிய நிலையில், தலைவனொருவன் தன் தலைவிக்கு இதனைக் காட்டி விளக்குவதாக இப்பாடல் அமைந்துள்ளதால் பரிபாடல் காலத்திற்கு முன்னரேயே இச்செய்தி தமிழக மக்களிடையே பரவியிருந்தது என்பது புலனாகிறது. எனவே கம்பன் தன் இலக்கிய மரபினைப் பின்பற்றி இம்மாற்றத்தைச் செய்திருக்கலாம் எனக் கருதத் தோன்றுகிறது.

வான்மீகியைப் பின்பற்றுவதாகக் கூறும் தெலுகு, கன்னட இராமாயண நூல்கள் அகலிகை கல்லான சாபச் செய்தியை இரகுவம்சம் முதலான வடமொழி நூல்களைப் பின்பற்றிக் கூறுகின்றனவா அல்லது கம்பனை அடியொற்றிக் கூறுகின்றனவா என்று அறிய இயலவில்லை. கம்பனே பரிபாடலைப் பின்பற்றிக் கூறுகின்றானா, ஏதேனும் நாட்டுப்புற வழக்கைப் பின்பற்றிக் கூறுகின்றானா அல்லது நரசிம்ம புராணத்தைப் பின்பற்றிப் படைத்துள்ளானா என்று துணிய இயலவில்லை. எது மூலமாயினும், வடமொழி தவிர்ந்த பிறமொழி இராமாயணங்களில் தமிழில் எழுந்த கம்பராமாயணம் தான் முதன்முதலாகக் கல்லுருவெய்திய செய்தியைத் தருகிறது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இனி, சில தென்புல வழக்கு வான்மீகி ராமாயணங்கள் கல்லாகச் சபிக்கப் பெற்ற செய்தியை எதன் அடிப்படையில் சேர்த்தன என்னும் வினா எழுகிறது. பரோடா பதிப்பு இந்தச் செய்தி தென்னக ஏடுகளுக்கு உரியது என்று குறிப்பிடுகிறது.

இரகுவம்சத்தையோ, நரசிம்ம புராணத்தையோ அல்லது ஜானகி ஹரணத்தையோ பின்பற்றி இவை இந்த மாற்றத்தைச் செய்திருக்கலாம் என்று கொள்ளுவதற்கில்லை. ஏனெனில், இவ்வடமொழி நூல்களை வடபுல வழக்கு வான்மீகங்களே பின்பற்றவில்லை; தென்புல வழக்கு வான்மீகங்களிலும் தெலுகு மொழி வான்மீகங்களும், கிழைத் தேவநாகரி வான்மீகங்களும் பின்பற்றவில்லை. அவ்வாறிருக்க, தமிழகத்தே வழங்கிய கிரந்த வான்மீகங்களும் (G1,2,3) மலையாள வான்மீகங்களில் சிலவும் (M1, M2) இந்த வேறுபாட்டைப் புகுத்திய காரணம் என்ன என்னும் வினா எழுகிறது. வேறு தெளிவான ஆதாரத் தகவல்கள் கிடைக்கும் வரை தென்னகத்திலும், குறிப்பாகத் தமிழகத்திலும் பெயர்த்தெழுதப்பட்டு வராநின்ற வான்மீக ராமாயணங்கள் கம்பராமாயணத்தைப் பின்பற்றி அகலிகை கல்லாகச் சபிக்கப்பட்ட செய்தியை, 'நிராஹாரா' என்னும் சீருக்குப் பதிலாக 'ஷிலாபூத்வா' என்ற பாடத்தைத் தந்து புகுத்தின என்று துணிய வேண்டியுள்ளது.

'வாயு பக் ஷா' என்றபோதே 'காற்றை உணவாகக் கொண்டு' என்னும் பொருள் தருவதால் ஆகாரம் எதுவுமின்றி எனப் பொருள்படும் 'நிராஹாரா' என்ற சொல் மிகையாகப் படுகிறது. இதனாலும் கல்லுருவாய் என்னும் கூடுதல் செய்தியாலும் இந்தப் பாடத்தை இவை ஏற்றுக்கொண்டிருக்க லாம் எனத் தோன்றுகிறது. இவ்வகையில் கம்பன் கருத்து வான்மீகம் பாடமாக மாறியிருக்கலாமோ என்னும் ஐயம் வலியுறுகிறது.

சாபவிமோசனம்

மகாபாரதத்தில் அகலிகை சபிக்கப்பெற்ற செய்தி கூறப் பெறவில்லை; எனவே, சாப விமோசனம் பற்றிய குறிப்பும் இடம்பெறவில்லை.

இராமன் மூலமாக அகலிகை சாப விமோசனம் பற்றிய குறிப்பும் இடம்பெறவில்லை.

இராமன் மூலமாக அகலிகை சாப விமோசனம் பெற்ற செய்தியை வால்மீகி ராமாயணம் விளக்கமாகக் கூறுகிறது.

> கௌதமனின் சாபம் காரணமாக மூன்று உலகில் உள்ள யாவராலும் காணப்படாமல் அருவமாய் இருந்த அகலிகை சாபமுடிவில் இராமலக்குவர்களுடைய கண்களுக்குத் தன் பழைய உருவத்தில் தென்பட்டாள்

என்று வடபுல வழக்கு வான்மீகமும் (I.48:15-16), தென்புல வழக்கு வான்மீகமும் (I.49:18) ஒன்றுபோலக் கூறுகின்றன.

அகலிகையைச் சபித்த உடனே, அவளுடைய வேண்டுகோள் இன்றியே, இராமன் இந்த ஆசிரமத்திற்குள் வந்ததும் நீ தூய்மையடைந்து அவன் கண்களுக்குப் பழைய உருவுடன் புலப்படுவாய் என்று சாப விமோசனம் தரப்படுவதாக இருவகை வழக்கு வான்மீகங்களும் கூறுகின்றன (I.47:30,31), (I:48:35). அதாவது, 'கல்லாய் மாறிக் காற்றையே உட்கொண்டு யார் கண்ணுக்கும் புலப்படாமல் சாம்பற் படுக்கையில் கிடப்பாயாக' என்று சபிக்கப்பட்டதாகக்

கூறும் தென்புல வழக்கு (தர்மாலயா பதிப்பு) வான்மீகம் கூட இராமனின் பாதத்துளி பட்டதும் அகலிகை கல்லுருவம் நீங்கிச் சாபவிமோசனம் பெற்றாள் என்று கூறவில்லை.

> "பிழைத்தது பொறுத்தல் என்றும் பெரியவர் கடனே; அன்பால் முடிவு இதற்கு அருளுக" என்று அகலிகை வேண்ட,

"தசரத ராமன் என்பான் கழல்துகள் கதுவ இந்தக் கல்லுருத் தவிர்தி" எனக் கௌதமன் சாபவிமோசனம் அருளியதாகக் கம்பராமாயணம் கூறுகிறது (I.9:23).

கல்லாகச் சபிக்கப்பட்டாள் என்று கூறும் இராமாயண நூல்கள் எல்லாம், இராமனின் பாதம் பட்டதும் அகலிகை மீண்டும் தன் பழைய உருவத்தை அடைந்தாள் என்றே கூறுகின்றன. காட்டாகக், கம்ப ராமாயணம், தெலுகு

ராமாயணங்கள், தொரேவே ராமாயணம், மகா நாடகம், ஆனந்த ராமாயணம், உதார ராகவம் போன்றவற்றைக் கூறலாம்.

தென்புல வழக்கு வான்மீகம் 'கல்லாய் மாறி' என்று பொருள்படும் 'சிலா பூத்வா' என்னும் பாடத்தை மூலத்திலேயே கொண்டிருந்தால், மேற்காட்டியபடி சாப விமோசனம் கூறியிருக்க இயலாது. ''சிலா பூத்வா'' என்று சாபத்தைத் திருத்தியவர்கள் சாபவிமோசனத்தையும் திருத்த மறந்தனர் போலும். எனவே மேலே கருத்துரைத்தபடி, இந்தப் பாடம் கம்பராமாயணத்தின் செல்வாக்கால் G1, G2, G3 , M1, M2 ஆகிய கிரந்த, மலையாள லிபி வான்மீக ஏடுகளில் சுமார் கி.பி 15ஆம் நூற்றாண்டளவில் அல்லது அதற்குச் சற்று முன்னர் மாற்றப்பட்டிருக்கலாமோ என்னும் ஐயம் மேலும் வலுவடைகிறது. தன் மூலத்தையே திருத்தும் இத்தகைய இலக்கிய எதிர்த் தாக்கம் (counter influence) வியப்பூட்டுவதாகவும் வேறெங்கும் காணாததாகவும் உள்ளது.

சாப விமோசனம் நிகழ்ந்த இடம்

பெரும்பாலான ராமாயணங்கள் இராமன் முதலானோர் தாடகை வதத்திற்குப் பின்னர் மிதிலை செல்லும் வழியில் அகலிகைக்கு விமோசனம் நிகழ்ந்ததாகக் கூறுகின்றன.

ஆனால் சில இராமாயணங்கள் இந்த நிகழ்ச்சி இராமனின் வனவாச காலத்தில் நடந்ததாகக் கூறுகின்றன. இராமன் அகத்திய முனிவரிடமிருந்து விடைபெற்றுச் செல்லும்போது வழியில் அகலிகை விமோசனம் பெற்றதாக மகா நாடகம் கூறுகிறது. (அங்.3) சீதையைத் தேடி அலைந்தவாறே காடுகள் வழியாகச் செல்லுகையில் இராமனின் பாதம் பட்டு அகலிகை விமோசனம் பெற்றதாக இராமலிங்காம்ருதம் கூறுகிறது. (சருக்.6) ஆனந்த ராமாயணம், காஷ்மீர ராமாயணம் போன்றனவும் வனவாச காலத்தில் சாப விமோசனம் நிகழ்ந்ததாகக் கூறுகின்றன.[20]

---

20. காமில் புல்கே, ப.305.

(c) அகலிகைப்புதிர்

வால்மீகியின் காப்பியத்தில் வரும் கிளைக்கதைகள் பலவற்றுள் அகலிகையின் கதையும் ஒன்று. பௌத்த, ஜைன இராமாயணங்கள் அகலிகை வரலாற்றை முழுமையாக நீக்கிவிட்டன. பெரும்பாலான தென்கிழக்காசிய இராமாயணங்களுள் அகலிகையின் கதை காணப்பெறவில்லை. ஏனைய இந்திய மொழிகளில் இயற்றப்பட்ட எல்லா இராமாயணங்களிலும் அகலிகை வரலாறு காணப்படுகிறது.

தமிழ்மொழியைப் பொறுத்தவரையில் கம்பன் தன் காப்பியத்துள் இக்கதையைக் கூறுகிறான். கம்பனுக்குப் பின்னர் அவன் காப்பியத்தின் சுருக்கமாக எழுந்துள்ள தக்கை ராமாயணத்துள் அகலிகைப் படலம் என்ற தலைப்பு மட்டும் காணப்படுகிறது. அதன்கீழ் உள்ள பாடல்கள் எல்லாமே சிதைந்துவிட்டன என்று பதிப்பாசிரியர் கூறுகிறார்.

இந்த நூற்றாண்டின் தொடக்கம் முதல் பல படைப்பாசிரியர்கள் அகலிகை கதையைப் புதுமையாகப் படைத்துள்ளார்கள். வெள்ளக்கால் ப. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் அகலிகை வெண்பா என்ற நூலைப் படைத்துள்ளார். அவருக்குப் பின்னர் ச.து.சு.யோகியார் அகல்யா என்னும் தலைப்பில் ஒரு கவிதைக் கோவையாகப் படைத்துள்ளார். அவரையடுத்துச் சிறுகதை மன்னன் என்று போற்றப்பெறும் புதுமைப்பித்தன் அகலிகை தொடர்பாக இரண்டு சிறுகதைகளைப் படைத்தளித்துள்ளார். அவற்றுள் சாபவிமோசனம் என்னும் சிறுகதை குறிப்பிடத்தக்கது. கோவி ராமாயணத்திலும் அகலிகை கதை இடம்பெற்றுள்ளது. இவை தவிர இன்னும் பல படைப்புகள், சிறியனவும் பெரியனவுமாய்த் தமிழில் தோன்றியுள்ளன. மொழி பெயர்ப்பின் மூலமாகவும் அகலிகைப் படைப்புகள் தமிழுக்கு வந்துள்ளன. அவற்றுள் துவிஜேந்திரலால் ராய் என்னும் வங்க எழுத்தாளர் இந்தியில் எழுதிய நாடகத்தைத் தமிழாக்கம் செய்துள்ள முல்லை முத்தையாஅவர்களின் அகலிகை என்னும்

நூலைக் குறிப்பிடலாம். இந்த நாடகம் கடந்த நூற்றாண்டின், நாற்பதுகளில் இயற்றப்பட்டது. ஏறக்குறைய சாபவிமோசனம் எழுந்த காலகட்டத்திற்கு இந்த நாடகம் சமகாலப் படைப்பு என்று கூறலாம்.

வான்மீகத்திற்குப் பிறகு சுமார் 1500 ஆண்டுகட்குப் பின்னர் எழுந்தது கம்பனின் காப்பியம். கம்பனுக்குப் பின்னர் ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகள் கழித்து எழுந்தவை ஏனைய படைப்புகள். இவ்வாறு வேறுவகையான காலகட்டங்களில் எழுந்துள்ள அகலிகைப் படைப்புகள் தத்தம் காலப் பண்பாட்டிற்கேற்பப் பல மாற்றங்களைப் பெற்றிருக்கக் காண்கிறோம்.

வான்மீகியின் அகலிகை தன்னை நாடி வந்திருப்பவன் இந்திரன் என அறிந்து, தேவர்களின் தலைவனே தன்னை விரும்பி வந்திருக்கிறான் எனப் பெருமைப்பட்டு அவனுடைய தேஜஸ்வியில் ஈடுபட்டு மயங்கி அவனை வரவேற்று, அவன் விருப்பத்தை நிறைவேற்றித் தானும் மிகவும் மகிழ்ந்தவளாய், அவனுடைய அன்புக்கு நன்றி தெரிவித்து, உடனே அங்கிருந்து விலகிச் சென்று தன் மானத்தையும் அவன் கவுரவத்தையும் காத்துக்கொள்ளுமாறு கூறுகிறாள். இந்திரனும் சிரித்தவாறே 'அழகிய ஜகனமுடையாய், மிகவும் திருப்தியடைந்தவனாக, வந்த வழியே திரும்பிச் செல்கிறேன்'', எனக் கூறி வெளியே வந்தவன், ஆசிரமம் நோக்கி நீராடிவரும் கௌதம முனிவரைக் கண்டதும் நடுங்கித் தலைகுனிந்தான். ரிஷி வேடந்தாங்கிய வனை இன்னானென உணர்ந்த கௌதமன் வெகுண்டு, 'சூதிய சிந்தையுள்ளவனே, என் உருவம் எடுத்துச் செய்யத்தகாததைச் செய்த நீ ஆண்மையிழந்தவனாவாய்'' எனச் சபித்தான். பின்னர் அகலிகையை நோக்கி, ''நீ ஆயிரமாண்டுகளாக இங்கேயே கல்லாய்ச் சமைந்து, காற்றையே ஆதாரமாக உட்கொண்டு, உள்ளத்தவிப்புடன் புழுதி மூடி, எவ்வுயிர்க்கும் புலப்படாத வளாகக் கிடப்பாயாக. எக்காலத்தே தசரத இராமன் இந்தக் காட்டிற்கு வருகிறாரோ அப்போது தூய்மையடைந்து,

அவருக்கு அதிதி பூசை இயற்றி அறந்துறந்த ஆசையை ஒழித்துக் கண்மூடித்தனம் நீங்கி, உன் சொந்த வடிவம் பெற்று, என்னை வந்து அடைவாய்'' எனக் கௌதமன் சபித்தான். இராமன் ஆசிரமத்துள் நுழைந்ததும் அதுவரை யாருக்கும் புலப்படாமல் இருந்த அகலிகை அவன் கண்களுக்குப் புலப்பட்டாள். அப்போது இராம இலக்குவர்கள் இருவரும் அவள் பாதங்களில் வீழ்ந்து வணங்கினர். கௌதமர் கூற்றை நினைவு கூர்ந்த அகலிகை அவர்கட்கு அதிதி பூசை செய்து மகிழ்வித்தாள். அப்போது அங்கு வந்த கௌதமரின் ஆசியையும் உபசரிப்பையும் பெற்று மகிழ்ந்தவர்களாய் மூவரும் மிதிலை நோக்கிச் சென்றனர். (SR. I.48)

கம்பன் காப்பியத்தில் வரும் அகலிகை, கோதம வேடத்தில் வந்த இந்திரனைக் கௌதமன் என்றே கருதி அவன் விருப்பத்திற்கு உட்பட்ட பின்னர் உறவின்போது 'இவன் கௌதமன் அல்லன்' என்று உணர்ந்தாளாயினும் இச்செயல் தனக்குத் தக்கதன்று என்று எண்ணவில்லை. மாறாகத் தானும் விரும்பி அவனுக்கு உடன்பட்டவளாக இருந்தாள். 'சூஒக்க உண்டிருத்தலோடும் உணர்ந்தனள், தக்கதன்று என்ன ஓராள், தாழ்ந்தனள் இருப்ப'' என்னும் தொடர்கள் கம்பனின் அகலிகை நிலையை விளக்குகின்றன. மிதிலை நோக்கி மூவரும் சென்றுகொண்டிருக்கையில் ஓர் ஆசிரமத்துக்குள் நுழைய, இராமனின் திருப்பாதத் துகள் பட்டு வழியில் கிடந்த ஒரு கல் பெண்ணுருவாக மாறிட, அவள் வழியின் ஒரு புறத்தே ஒதுங்கி நிற்கிறாள். இதனைக் கண்டு பெரிதும் வியப்பெய்திய இராமனை நோக்கி விசுவாமித்திரன், இவள் அகலிகை, கௌதம முனிவரின் மனைவி என்றான். அதனைக் கேட்ட இராமன், ''என்னே இவ் உலகத்து இயற்கை! அன்னை போல்வாளுக்கு இத்துன்பம் ஊழ்வினையால் நேர்ந்ததா, அன்றி இம்மைக் குற்றங்களால் நேர்ந்ததா என்று வினவ, இந்திரனால் அகலிகை குற்றப்பட்ட வரலாற்றையும், அதனால் ஆயிரம் மாதர்க்குள்ள அறிகுறி உனக்குண்டாக என்று இந்திரனையும், கல்லியல் ஆதி என்று அகலிகையையும்

கௌதமன் சபித்த வரலாற்றையும் விசுவாமித்திரன் விளக்கிக் கூறுகிறான். இவ்வரலாற்றைக் கேட்ட இராமன், ''அன்னையே சென்றது குறித்து வருந்தல் வேண்டா; மாதவன் கருணைக்குப் பாத்திரமாகும் வண்ணம் நடந்துகொள்வாயாக. போய்வருக'' என்று அருளுடன் கூறியதும் அகலிகை அவனை வணங்கிக் கௌதமனின் இல்லம் நோக்கிச் சென்றாள் (*1.9:14-25*).

வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியாரின் அகலிகை வெண்பாவில் வரும் அகலிகை தன்பால் எத்தகைய குற்றமும் நேராதவளாகக் காட்டப்படுகிறாள். கௌதம முனிவரை வஞ்சமாக வெளியேற்றிய பின்னர் இந்திரன் கௌதம வேடத்தில் அகலிகையை அணுகுகிறான். தன் கணவன் என்றே உணர்ந்த அகலிகை அவனை மகிழ்ந்து வரவேற்கிறாள். எனினும் அவன் தன் கையைப் பற்றியதுமே தன் கணவன் அல்லன் என்று உணர்ந்துகொண்டதும் அந்த வேடதாரியிட மிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள முயல்கிறாள்; தன்னை விட்டுவிடுமாறு அவனைப் பலவாறாக மன்றாடுகிறாள். எனினும் அவனிடமிருந்து விடுபட இயலாத நிலையை உணர்ந்ததும் மயக்கமுற்று, தன் நினைவிழந்து பிணம்போல விழுந்துவிடுகிறாள். உணர்வற்ற நிலையில் மயங்கியிருக்கும் அகலிகையிடம் தன் கருத்தை நிறைவேற்றிக்கொண்ட இந்திரன் வெளியேறுகிறான். கௌதம முனிவரின் சாபம் இருவரையும் பற்றுகிறது. தனக்கேற்பட்ட விபத்தையும் அதனால் விளைந்த அவமானத்தையும் நினைத்து வருந்துவதைவிடக் கல்லாக, ஜடமாகக் கிடப்பதேமேல் என்று கருதி அகலிகை தன் கணவனின் சாபத்தை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கிறாள்.

ச.து.சு.யோகியாரின் அகல்யா 500 அடிகளைக்கொண்ட ஒரு சிறு காப்பியம். ஏனைய கதைகளைப் போலன்றி யோகியாரின் கதை அகலிகையின் முன்னைய வாழ்க்கையை யும் தருகிறது. இது பெரும்பாலும் பிற்காலத்தே எழுந்தகதை. இதன்படி இந்திரனும் அகலிகையும் இளம் வயதில்

காதலர்களாக இருந்தனர். பிரம்மாவின் மகளாக அகலிகை காட்டப்படுகிறாள். அழகில் சிறந்த தன் மகளை மணக்க விரும்புபவனுக்கு ஒரு நிபந்தனை விதிக்கிறான் பிரம்மா. அதன்படி, 'யார் ஒருவன் இந்த உலகத்தை மிக விரைவில் சுற்றி முதலில் வருகிறானோ அவனுக்கே அகலிகை உரியவள்' என்று கூறுகிறான். இந்திரன் உடனே ஈரேழு உலகங்களையும் மிக வேகமாக மேகங்களினூடே சுற்றத் தொடங்குகிறான். கௌதமனோ புனிதப் பசுவை அமைதியாகச் சுற்றிவந்து நிற்கப் பிரம்மனும் அகலிகையை அவனுக்கு மனைவியாகத் தந்துவிடுகிறான்.

மனைவியானதும் அகலிகை தன் காதலை மறந்துவிட்டுத் தன் கணவனுக்குத் தக்க பணிவிடைகளைச் செய்துகொண்டு மகிழ்ச்சியாக இல்லறம் நடத்துகிறாள். காதலை மறவாத இந்திரன் கௌதமனுடன் பகைமைகொண்டு தக்கதருணம் பார்த்திருக்கிறான். பலமுறை அகலிகையிடம் வந்து தன் காதலை வெளிப்படுத்துகிறான். அவனுடய முறையீடுகளால் மனம் நொந்த அகலிகை,

> *''நான் கற்பின் கனலாக இருக்கிறேன். காமப் புழுவாகிய நீ என்னிடம் காதலுறவைப் பேசலாமா? கணவனையே தெய்வமாகப் போற்றும் என்னிடம்வந்து முறையிடும் நீ இந்திரனானால் என்ன? சந்திரனானால் என்ன?''*

என்று அவனைப் பழித்துரைக்கிறாள். எனினும் அகலிகையை மறக்க இயலாத இந்திரன், சூழ்ச்சி செய்து கௌதமனை வெளியேற்றிவிட்டு அவன் வடிவத்தோடு அவளை நெருங்குகிறான். உறக்கத்தில் இருந்த அகலிகையை மருவும் இந்திரனைத் தடுப்பார் யாருமில்லை. அவளும் அவனைத் தன் கணவனாகவே நினைத்துக் கூடி மகிழ்கிறாள். இந்நிலையில் அங்குவந்த முனிவன் இருவரையும் சபித்துவிடு கிறான். அகலிகை கல்லாகிறாள்.

இராமன் பாதம் பட்டதும் பழைய உருப் பெற்ற அகலிகையைக் கௌதமன் ஏற்றுக்கொள்ள மறுக்கிறான். இராமன் கௌதமனைப் பார்த்து, ''அகலிகையைப் பொறுத்த வரையில், அவளை அணுகியவன் நீயே. மருவியவன் நீயே. உன்னைத் தவிர யாரையும் அவள் நினைக்கவில்லை. அவளுக்குக் கிடைத்த தண்டனையே மிகுதி'' என்று கடிந்து உரைக்கவே கௌதமன் இராமனிடம் மன்னிப்புக் கோரி அகலிகையைத் தன்னுடன் அழைத்துச் செல்கிறான்.

புதுமைப்பித்தனின் சாபவிமோசனம் அகலிகையின் சாப விமோசனத்துடன் தொடங்கி, அதாவது கல்லாக இருந்தவள் மனித வடிவமாக மாறுவதில் தொடங்கி, மீண்டும் சாப நிலைக்கு மீள்வதில், அதாவது அகலிகை மீண்டும் கல்லாகத் தன்னைத் தானே மாற்றிக்கொள்வதில் முடிகிறது. இராமனால் பழைய உருவம் பெற்றதும் கணவன் மனைவியாக இருவரும் வாழத் தொடங்குகின்றனர். கௌதமனின் உள்ளத்தே சந்தேகம்,சஞ்சலம் எதுவுமில்லை. ஏதோ ஒரு வெறுமைத் தன்மை மட்டும் அவன் உள்ளத்தே தொடர்ந்து நிலவுகிறது. அகலிகை கௌதமனுடன் முன்பு போலவே வாழ்ந்தாலும், எந்த ஆணைக் கண்டாலும் அவளுக்குச் சந்தேகம் ஏற்படுகிறது. இந்திர நாடகத்தை அவள் மறக்க இயலவில்லை. மிதிலையை விட்டு அயோத்தி சென்று அமைதியாக வாழ நினைக்கிறாள். அங்குச் சென்றதும் முடிசூட்டும் விழா முடிதுறக்கும் விழாவாக முடிந்ததைக் கண்டு மீண்டும் மிதிலை திரும்புகின்றனர். இருவர் உள்ளத்திலும் ஏதோ சுமை அழுந்தியுள்ளது. நெஞ்சினால் பிழைசெய்யாதவிடத்துப் பாவம் இல்லை என்று கௌதமன் கூறுகிறான். தான் அகலிகையைச் சபித்ததும் மிகையோ என்று கருதுகிறான். ஆனால், 'ஏமாற்றப்பட்டு வஞ்சிக்கப்பட்டோம்' என்று நினைக்கிறாள் அகலிகை. எனினும் பிற பெண்கள் 'இவள்தான் அகலிகை' என்று சுட்டிப் பேசுமிடத்து மனம் புழுங்குகிறாள். சாபவிமோசனம் பெற்றாலும் பாப விமோசனம் கிடையாதா என்று ஏங்குகிறாள்.

சீதை, வனவாசம் முடிந்து திரும்பியதும், இராமன் தீக்குளிக்கக் கூறியதைச் சீதையின் வாயிலாகக் கேட்டுச் சினமுற்ற அகலிகை, ''இது என்ன அகலிகைக்கு ஒரு நீதி, சீதைக்கு ஒரு நீதியா?'' என்று வினவுகிறாள். 'ஆண்கள் எல்லோருமே ஒரே தன்மையானவர்களா?' என்று நினைத்துநெஞ்சம் பொருமுகிறாள். எனவே இராமனைப் பார்க்கவும், வழியனுப்பவும் குடிசையை விட்டு அகலிகை வெளியே வரவில்லை. இந்தப் புறக்கணிப்பு இராமனைச் சுடுகிறது. ''உலகினர்க்கு மெய்ப்பிப்பதற்காக இராமன் இவ்வாறு செய்தான்'' என்று சீதை கூறும்போது, ''உண்மை எதற்காக மெய்ப்பிக்கப்பட வேண்டும்? உணர்ந்தால் போதாதா?'' மெய்ப்பிக்கப்படுபவை எல்லாம் உண்மையாகிவிடுமா? சரி, உலகம் என்பதுதான் என்ன? என்றெல்லாம் கோபத்துடன் கேட்கிறாள்அகலிகை.

இராமனும் சீதையும் சென்ற பின்னர்க் கௌதமன் சிந்திக்கிறான்: இந்த வெறுமையை நீக்கி அகலிகை மீண்டும் மகிழ்ச்சியாக வாழ ஒரு குழந்தை இருந்தால் நல்லதல்லவா என்று கருதிக் குடிசைக்குள் நுழைந்து அகலிகையை அணுகுகிறான். அகலிகைக்கு இந்திர நாடகம் மீண்டும் மனத்திரையில் நிழலாடுகிறது. கௌதமன் இந்திரனாகவே அவளுக்குத் தோன்றுகிறான். அகலிகையின் நெஞ்சு மீண்டும் குமுறுகிறது; கல்லாய் மாறுகிறது; கௌதமன் அரவணைப்பில் ஒரு கல் கிடந்தது. அகலிகை மீண்டும் கல்லானாள். அவளுடைய மனச்சுமை மடிந்தது. புதுமைப்பித்தனின் கதையும் இங்கே முடிகிறது.

புதுமைப்பித்தன் கதையிலும் கௌதமன் பசுவினால் அகலிகையை வஞ்சித்து மணந்துகொள்கிற குறிப்பு காணப்படுகிறது. அதை நினைத்து அவன் வருந்துவதாகக் காட்டப்படுகிறது. உள்ளம் படியாத உடற்குற்றம் குற்றமல்ல என்னும் கொள்கையைக் கூறுகிறான். பரதன் தர்மத்துக்கு மட்டுமே கட்டுப்படுவான் என்னும் கைகேயியின் கூற்றை

மறுத்து, 'மனிதருக்குக் கட்டுப்படாத தர்மம் மனித வம்சத்துக்குச் சத்துரு'' என்னும் கொள்கையை முன்வைக்கிறாள் அகலிகை. கணவன் மனைவி இருவருமே குழம்பிய மனநிலையில் உள்ளனர். இருவரும் புதுக் கொள்கைகளை முன்வைத்தாலும் உள்ளத்தில் அமைதியற்றுப் புலம்புவதும் உலகத்தின் மேல் வெறுப்புக்கொள்வதும், தர்மத்தின் மீது சினந்துகொள்வதும் ஏன்? கதையில் விடையில்லை. மரபு எதிர்க்கப்படுகிறது; கண்டிக்கப்படுகிறது. ஆனால் அதற்குப் பதிலாக ஒரு புதுமையை உண்டுபண்ணக் கதையால் இயலவில்லை.

ஏறக்குறைய புதுமைப்பித்தனின் காலத்தே வாழ்ந்தவராகிய துவிஜேந்திரலால் ராயின் அகலிகை என்னும் நாடகத்தில், அகலிகை தெரிந்தே தேவேந்திரனை விரும்புகிறாள். தன் கணவனைப் பிரிந்து, தன் மகனைக் கொன்றுவிட்டு இந்திரனுடன் ஓடிப் போகிறாள். பல காலம் இந்திரனுடன் வாழ்ந்த பின்னர் இந்திரன் அவளைத் துறந்துவிட்டுத் தேவருலகம் செல்ல முயலும்போது அகலிகை அவனைக் கத்தியால் குத்திக் காயப்படுத்திவிட்டு மலைகளுக்கிடையே தவஞ்செய்து அமைதிபெற ஓடிவிடுகிறாள்.

தவறு செய்த இந்திரனையோ, அகலிகையையோ கௌதமன் சபிக்கவில்லை. இருவரும் தம் குற்றத்தை ஒப்புக்கொள்கின்றனர். கௌதமன் இருவரையும் மன்னித்து விடுகிறான். குத்துப்பட்ட தேவேந்திரனுக்குத் தன் குடிசையில் மருத்துவம் செய்து காயம்ஆறியதும் தேவருலகு செல்ல உதவுகிறான். தன் மகனால் வெறுத்து ஒதுக்கப்பட்ட அகலிகை தன் கணவனையும், சமுதாயத்தையும், ஆண்களையும் சாடிப் பேசுகிறாள். தன் குற்றத்திற்குக் கௌதமன் (பொருந்தாக் கணவனாய் இருந்தமை) ஒரு காரணம்; இந்திரன் (ஆசைகாட்டிப் பின்னர்க் கைவிட்டமை) ஒரு காரணம். உலகமும் தர்மமும் அவர்களைப் பழிக்காமல் தன்னை மட்டும் பாவியாகக் கருதுவானேன் என்று பழித்துரைக்கிறாள்.

இராமன் அகலிகையைச் சந்திக்குமிடத்து அவளுக்குத் தக்க அறிவுரை கூறுகிறான். பெண்கள் தங்கள் கற்பைத் தாங்களே காத்துக்கொள்ளவேண்டும். நீ இந்திரனால் ஏமாற்றப்பட்டவள். ஆயினும், தெரிந்து இசைந்து அவனுடன் சென்றதால் குற்றப்பட்டவள். எனவே அதற்குரிய தண்டனை அடையும்போது பொறுமையுடன் சகித்துக்கொள்ளவேண்டும். சகிப்புத்தன்மையில்லாமல் சமுதாயத்தையும், மற்றவர்களையும், தர்மத்தையும் குறைகூறுவது அறமாகாது என்று கூறியதும் தெளிந்த மனத்தை உடையவளாய் அவனை வணங்கி வாழ்த்தி விடைபெற்றுக் கௌதமன் அடியில் வீழ்ந்து மன்னிக்குமாறு வேண்டுகிறாள். மன்னிப்புக்குத் தகாதவள், பாவி என்று மகன் சதானந்தன் தடுக்கிறான். அப்போது அவனை இடைமறித்த கௌதமன் அகலிகையை நோக்கி, 'சூநீ வருந்தாதே, உன்னைதான் எப்போதோ மன்னித்துவிட்டேன். என் கடமையிலிருந்து நானும் தவறியவன் ஆதலால், நான் உனக்குத் தண்டனை வழங்கத் தகுதியற்றவன். நாம் இருவரும் தத்தம் பொறுப்புகளை உணர்ந்து, நடந்தவற்றை மறந்து ஒன்றிவாழ்வோம்;வருந்தாதிரு'' என்று கூறி அவளைப் புதிய ஆர்வத்துடன் அணைத்துக்கொள்கிறான்.

தன் பொறுப்பினையும், வாழ்க்கையின் பல்வேறு சிக்கல்களையும் உணர்ந்து முதிர்ச்சியுற்ற உள்ளத்தனாய் இந்தக் கௌதமன் காணப்படுகிறான். சகிப்புத்தன்மையுடன், கருணையுள்ளமும் பரந்த சமத்துவ நோக்கமும் உடையவனாய்ப் படைக்கப்பட்டுள்ள இந்த நாடகத்தில் அகலிகை விபத்துக்குள்ளாயினும், அறிந்தே குற்றப்பட்டாளாயினும், அவளோ, இந்திரனோ சபிக்கப்பெறவில்லை. மாறாகக் கௌதமன் இந்திரனுக்குச் சிகிச்சைச் செய்து உயிர் பிழைக்க வைக்கிறான். தன் மனைவியை அன்புடன் மீண்டும் ஏற்றுக்கொள்கிறான். சிக்கலும் தீர்வும் மனிதநேயத்துடன் அணுகப்படும் இந்த நாடகத்தில் ஒருபால் கோடாத புதுமை கற்பனையாயினும் கசப்பில்லாதது, வரவேற்கத்தக்கது என்று கூறலாம். கோவிராமாயண அகலிகை, இந்திரன் விருப்பத்

திற்கு உடன்படவில்லை. அவளால் வெளியேற்றப்படுகிறான். இந்திரனை ஆண்மையிழக்குமாறும் சபித்துவிடுகிறாள் அகலிகை. அப்போது அங்கு வந்த கௌதமன் அகலிகையைக் கல்லாய்ப் போவாய் என்று சபிக்கிறான். சாபத்தினின்று கழுவாய் வேண்டுமென்று கோவியின் அகலிகை கேட்கவில்லை. மாறாக, ''இராமனின் பாதவிரல் படுமேஆயின் பவித்திரம் அடைவேன்'' என்று தானே சாபவிமோசனம் கூறிக்கொள்கிறாள். உன் சாபத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆண்மகனாய் இனிமேல் வாழ்வீர்'' என்று அகலிகை கூறுவதிலிருந்து, அகலிகையின் நடத்தைக்குக் கோதமன் காரணமாக்கப்படுவதை உணரலாம்.

இராமனின் பெருவிரல் பட்டதும் சாபம் நீங்கிப் பழைய உருவம் பெற்ற அகலிகை இராமனையும் கோசிகனையும் வணங்கி நிற்கிறாள். அப்போது அங்கு வந்த கோதமன் சாபவிமோசனம் பெற்ற அகலிகையைப் பழைய உருவில் கண்டு மகிழ்ந்து தன்னோடு வருமாறு அழைக்கிறான். அவளோ, ''இனியுனக்கு என் தொடர்பு, எந்தவித நியாயம்? நீ யாரோ நான் யாரோ'' எனக் கூறி அவனுடன் செல்ல மறுத்துவிடுகிறாள். இதனைக் கேட்டு வெகுண்ட கோதமன் அவளை மீண்டும் கல்லாய்ச் சபித்துவிடுவதாகக் கூற, ''எப்போது முதலில் கல்லாய்ச் சபிக்கப்பட்டேனோ அப்போதே என் முற்பிறவி அழிந்துவிட்டது. இப்போது நான் பெற்றுள்ள புதிய பிறவி இராமபிரானால் தரப்பட்டது. அவனுக்கே நான் அடிமை செய்வேன். முன்பிறவியில் உன்னிடம் என்ன பயன் கண்டேன்? என் குறையை ஒருநாளும் எண்ணியதோ நெஞ்சம்? ஏதுமிலா பேடிமையால் காமமது பஞ்சம்'' என்று கூறி அகலிகை கௌதமனைக் கல்லாய்ச் சபித்துவிடுகிறாள். ''சாபத்திற்குக் கழுவாய் கூறி அருள்க'' என்று இராமன் வேண்ட, ''நான் இவரிடம் சாபவிமோசனம் கெஞ்சிக் கேட்டேனா? சீதை மிதிலையிலிருந்து அயோத்தி செல்லும்போது கௌசிக நதியில் இறங்கும் வழியில் கல்லாய்க் கிடக்கும் கோதமன் மீண்டும் தம் உருப்பெறுவார்''

என்று கூறுகிறாள். கூப்பிய கரங்களுடன் கோதமன் கல்லுருவைக் கொண்டான் என்று கோவிராமாயணம் இக்கதையைக் கூறுகிறது.

இந்த நூற்றாண்டில் எழுந்த பல அகலிகை நூல்களுள் சுப்பிரமணிய முதலியாரின் அகலிகை வெண்பா அகலிகையின் அவலத்தை மிக அற்புதமாகச் சித்திரித்துக் காட்டுகிறது. எனினும் புதிய தீர்வினை முன்வைக்கவில்லை. பிறன்மனை நயக்கும் கொடுமையினை மிக ஆழமாகக் காட்டுகிறது. அதாவது இந்திரனைக் கண்டிக்கிறது. யோகியார் மற்றும் புதுமைப்பித்தனின் படைப்புகளில் அகலிகை குற்றமற்றவளாக, ஆடவருலகப் பொய்ம்மையால் வஞ்சிக்கப்பட்டவளாக, சாபவிமோசனம் பெற்றாலும் பாபவிமோசனம் பெறாதவளாகக் காட்டப்படுகிறாள். அதாவது இவர்களுடைய அனுதாபம் அகலிகைமீது படிகிறது. கோவியின் அகலிகையோ ஒரு புரட்சிப் பெண்ணாகப் படைக்கப்பட்டிருக்கிறாள். பெண்ணிய வாதத் தொடக்கநிலை செல்வாக்கை யோகியார் மற்றும் புதுமைப்பித்தனின் படைப்புகள் காட்டுகின்றன. பெண்ணிய வாத உச்சநிலைச் செல்வாக்கைக் கோவியின் அகலிகை பிரதிபலிக்கிறாள் என்று கூறலாம். பண்டைய மரபில் காட்டப்பெறும் எதிர்ப் பாத்திரங்கள், குற்றப்பட்ட பாத்திரங்கள் மற்றும் தண்டிக்கப்பெற்ற பாத்திரங்கள் பெருவாழ்வும், மறுவாழ்வும் பெறுமாறு படைக்கப்பெறுவது இருபதாம் நூற்றாண்டின் இலக்கிய இயல்பாக இந்தியாவெங்கும் காண்கிறோம். மதுசூதன் தத், மைதிலி சரண் குப்தா, தினகர், துவிஜேந்திரலால் ராய் ஆகியோரின் படைப்புகளிலும் பிரேம் சந்தின் நாவல்களிலும் இதனைக் காணலாம். இதில் தமிழகமும் பின்தங்கவில்லை. ஏன்? முன்னணியில் நிற்கிறது என்றுகூடக் கூறலாம். பாரதியார், குழந்தைப் புலவர், பாரதிதாசன், கலைஞர் கருணாநிதி, யோகியார், புதுமைப்பித்தன், கோவி என இப்பட்டியல் நீண்டு செல்லக்கூடியது. சமுதாய வாழ்வியல் பார்வை

மாறுகிறபோது இலக்கியப் பார்வையும் மாறுவது இயல்புதானே.

மானுட வாழ்க்கையில் நிகழ்ந்த அல்லது நிகழக்கூடிய ஓர் இன்றியமையாத சிக்கலைக் காட்டி அதற்குத் தம் காலத்தே கண்டதீர்வினை வால்மீகி கூறுகிறார். காலம் பல கண்ட இச்சிக்கல் தொடர்கிறது. அகலிகைகளும் இந்திரர்களும், கௌதமர்களும் இன்றைக்கும் இருக்கின்றனர். காலந்தோறும் கவிஞர்கள் ஒவ்வொரு தீர்வினை இச்சிக்கலுக்கு முன்வைத்து வந்துள்ளனர். இன்றைய கவிஞர்களும் படைப்பாளிகளும் வேறுவிதமாக, தம் காலத்துக்கேற்ற தீர்வினைப் படைத்துக் காட்டுகின்றனர்.

அன்றைய தீர்வில் அகலிகை பலியானாள். இன்றைய தீர்வில் இந்திரன் ஒருபுறமும், கௌதமன் ஒருபுறமும் பலியாகிறார்கள். ஆனால் ஆணும் பெண்ணுமாக மாறி மாறிப் பலியாவதற்குக் காரணமாக இருக்கும் இந்தச் சிக்கல் எப்போது பலியாகும்? இந்தச் சிக்கலே தோன்றாமலிருக்க வழியில்லையா? இந்தச் சிக்கலை இல்லையாக்கும் மானுடச் சிந்தனை, கவிதைக் கற்பனை, படைப்புத் தீர்வு எப்போது மலரும்?

'அகலிகை' பாத்திரம் ஒரு மாயையா? அல்லது மானுட வாழ்க்கையின் நிரந்தரமான ஒரு கூறா? அல்லது விடுவிக்கவே முடியாத ஒரு புதிரா? தெரியவில்லையே!

(d) சீதையின் திருமணம்

''முனிவரே, ஸ்ரீராமர் இந்த வில்லை நாணேற்றிவிட்டால் அயோனிஜ புதல்வியாகிய சீதையை ஸ்ரீராமருக்குப் பாணிக்கிரகணம் செய்து தருவேன்'' என்றார் ஜனகர் (I.66:27). விசுவாமித்திரர், ''வில்லை ஸ்ரீராமருக்குக் காட்டும்'' என்றார். எட்டுச் சக்கர வண்டியில் ஏற்றப்பட்டு ஐயாயிரம் கிங்கரர்களால் இழுக்கப்பட்டுக் கொண்டுவரப்பட்ட வில்லைக் கண்டதும் விசுவாமித்திரர், ''குழந்தாய் ஸ்ரீராமா, வில்லைப் பார்'' என்றார். அவையிலிருந்த ஆயிரக்கணக்கானவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே இராமர் வில்லைச் சிரமமின்றி விளையாட்டாகத் தூக்கி நாணேற்றி வளைத்து முறித்து விட்டார். உடனே ஜனகர், ''சீதை இராமனுக்கு வீர்ய சுல்கமாகத் தரப்படுவாள்'' என்று அறிவித்தார் (I.67:1,4,12,15, 16,22) இவ்வாறு இருவகை வான்மீகங்களும் கூறுகின்றன. திருமணத் திற்கு முன் இராமர்-சீதை சந்திப்பு நிகழ்வதாகக் காட்ட வில்லை. கன்னிகாதானமாய் வீர்ய சுல்கமாக (வீரத்திற்குரிய பரிசாக) இராமனுக்குச் சீதை மனைவியாகிறாள்.

பௌத்த, ஜைன ராமாயணங்கள் இராமன்-சீதை திருமணம் குறித்துச் சிறப்பாக எதுவும் கூறவில்லை. நரசிம்ம புராணமும், பாகவத புராணமும் சீதையின் சுயம்வரம் பற்றிப் பொதுவாகக் கூறுகின்றன. வாசுதேவ ஹிண்டி, சுயம்வரத்தில் சீதையே இராமனைக் கணவனாகத் தேர்ந்தெடுத்தாள் என்று கூறுகிறது.[21] நீரிலிருந்து கண்டெடுத்த பெண்ணாகிய சீதையை இந்தியக் குடியானவர்கள் வளர்த்துப் பருவம் அடைந்ததும் தங்கள் நாட்டு இளவரசனாகிய இராமனுக்கு அளிக்க, இராமன் அவளைச் சீதா என்று பெயரிட்டுத் தன் மனைவியாக ஏற்றுக் கொண்டான் என்று திபேத்திய ராமாயணம் கூறுகிறது.[22]

மிதிலையில் சனகனின் அரண்மனையை நோக்கி விசுவாமித்திர முனிவருடன் இலக்குவன் பின்தொடரச் சென்று

21. U.P. Shap. "The Ramayana in jaina Tradition", The Ramayana Tradition in Asia, P.64
22. J.W.De.Jong, "The story of Rama in Tibet", Asian Variations in Ramayana, Pp. 164-165.

கொண்டிருந்த இராமன் கன்னி மாடத்தே நின்றிருந்த சீதையைக் கண்டான்; அவளும் இராமனைக் கண்டாள். இருவரும் ஒருவர் மீதொருவர் காதல் கொண்டனர் என்பதைக் கம்பன்,

> வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும்
> இருவரும் மாறிப் புக்கு இதயம் எய்தினார் *(1.10:37)*

என்று கூறுகிறான். தமிழ்க் களவியல் நெறிக்கேற்ப இக்காட்சியினைக் கம்பன் தானே புதியதாய்ப் படைத்துச் சேர்க்கிறான். மேலும், 'பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ' என்று அவ்விருவரும் இருந்த நிலையைக் குறிப்பிடுமிடத்து அவர்தம் அவதார நிலையைச் சுட்டுகிறான். இங்கு இது களவன்று. எனவே, அவதார நிலை, மானுட நிலை இரண்டையும் தொடர்புறுத்திச் செல்லுவதாகக் கம்பனது காப்பியம் அமைந்துள்ளது.

தம்முன் வைக்கப்பெற்ற வில்லை இராமன் ஒரு மலர் மாலையைத் தூக்குவது போல் எளிதாக எடுத்து அவையிலிருந்த அரசர்கள் 'என்ன ஆயிற்று' என்று அறியும் முன்னர் வளைத்து நாணேற்ற அவ்வில் ஊழிக் காலத்துப் பேரிடியெனப் பெருஞ்சத்தத்துடன் முறிந்தது. சனகனும் தன் வாக்குப்படி சீதையை இராமனுக்கு மனைவியாகத் தர முடிவு செய்தான் என்று கம்பன் கூறுகிறான்.

கி.பி.8ஆம் நூற்றாண்டில் இயற்றப்பெற்ற பவபூதியின் மகாவீர் சரிதம் என்னும் வடமொழி நாடகம் இராமனும், இலக்குவனும் சுயம்வரத்திற்கு முன் விசுவாமித்திர முனிவரின் ஆசிரமத்திலே சீதையையும், ஊர்மிளையையும் முறையே சந்திக்கின்றனர் என்று கூறுகிறது. கி.பி.12 ஆம் நூற்றாண்டில் இயற்றப்பெற்ற ஜெயதேவரின் பிரசன்ன ராகவ என்னும் வடமொழி நாடகம், சுயம்வரத்திற்கு முன்னர் மிதிலையில் ஒரு உவ வனத்தில் இராமனும், சீதையும் சந்தித்து மகிழ்ந்தனர் (அங்கம் II) என்று கூறுகிறது. மேலும், சுயம்வரத்திற்கு இராவணனும் வாணாசுரனும் வந்திருந்தனர் என்றும்,

வில்லை வளைக்க இயலாது தோற்றனர் என்றும் கூறுகிறது. அஸ்திமல்லர் என்பவரால் கி.பி. 1290ல் இயற்றப்பட்ட 'மைதிலி கல்யாணம்' என்னும் நாடகம் சுயம்வரத்திற்கு முன்னர்க் காமதேவன் கோட்டத்திலும் (அங்கம் I) மாதவி வனத்திலும் II இராமனும் சீதையும் சந்தித்துக் கொண்டனர் என்று காட்டுகிறது.

சனகனின் அரசவையில் வில் முறிப்பு விழாவிற்காக வந்திருந்த இராமனைத் தன் தோழிமார் சுட்டிக்காட்ட, அவனைக் கண்ட சீதை அவன்மீது காதல் கொள்கிறாள். கனத்த, பாரமான சிவதனுசைக் கையில் ஏந்தி நிற்கும் இராமனைக் கண்டதும், 'இதனை முறிக்க இவனால் இயலுமோ, என்னை மணந்து கொள்ள இயலாமல் போய்விடுமோ' என்று அஞ்சிய சீதை எல்லாக் கடவுள்களையும் தேவதைகளையும் மனத்தால் தொழுது இராமன் தன்னை மணக்க அருளுமாறு வேண்டு கிறாள். 'விநாயகப் பெருமானே, நான் இராமனைக் கணவனாக அடைய அருள்வாயா. அரனே! அரியே! சூரிய பகவானே, பகவதி தாயே' என்று எல்லாக் கடவுள்களையும் சீதை வணங்குகிறாள். '' சீதையே நீ இராமனை உன் கணவனாக அடைவாய். இந்த வில்லை இராமன் ஒரு மலர்ச் செண்டுபோலத் தூக்கி ஒரு நொடியில் முறித்து, உன்னை மணப்பான். அஞ்சாதே'' என்று அவள் வணங்கிய கடவுள்கள் வாழ்த்தியதாக அவள் மனம் கூறியது என்று கிருத்திவாசனின் வங்காளி ராமாயணம் கூறுகிறது (I.2551-2566).

துளசி ராமாயணத்தின்படி இராமனும் இலக்குவனும் மிதிலை நகரப் பூங்காவில் வழிபாட்டிற்காக மலர் கொய்யச் செல்லுகின்றனர். பார்வதியை (பவானி) வழிபடுவதற்காகத் தன் தோழியருடன் அந்தப் பூங்காவிற்குச் சீதை வருகிறாள். அங்கே இராமனும் சீதையும் ஒருவரையொருவர் கண்டு காதல் கொள்கின்றனர். அவர்கள் இருவரும் பழைய காதலர்கள் என்பதை யாரும் அறியார். (I.228/1-4) கௌரி (பவானி) சீதையின் வழிபாட்டில் மகிழ்ந்து ''சீதையே, நீ விரும்பியவாறே, கரிய செம்மலானவன் நின் கணவனாவான்''

என்று வாழ்த்தியது. (1.235) பூங்காவிலிருந்து திரும்பிய இராம லக்குவர் தாம் சீதையைக் கண்டது பற்றி விசுவாமித்திரரிடம் கூறினர். அவரும் ''நீங்கள் விரும்பியவாறே நடக்கும் '' என்று வாழ்த்தினார் (1.236/2)

சுயம்வரத்தின்போது, சனகன் வில்லைக் கொண்டுவந்து வைத்து, 'இதை வளைத்து நாணேற்றுபவர்க்குச் சீதை மனைவியாவாள்' என்று அறிவிக்கிறான். இராவணன், வாணாசுரன் போன்ற பெருவீரர்கள் பலரும் பலமுறை முயன்றும் அந்த வில்லை அசைக்கவும் முடியாமல் அவமானப்பட்டு வெளியேறுகின்றனர். சனகனால் சுயம்வர மண்டபத்திற்கு வரவழைக்கப்பட்ட சீதை இந்நிகழ்ச்சிகளில் மனம் செலுத்தாமல் இராமனையே நினைந்த வண்ணம் தன் தோழியருடன் அமர்ந்திருந்தாள். பலரும் முயன்று தோற்றபின் சனகன், ''இந்த வில்லை வளைக்கும் ஆற்றலுடைய அரச குமாரர்கள் நம் நாட்டில் எவருமே இல்லையா? சீதை கன்னியாகவே இருக்க வேண்டியவள்தானா?'' என மனமுடைந்து பேசுகிறான் (1.251/1-4). கேட்டு வெகுண்ட இலக்குவன் மிகவும் சினமுற்று விசுவாமித்திரரையும் இராமனையும் வணங்கி, ''இந்த வில்லை இப்போதே ஒரு கணத்தில் தூக்கி மண்சாடியை உடைப்பது போல் சிதறடிக்கிறேன். மேரு மலையையே நான் ஒரு முள்ளங்கி போல் நசுக்கிவிடுவேன். இந்தப் பழைய வில் எம்மாத்திரம்? நீங்கள் அனுமதியளித்தால் ஒரு காளானை நசுக்குவதுபோல் இதை ஒடித்துவிடுகிறேன்'' என்று கூறுகிறான். இதைக் கேட்டு உள்ளுக்குள் மகிழ்ந்த இராமன் இலக்குவனை அழைத்து உட்காரச் செய்துவிட்டு விசுவாமித்திரரை நோக்க, அவரும் நல்ல முகூர்த்த நேரம் வந்ததை உணர்ந்து ''இராமா, எழு, சிவதனுசை உடைத்துச் சனகனின் மனக்குறையைத் தீர்'' என்றார் (1 253/1-4). இராமன் வில்லை நோக்கிச் செல்வதைக் கண்ட சீதை, சிவனையும் பார்வதியையும் மனத்துள் துதித்து ''நான் இதுவரை செய்த வழிபாடுகளின் பலனாக இந்த வில்லின் கனத்தைக் குறைத்து இராமன் எடுப்பதற்கேற்றவாறு

அருளுக'' என்று வேண்டுகிறாள் (I.256, 257/1-4). தன் குருவை மனத்துள் வணங்கி இராமன் அந்த வில்லை எளிதாக எடுத்தான். வில்லுடன் நின்ற இராமனை எல்லோரும் ஒரு கணம் பார்த்து முடிப்பதற்குள் இராமன் அதை வளைத்து நாணேற்றி இரண்டாக உடைத்து விட்டான். வில்லொடிந்த ஒலி உலகங்கள் எல்லாவற்றையும் அதிரச் செய்தது (I.260/1-4). சீதை தோழிகள் புடைசூழ வந்து இராமனுக்கு வெற்றிமாலை சூட்டினாள் (I.263/1-4).

கி.பி.1772-73ஆம் ஆண்டின் பிரதி செய்யப்பெற்ற துளசி ராமாயணம் பல விளக்கப் படங்களுடன் காணப்படுகிறது. இங்கிலாந்திலிருந்து பெறப்பட்ட நல்ல தாளில் பல்வேறு வண்ணங்களில் இப்படங்கள் எழுதப்பட்டுள்ளன. இதில் ஒரு படம் (9.6) இக்காட்சியை விளக்குகிறது. [23]

சனகன் தன் மகள் பருவமடைந்ததும் வில் வளைப்பு சுயம்வர நிகழ்ச்சிக்கு இராவணன், பரசுராமன் உட்பட – எல்லா அரசர்கட்கும் – அழைப்பு அனுப்புகிறான். அவர்களுள் இராவணன் மட்டுமே அந்த வில்லைத் தூக்குகிறான்; ஆனால் வளைத்து நாணேற்ற முடியவில்லை; இருப்பினும் சீதையை மணம் முடித்துத் தருமாறு சனகனை வற்புறுத்துகிறான். இந்த நிலையில் இராம லக்குவர்கள் முனிவருடன் அங்கு வருகின்றனர். இராமன் வில்லை வளைத்து நாணேற்றிச் சீதையை மணக்கிறான் என்று கி.பி.17ஆம் நூற்றாண்டில் எழுத்து வடிவம் பெற்ற ராம வத்து (Ṛamav attu) என்னும் பர்மிய ராமாயணம் கூறுகிறது. [24]

தாய்லாந்து ராமாயணமாகிய ராமகியேன் (18ஆம் நூற்றாண்டு), மிதிலை நகருள் முனிவருடனும் இலக்குவனுடனும் சென்று கொண்டிருந்த இராமன் அரண்மனை ஜன்னல்களின் அலங்காரத்தைக் கண்டு வியந்தவனாய்

23. Niranjan Goswami, "A folk painted manuscript of the Ramacarita Manasa", Asian Veriations in Ramayana. Pp.120-121.

24. Uthein Han Ukhinzaw, "Ramanyana in Burnese Literature and arts", The Ramayana Tradition in Asia, P.312.

நடந்தான். அப்போது சாளரத்தின் வழியே பார்த்துக் கொண்டிருந்த சீதையைக் கண்டு இருவரும் காதல் கொண்டனர் என்று கூறுகிறது. இதுவரை கட்டுக்குள் அடங்கியிருந்த சீதையாகிய இலக்குமியின் காதல் இராமனாகிய திருமாலைக் கண்டதும் வெளிப்படையாய்ப் பொங்கி வழிந்தது என்கிறார் இதன் ஆசிரியர். சுயம்வரத்திற்கு முன்னர் நடந்த இதனை ராமகியேன் குறிப்பிடுகிறது.[25]

கி.பி.18ஆம் அல்லது 19ஆம் நூற்றாண்டில் தோன்றிய லாவேசிய ராமாயணங்களில் பிரா லக் பிரா லாம் (Phra Lak Phra Lam) என்னும் இராமாயணம் சீதை-இராமன் களவு மணம் பற்றிப் பேசவில்லை. ஆனால், லாவோசின் இரண்டாவது சிறந்த இராமாயணமாகிய குவாய் துவாரபி (The Kivay Thuaraphi or Gvay Dvorahbi) திருமணத்திற்கு முன்னர் நிகழ்ந்த இராமன்-சீதை சந்திப்பை மிக விரிவாகக் கூறுகிறது. இதன்படி, தம் கல்வியை முடித்துவிட்ட இராம லக்குவர்கள், அயோத்தி திரும்பும் வழியில் காசப்ப முனிவரின் ஆசிரமத்தைச் சுற்றி நூற்றுக்கணக்கான வீரர்கள் குழுமி இருக்கக் கண்டு, அதற்கான காரணத்தை அறிந்து வருமாறு, இராமன் இலக்குவனை அனுப்ப இலக்குவன் முனிவரின் இருப்பிடம் சென்று நிகழ்ச்சிக்குக் காரணமாகிய வில்லைப் பார்த்துவிட்டு வந்து இராமனிடம் கூற, இராம இலக்குவர் இருவரும் அம்முனிவரின் ஆசிரமம் நோக்கி நடக்கின்றனர். அப்போது தன் அரண்மனைச் சாளரத்தின் பக்கமாக வரும் இராமனைக் கண்ட சீதை உடனே இராமன் மீது காதலுற்று மயங்கி விழுகிறாள். காதலுணர்வு மீதூரப் பெற்ற சீதை மருள் வந்தவள் போல விதிர்விதிர்த்து நடுங்கிச் சாய்ந்தாள் என்று சீதையின் காதல் நோயைப் பற்றி இந்நூல் விளக்கமாக உரைக்கிறது.[26]

---

25. S.Singaravelu."Tulisida., Valimi... Kamban... and Thai Version.... The Ramayana Tradition in Asia. Pp.469-70.

26. Sachchithanand Dahai, "The Khvay Tharaphi" The Ramayana Tradition in Asia, Pp. 285-286.

இராமன்-சீதை களவுக் காட்சி

வான்மீகத்தைப் பொறுத்தவரையில் வில்லொடித்துத் திருமணம் நிகழ்ந்த பின்னரே இராமன் சீதையைச் சந்திக்கிறான். பவபூதியின் மகாவீர சரிதம் (கி.பி.8ஆம் நூற்றாண்டு) என்னும் நாடகம் முதன்முதலாக வடமொழியில் இராமன்-சீதை சந்திப்பைக் குறிப்பிடுகிறது. பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த கம்பன், தமிழ் அகப்பொருள் மரபின்படி வில் வளைப்பிற்கு முன்பே இராமனும் சீதையும் கண்டு காதல் கொள்வதாகக் குறிப்பிடுகிறான். 12 ஆம் நூற்றாண்டிற்குரிய பிரசன்ன ராகவ நாடகமும், கி.பி.1290இல் இயற்றப்பட்ட மைதிலி க்லியாண நாடகமும் இராமன்-சீதையரின் களவுக் காட்சிகளை விரிவாகக் கூறுகின்றன. துளசிதாசர் இராமன்-சீதை சந்திப்பை மிக விரிவாகப் பாடுகிறார். வான்மீகம், அத்யாத்ம ராமாயணம், அசாமி ராமாயணம், ஒரியா ராமாயணம் ஆகியவற்றை அடியொற்றியே பெரும்பாலும் செல்லும் துளசிதாசர் இந்தக் களவுக் காட்சியை அமைப்பதில் மட்டும் கம்பனைப் பின்பற்றியுள்ளார் என்று சில அறிஞர்கள் கருதுகின்றனர்.[27] கி.பி. எட்டாம் நூற்றாண்டிலிருந்தே இராமனும் சீதையும் சந்திக்கும் களவியல் நிகழ்ச்சி இராமாயண நூல்களில் காணப்படுகின்றன என்று அறிஞர்கள் பொதுவாகக் கருதுகின்றனர்.[28]

இனி, காமில் புல்கே என்னும் இராம காதை அறிஞர் மகாவீர் சரிதம், பிரசன்ன ராகவ போன்ற வடமொழி இராம நாடக நூல்களே துளசிதாசரின் புதுமைப் படைப்புக்குக் காரணம் என்று கருதுகின்றார்.[29] எவ்வாறாயினும் துளசிதாசரின் படைப்புக்கு முன்னர் வடமொழி நாடகங்களும், நாட்டுப்புறப் பாடல்களும், கம்பனின்

27. Shankar Rajau Nadu. Kamba Ramayana and Tulasi Ramayan, Madras: University of Madras, 1971. Pp.133-134.

28. Kamala Ratnam. "Socio-Culural and anthropological background of Ramayana in Laos", Asian Variations in Ramayana, P.240.

29. Camile Bulcke, P.63.

காப்பியமும் தோன்றியனவாதலின் இவற்றுள் ஒன்றோ பலவோ துளசிக்கு முன் மாதிரியாய் இருந்திருக்கக் கூடும் என யூகிக்க வாய்ப்புள்ளது என்று கூறலாம்.

தாய்லாந்து, லாவோஸ் ஆகிய நாடுகளில் இராமாயண நூல்களும் இராமன்-சீதை சந்திப்பைப் படைத்துக் காட்டியுள்ளன. இவையிரண்டும் 18ஆம் நூற்றாண்டில் எழுந்தவை. துளசிக்கு முன்னரே எழுந்த மைதிலி, விரஜ, இந்தி நாட்டுப் பாடல்கள் பலவும் இக்காட்சியைப் பாடியுள்ளன. தமிழ் வில்லுப்பாட்டும் தமிழ் மரபுப்படி களவுக்காட்சியை விவரித்துக் கூறுகிறது. வடநாட்டுக் கிராமியப் பாடல்களில் இராமனும், சீதையும் உரையாடும் காட்சிகளும் காணப்படுகின்றன. ஆனால், எழுத்தில் வந்த இராமாயண நூல்களில் இத்தகைய உரையாடல்கள் இடம்பெறவில்லை.

(e) சேதுபந்தனம்

அகநானூறு

பாண்டிய நாட்டின் தென்கோடியில் உள்ள பேரோசை முழங்கும் பெரியகடல் தன் ஓசை அவிந்து அடங்கி நிற்கும் (அணை காரணமாக) கடற்கரையின் முன்பாக இருந்த பல விழுதுகளை உடைய ஆலமரத்தின் கீழ் அமர்ந்து இலங்கையில் நிகழ்த்தவிருக்கும் போரில் ஆற்ற வேண்டிய கடமைகள் குறித்து இராமன் இரகசியமாகத் தன் வீரர்களுடன் ஆலோசனை செய்து கொண்டிருந்தான். அப்போது அவ்ஆலமரத்தின் கிளைகளில் அமர்ந்திருந்த பறவைகளை நோக்கித் தன்சினம் கொண்ட பார்வையைச் செலுத்த அவை, தம் ஒலிகளை அடக்கிக் கொண்டன' என்பது இப்பாடலின் கருத்து.

இப்பாடலின் கூற்றுக்குரிய தோழி, தலைவியைப் பற்றிய அலர் பரவி வருவதை அறிந்து அந்த அலர் எவ்வளவு பரவியதாயினும், இராமனுடைய கோபப் பார்வையால் அவிந்து ஒடுங்கிய பறவைகளைப் போல, தலைவன் வரைவு உடன்பட்டமையால் அவர்களைப் பற்றி அலர் பரப்பும் இவ்வூரும் அவிந்து ஒடுங்கியது என்று கூறுகிறாள்.

அதாவது, இராமனைப் பற்றிய இக்கூற்று உவமையாகப் பயன்படுத்தப் பெற்றிருக்கக் காண்கிறோம். தமிழ் இலக்கிய முறைமைப்படி, ''பொருள்- உவமம்'' என்னும் இரண்டனுள் உவமம் முந்தியது. எனவே அகநானூற்றுக் காலத்திற்கு முன்னரேயே இராமாயணச் செய்திகள் தமிழகத்தே பரவியிருந்தன என்பது தெளிவாகிறது.

இக்கருத்தை உள்ளடக்கி நிற்கும் பாடல் வருமாறு:

வென்வேற் கவுரியர் தொல்முது கோடி
முழங்கிரும் பௌவம் இரங்கும் முன்துறை
வெல்போர் இராமன் அருமறைக்கு அவித்த
பல்வீழ் ஆலம் போல
ஒலிஅவிந் தன்றிவ் வழுங்கல் ஊரே (அகம்.70:13-17)

மணிமேகலை

காயசண்டிகை என்னும் வித்தியாதர மங்கை, ''விருச்சிகன் என்னும் ஒரு முனிவனுடைய சாபத்தால் பன்னிரண்டு ஆண்டுகள் பசியால் வாடித் துன்புறும் யானைத்தீ என்னும் நோயால் வருந்தும் நிலையில் உள்ள என்னுடைய நோயைத் துடைப்பாயாக என்று வேண்ட மணிமேகலை தன்,

வாங்குநர் கையகம் வருந்துதல் அல்லது
தான்தொலை வில்லாத் தன்மையதாய (14:14-15)

அமுதசுரபி என்னும் தன் பாத்திரத்திலிருந்து நிரம்பி வழியும் அன்னத்தைப் பெய்து என்னுடைய தீராப் பெரும்பசியை உடைய யானைத்தீயைப் போக்கினாள்'' என்று கூறி மகிழ்ந்தாள். இச்செய்தியை விளக்கும் உதாரணமாக (உவமையாக) மும்முதற் கடவுளாகிய திருமால் மானுடவடிவம் கொண்டு இராமனாக அவதரித்துச் சேதுபந்தனம் செய்ய முற்பட்டபோது அவருடைய வானரப்படைகள் கொண்டு வந்து எறிந்த மிகப் பெரிய மலைத் துண்டுகள் எல்லாம் கடலின் வயிற்றை நிரப்பின (உயர்ந்து அணை கட்ட உதவின) என்னும் இராமாயணச் செய்தியை மணிமேகலையும் உவமையாகப் பயன்படுத்துகிறது. இதனைக் குறிக்கும் மணிமேகலை அடிகள்:

காயசண் டிகையெனுங் காரிகை வணங்கி
நெடியோன் மயங்கி நிலமிசைத் தோன்றி
அடலரு முந்நீர் அடைத்த ஞான்று
குரங்கு கொணர்ந் தெறிந்த நெடுமலை யெல்லாம்
அணங்குடை யளக்கர் வயிறு புக்காங்கு
இட்டது ஆற்றாக் கட்டழற் கரும்பசிப்
பட்டே னென்றன் பழவினைப் பயத்தால்
அன்னை கேள்நீ ஆருயிர் மருத்துவி
துன்னிய என்னோய் துடைப்பா யென்றலும்
எடுத்த பாத்திரத் தேந்திய அமுதம்

பிடித்தவள் கையிற் பேணினள் பெய்தலும்
வயிறுகாய் பெரும்பசி நீங்கி மற்றவள்
துயரம் நீங்கித் தொழுனள்

(மணி. உலகவறவி புக்க காதை 8-20)

பக்தி இலக்கியம்

சங்க இலக்கியங்களை அடுத்து, கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல் எட்டாம் நூற்றாண்டு வரை தோன்றிய பக்தி இலக்கியங்களிலும் சேது அணை கட்டப்பெற்றது குறித்த செய்திகள் பாடப்பெற்றுள்ளன.

தேவாரம்

1. திருஞானசம்பந்தர் : மூன்றாம் திருமுறை

அணையலை சூழ்கடல் அன்றடைத்து வழிசெய்தவன்
பணையிலங்கும் முடி பத்திறுத்த பழிபோக்கிய
இணையிலி யென்றுமிருந்த கோயில் இராமேச்சுரம்
(3:10:6)

2. திருநாவுக்கரசர் : நான்காம் திருமுறை

கடலிடை மலைகள் தம்மால் அடைத்து மால்
கருமமுற்றித்
திடலிடைச் செய்த கோயில் திருஇராமேச்சுவரம்
(4:61:3)

3. ஆறாம் திருமுறை

செங்கண்மால் சிலைபிடித்துச் சேனையோடுஞ்
சேதுபந்தனஞ் செய்து சென்றுபுக்கு ...
(6:58;10)

நாலாயிர திவ்வியப் பிரபந்தம்

1. பூதத்தாழ்வார் : இரண்டாம் திருவந்தாதி

நீ அன்று உலகு அளந்தாய், நீண்ட திருமாலே!
நீ அன்று உலகு இடந்தாய் என்பரால்; -நீ அன்று
கார்ஓதம் முன்கடைந்து, பின் அடைத்தாய் மாகடலை
பேர் ஓத மேனிப் பிரான். *(2211)*

2. திருமழிசை ஆழ்வார் : நான்முகன் திருவந்தாதி

1. இது – இலங்கை ஈடு அழியக் கட்டிய சேது *(2409)*
2. தடங்கடலை, கல்கொண்டு தூர்த்த கடல் வண்ணன்

3. பெரியாழ்வார் : திருமொழி

1. குரக்கு இனத்தாலே குரைகடல் தன்னை
   நெருக்கி அணைகட்டி நீள்நீர் இலங்கை
   அரக்கர் அவிய ... *(82)*
2. காரார் கடலை அடைத்திட்டு இலங்கை புக்கு *(316)*
3. தலையால் குரக்கினம் தாங்கிச் சென்று தடவரை கொண்டு அடைப்ப
   அலைஆர் கடற்கரை வீற்றிருந்தானை அங்குத்தைக் கண்டார் உளர் *(330)*

4. ஆண்டாள்: நாச்சியார் திருமொழி

1. கடலைஅடைத்து அரக்கர் குலங்களை
   முற்றவும் செற்று .... *(519)*
2. சேதுபந்தம் திருத்தினாய் ..... *(520)*

5. திருமங்கையாழ்வார் : பெரிய திருமொழி

1. கலங்க மாக்கடல் அரிகுலம் பணிசெய அருவரை அணைகட்டி
   இலங்கை மாநகர் பொடி செய்த அடிகள் *(959)*

2. மாலும் கடல் ஆர, மலைக்குவடு இட்டு அணைகட்டி வரம்பு உருவ *(1082)*

3. குரங்கைப் படையா, மலையால் கடலை அடைத்தவன் எந்தை பிரான் *(1135)*

4. கல்லால் கடலை அணை கட்டி உகந்தாய் *(1313)*

6. குலசேகராழ்வார்: பெருமாள் திருமொழி

1. மலையதனால் அணைகட்டி மதில்இலங்கை அழித்தவனே *(726)*

2. குரைகடலை அடல் அம்பால் மறுக எய்து குலைகட்டி மறுகரையை அதனால் ஏறி..... *(747)*

கம்பராமாயணம்

1. வருணனை வழிவேண்டு படலம்

நன்றுஇது புரிதும் அன்றே; நளிர்கடல் பெருமை நம்மால்
இன்றுஇது தீரும் என்னில், எளிவரும் பூதம் எல்லாம்;
''குன்றுகொண்டு அடுக்கிச் சேதுகுயிற்றுதிர்''
என்றுகூறிச்
சென்றனன் இருக்கை நோக்கி, வருணனும் அருளின்
சென்றான் (VI:6:85)

2. சேது பந்தனப் படலம்

மலைசுமந்து வருவன வானரம்
நிலையில் நின்றன,செல்ல நிலம் பெறா
அலை நெடுங்கடல் அன்றியும் ஆண்டுத்தம்
தலையின் மேலும் ஓர் சேது தருவ போன்ம் (49)

ஆனபேர் அணை அன்பின் அமைந்தபின்
கான வாழ்க்கைக் கவிக்குல நாதனும்
மான வேற்கை இலங்கையர் மன்னனும்
ஏனை யோரும் இராமனை எய்தினார் (71)

எய்தி ''யோசனை ஈண்டு ஒரு நூறிவை ஐயிரண்டின்
அகலம் அமைந்திடச்

செய்ததால் அணை'' என்பது செப்பினார்
வைய நாதன் சரணம் வணங்கியே (72)

3. ஒற்றுக்கேள்விப்படலம்

அருங்கடகம் அம்கையில் அகற்றி, அயர்வோடும்
மருங்கு அட வளர்ந்த முலை மங்கை மணம்முன்னா
ஒருங்கு அடல் உயர்ந்த படர்தானையொடும் ஓதத்து
இருங்கடல் கடந்து கரை ஏறினன் இராமன் (12)

சேதுவின் தோற்றம்

வான்மீகி ராமாயணம்

(a) திறனாய்வுப் பதிப்பு : 15ஆவது சருக்கம்

""utilizing the materials collected by the monkeys Nala constructed abridge ten yojans's broad and a hundred yojanas long across the sea `' சுலோகம், 20,21.

""That great bridge which stretched across the ocean looked like the line of the parting of the hair on a lady's tuft of the hair `' சுலோகம் 25,26.

(b) தென்புலவழக்கு வான்மீகம்: கோரக்பூர் பதிப்பு 22ஆவது சருக்கம்.

(1) The bridge constructed by Nala was ten yojanas wide (eighty miles) and a hundred yojanas long (eight hundred miles) சுலோகம் 76.

The glorious bridge looked charming like the milky way in space. சுலோகம் 74.

(2) The vast bridge across the sea cost its charm like ""the parting of a woman's hair `' சுலோகம் 80

(c) தென்புல வழக்கு வான்மீகம்: தர்மாலயா பதிப்பு – 22ஆவது சருக்கம்

தேவர்களும் கந்தர்வர்களும் பத்து யோஜனை அகலமும் நூறு யோஜனை நீளமும் கொண்ட நளனால் கட்டப்பட்ட சேதுபந்தனத்தைக் கண்ணாரக் கண்டு வியந்தனர். சுலோகம் 77

மகாசேதுவானது மேடுபள்ளம் இல்லாததாயும், வெடிப்பு இல்லாததாயும் சமுத்திர மங்கையின் உச்சிக் கூந்தலின் வகிடென விளங்கிற்று. சுலோகம் 80

கம்பராமாயணம் *(சேதுபந்தனப் படலம்)*

மெய்யின் ஈட்டத்து இலங்கையாம் மென்மகள்
பொய்யன் ஈட்டிய தீமை பொறுக்கலாது
ஐயன் ஈட்டிய சேனை கண்டு அன்பினால்
கையை நீட்டிய தன்மையும் காட்டுமால் ***(பாடல் 63)***

கல்கிடந்து ஒளிர் காசு இனம் காந்தலால்
மற்கடங்கள் வகுத்த வயங்கு அணை,
எல்கிடந்த இருளிடை இந்திரன்
வில் கிடந்தது என்ன விளங்குமால் ***(பாடல் 70)***

சேதுவின் தோற்றம் பற்றிய மூன்று வருணனைகள் வான்மீகத்திலும் கம்பராமாயணத்திலும் கூறப்பட்டுள்ளன.

1. வானரப் படைகள் கடலின் குறுக்கே கடந்து இலங்கை நகரை அடைவதற்காகக் கட்டிய சேது எனப் பெயரிய நடைப்பாலம் மேடுபள்ளமும் வெடிப்பும் இல்லாமல் ஒரு மங்கையின் உச்சிக் கூந்தலின் குறுக்கே அமைந்த வகிடென விளங்கிற்று என வான்மீகி இராமாயணத்தின் திறனாய்வுப் பதிப்பும், தென்புலவழக்கு வான்மீகமாகிய கோரக்பூர் பதிப்பும் கூறுகின்றன. தென்புல வழக்கின் தர்மாலயா பதிப்பு மட்டும் பொதுவாக

ஒரு மங்கையெனக் கூறாது சமுத்திர மங்கையின் உச்சி வகிடென எனக் கூறுகிறது.

2. மேலும் கோரக்பூர் பதிப்பு சேதுபந்தனம் ஆகாயத்தில் காணப்படும் பால்நிறப் பாதை (milky way in space) போன்றது எனவும் கூறுகிறது.

3. அறவழிச் செல்ல் விரும்பும் இலங்கையாகிய மென்மகள், மறவழியில் இயங்கும் தீயவனின் ஒழுகலாற்றைப் பொறுக்கலாற்றாமல், இராமனின் சேனையை வரவேற்கும் முகத்தான் தன் கையைக் கடலின் குறுக்கே நீட்டியதாகச் சேதுப் பாலம் அமைந்தது எனக் கம்பராமாயணம் கூறுகிறது. மேலும், நீலநிறக் கடலின் குறுக்கே கற்களின் துண்டங்களால் அமைந்த பாலம் இருளில் இந்திரனின் வில் கிடந்தது எனக் கூறுமாறு அமைந்துள்ளது எனவும் கம்பராமாயணம் கூறுகிறது.

சேதுபந்தனத்தின் தோற்றம் பற்றி இவ்வாறு ஐந்து வகையான கருத்துகள் வான்மீகப் பதிப்புகளிலும் கம்பராமாயணத்திலும் காணப்படுகின்றன. ஏனைய கருத்துகள் சுவையான வானியல் வருணனைகளாக (பருந்துப் பார்வையாக) அமைய, கம்பராமாயணக் கருத்துகள் இராமகாதையின் காப்பிய நோக்கில் (epic theme) அமைந்திருக்கக் காண்கிறோம்.

ஒருசிந்தனை

ஏறக்குறைய பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் ரஷிய ''கடல் அகழ்வாய்வுச் செயற்கைக் கோளினால்'' எடுக்கப் பெற்றதாக வெளியிடப்பட்டுள்ள ''சேதுபந்தனப்'' படம் வான்மீகத்தின் திறனாய்வுப் பதிப்பு வருணித்துள்ளவாறே, மகளிரின் உச்சிக் கூந்தலின் குறுக்கே அமைந்த வகிடு போலவே காட்சியளிப்பதை நோக்க, இராம காதையின் மூல நூலாகிய வான்மீகத்தின் வருணனை பொருத்தமாகவே

தோன்றுகிறது. அது மேம்பாலமன்று; தரைப்பாலமே என்னும் கருத்தும் உறுதிப் படுகிறது எனலாம்.

மேலும், கீழைக் கடற்கரையில் மாமல்லபுரக் கோயிலுக்குக் கிழக்கில் கடலடியில் மேலும் சில கோயில்கள் இருக்கின்றன எனவும், பூம்புகார் நகரின் கிழக்கே கடலுக்கடியில் மிக ஆழத்தில் பெரு நகரம் ஒன்று இருப்பதற்கான சான்றுகள் உள்ளன எனவும், தென்கடலில் தற்போதுள்ள குமரி முனைக்குத் தெற்கே பூமத்திய ரேகைக்கு அருகில் பஃறுளி ஆறும், அதற்குத் தெற்கிலும் வடக்கிலும் மேல்திசையிலிருந்து கிழக்கு நோக்கி அமைந்துள்ள நீண்ட மலைத் தொடர்கள் காணப்படுகின்றன எனவும் காட்டும் படங்களும், மேலைக் கடற்கரையில் தற்போதுள்ள குஜராத் மாநில கடற்கரையில் இருந்து சில கிலோ மீட்டர் தூரம் மேற்புறத்தில் பண்டைய துவாரகை நகரின் இரண்டு அரண்மனைகளின் படத்தையும் காட்டும் செயற்கைக் கோளின் படங்களும் இந்தியாவின் தொன்மை வரலாற்றின் அடித்தளங்களாக அமைகின்றன.

மேற்சுட்டிய ஐந்து படங்களுள் துவாரகை குறித்த படத்தினைக் குஜராத் மாநில அரசு பெருமுயற்சி எடுத்துத் துவாரகை அரண்மனைகளில் இருந்து பண்டைய காலச் செங்கற்களைக் கொண்டு வந்து தக்க நிபுணர்களின் துணையால் ஆராய்ந்து அதன்காலம் கி.மு.1500ஆம் ஆண்டிற்குரியது எனக் கண்டறிந்து மகிழ்ந்தது.

ஏனைய நான்கு படங்களும் தமிழகத்தின் தொன்மையையும் பண்டைத் தமிழகத்தின் கட்டடக் கலை அறிவையும் புலப்படுத்துவதை உறுதிப்படுத்த இதுவரை நாம் எந்த முயற்சியும் எடுத்ததாகத் தெரியவில்லை. எடுத்திருப்பதாகவும், பனம்பாரனாரின் பாயிரக் கூறுகளும் மெய்ப்பிக்கப்பட்டு நம்முடைய தொன்மை வெளிப் பட்டுள்ளதாகவும் அறியவரின் நன்றி பாராட்டி மகிழக் கடமைப்பட்டுள்ளோம்.

(f) கம்பராமாயணத்தில் தமிழ்ப்படுத்தப் பெற்ற பாத்திரப் பெயர்கள்

கம்பன் ஆற்றிய தொண்டு

தமிழ் மொழியின் ஒலியனியல் மற்றும் பொருண்மைக்கேற்ப வடமொழிப் பெயர்கள் கம்பனால் பெயர்க்கப்பட்டுள்ளன.

1. வடமொழியில் மொழி முதலாக வரும் ர, ல என்னும் ஒலி முதற் சொற்கள் தமிழ் மொழியின் இலக்கண அமைதிக்கு ஒவ்வா. கம்பன் இத்தகைய வட மொழிப் பெயர்களை அகர, இகர, உகரங்களை முதல் ஒலிகளாக அமைத்து அப்பெயர்களைத் தன் காப்பியத்துள் கீழ்வருமாறு பயன்படுத்தியுள்ளான்:

ரகரம்

வான்மீகம்	கம்பராமாயணம்
ரம்பா *(1, 63; 408)*	அரம்பை *(1, மிகைப். 105)*
ரதி *(III, 46;318)*	இரதி *(1, மிகைப். 78)*
ராம் *(1, 1:3)*	இராமன் *(1, 168)*
ராகவ் *(III, 1:3)*	இராகவன் *(1.1206)*
ராவண் *(I,1:12)*	இராவணன் *(1:1445)*
ருசிகே *(1.34:232)*	இருசிகன் *(1.405)*
ருத்ர *(III.14:104)*	உருத்திரன் *(III, 3601)*
ருமா *(iv18:166)*	உருமை *(iv. 3852)*
ரோமபாத *(I. 9:69)*	உரோமபாதன் *(I.214)*

லகரம்

வான்மீகம்	கம்பராமாயணம்
லக்ஷ்மண் *(I. 1:7)*	இலக்குவன் *(I.298)*
லங்கா *(V. 3:67)*	இலங்கை *(V.4927)*

2. வடமொழியில் 'கௌ' என்னும் மொழி முதல் எழுத்து, தமிழில் 'கோ' என்று மாற்றிக் கம்பனால் வழங்கப்பட்டது.

வான்மீகம்	**கம்பராமாயணம்**
கௌஸல்யா *(I. 1:5)*	கோசலை *(I:267)*
கௌசிக *(I.18:138)*	கோசிகன் *(I.566)*
கௌதம *(I.48:321)*	கோதமன் *(I.479)*

3. வடமொழியில் சில பாத்திரப் பெயர்கள் தனி மெய்யெழுத்துகளுடன் தொடங்குகின்றன. தமிழ்மொழியின் மரபுக்கு இயையாத இவற்றை உயிர்மெய் யெழுத்துகளாக மாற்றி வழங்கியிருப் பதைக் கம்பனின் காப்பியத்தில் காண்கிறோம்.

வான்மீகம்	**கம்பராமாயணம்**
ஸ்வயம்ப்ரபா *(IV.51:445)*	சுயம்பிரபை *(IV.4586)*
த்ரிசங்கு *(I.57:371)*	திரிசங்கு *(I. 587)*
ப்ரமதத்த *(I.33:229)*	பிரமதத்தன் *(I.402)*
ப்ரஹமா *(III.3:14)*	பிரமன் *(I.399)*
ப்ருகு *(I.25:179)*	பிருகு *(I.405)*

4. வடமொழியில் வழங்கும் ஆண்பாற் பெயர்களின் இறுதியில் தமிழ் மரபிற்கேற்ப னகர ஒற்றைச் சேர்த்து வழங்கியிருக்கக் காண்கிறோம். இவ்வாறு 54 இடங்களில் தமிழ் மரபு பின்பற்றப்பட்டிருக்கக் காண்கிறோம். சில காட்டுகள்:

வான்மீகம்	**கம்பராமாயாணம்**
அகஸ்திய *(I.1:10)*	அகத்தியன் *(III.2656)*
அதிகாய *(V.6:97)*	அதிகாயன் *(V.4978)*
அம்பரீஷ் *(I.61-393)*	அம்பரீடன் *(I.599)*
ராம் *(I.1:3)*	இராமன் *(I:168)*

இந்த்ர (I.5:49)	இந்திரன் (I:1241)
ருத்ர (III.14:104)	உருத்திரன் (III:3601)
குஹ (I.1:8)	குகன் (II.1953)
கும்பகர்ண (I.3:38)	கும்பகருணன் (III.2844)
சிவ (III.25:174)	சிவன் (I.1281)
தசமுக (V.17:106)	தசமுகன் (VI:6940)
நாரத (I.1:1)	நாரதன் (III.2590)
பகீரத (I.42:277)	பகீரதன் (I.மிகைப் 137)
பரத்வாஜ (I.1:9)	பரத்துவாசன் (VI:10130)
ப்ரஹமா (III.3:14)	பிரமன் (I:399)
வருண (III.12:84)	வருணன் (I.1307)
வால்மீகி (I.1:1)	வான்மீகன் (VI: 8025)

5. வடமொழிப் பாத்திரப் பெயர்கள் ஆகார ஈற்றினைக் கொண்டு முடியுமிடத்துத் தமிழில் ஐகாரமாக மாற்றி வழங்கப் படுவதைக் காண்கிறோம். கம்பனுக்கு முன்னரே சங்க நூல்களிலும் சிலவிடங்களில் இம் மாற்றம் காணமுடிகிறது.

வான்மீகம்	**கம்பராமாயணம்**
அஹல்யா (I.48:321)	அகலிகை (I:466)
கௌசல்யா (I.1:5)	கோசலை (I:267)
ஸீதா (I.1:7)	சீதை (I:698)
ஸுமித்ரா (I.1:7)	சுமத்திரை (I:269)
ஸூர்ப்பனகா (I.1:11)	சூர்ப்பனகை (III.3067)
த்ரி ஜடா (I.3:37)	திரிசடை (V:5098)
மந்த்ரா (II.7:62)	மந்தரை (II.1466)
மேனகா (I.35:238)	மேனகை (I:507)

6. ஜ, ஷ, ஸ, க்ஷ என்னும் கிரந்த எழுத்துகள் குறிக்கும் வடமொழி ஒலிகளுக்கு இணையான தமிழ் வழக்குகள் கம்பனின் காப்பியத்துள் காணப்படு கின்றன.

(அ) 'ஜ' என்னும் வடமொழி ஒலிக்கு இணையான எழுத்தாகத் தமிழில் 'ச'கரம் வழங்கப்படுகிறது.

வான்மீகம்	கம்பராமாயணம்
ஜடாயு (I.1:13)	சடாயு (III.2714)
ஜனக (I.1:7)	சனகன் (I:634)
ஜானகி (II.51:354)	சானகி (III:3636)
த்ரிஜடா (I.3:37)	திரிசடை (V:5098)
பரத்வாஜ (I.1:9)	பரத்துவாசன் (V.10130)

(ஆ) 'ஷ' என்னும் வடமொழி ஒலிக்கு இணையான எழுத்தாகத் தமிழில் 'ச', 'ட' என்னும் எழுத்துகளின் வடிவங்கள் இடம் பெற்றுள்ளன.

வான்மீகம்	கம்பராமாயணம்
காஷ்யப (I.8.64)	காசிபன் (I:210)
தஷரத் (I.9.6)	தசரதன் (I:243)
	தயரதன்(I:707, III:3355)
அம்பரீஷ் (I.61:393)	அம்பரீடன் (I:559)
வஸிஷ்ட (I.1:9)	வசிட்டன் (I:255)
விபீஷ்ணன் (I.1.19)	வீடணன் (V:5120)

(இ) 'ஸ' என்னும் வடமொழி ஒலிக்கு இணையான எழுத்தாக த் தமிழில் 'ச'கரம் வழங்கப்படுகிறது.

வான்மீகம்	கம்பராமாயணம்
ஸுக்ரீவ் (I, 1:15)	சுக்கிரீவன் (II:5256)
ஸுமித்ரா (I.1:7)	சுமித்திரை (I:269)
ஸீதா (I.1:7)	சீதை (I.698)
கௌஸல்யா (I.1.5)	கோசலை (I:267)
வஸிஷ்ட (I.1:9)	வசிட்டன் (I.255)
காகுஸ்த (III.6.35)	காகுத்தன் (I.392)
புலஸ்திய (III.34:103)	புலத்தியன் (VI.7353)

(ஈ) 'க்ஷ' என்னும் வடமொழி ஒலிக்கு இணையான எழுத்தாகத் தமிழில் 'க'கரம் ஒற்றாகவும் உயிர்மெய்யாகவும் வழங்கப்படுகிறது.

வான்மீகம்	கம்பராமாயணம்
அக்ஷ (V.6:97)	அக்கன் (II.4978)
இக்ஷ்வாகு (I.5.47)	இக்குவாகு (VI.10309)
இலக்ஷ்மண (I.1:7)	இலக்குவன் (I.298)

பொருண்மை அடிப்படையில் மொழிமாற்றம்

ஒலியனடிப்படையில் தமிழுக்கேற்ப மொழிமாற்றம் செய்ததோடு அமையாமல், மூலமொழியின் பொருண்மைக் கேற்பவும் பாத்திரப் பெயர்களைக் கம்பன் தமிழ்ப் படுத்தியிருக்கக் காண்கிறோம். சில எடுத்துக்காட்டுகள்:

வான்மீகம்	கம்பராமாயணம்
திரிஜடா (I.3:37)	முச்சடை
திரிசிரஸ் (I.1:12)	முத்தலை (V.6019)
யக்ஞசத்ரு (V.54:588)	வேள்வியின் பகைஞன்(VI.6114)
ரிஷ்ய ச்ருங்க (I.9:69)	கலைக்கோட்டுமுனி

இதுவரை கண்டவற்றால், வடமொழியில் இயற்றப்பட்ட வான்மீகி இராமாயணத்தின் அடிப்படையில் 'இராமாவதாரம்' என்னும் பெயரில் இராமகாதையைக் கம்பன் தமிழ்மொழியில் இயற்றினான். அவ்வாறு வான்மீகியின் காப்பியத்தைத் தமிழில் படைக்குமிடத்து இராமாயணப் பாத்திரங்களின் பெயர்களைக் கம்பன் தமிழ்ப்படுத்திய விவரங்களை அறிந்தோம். இவற்றுள் இராமன் (அகம்) , அகலிகை (பரிபாடல்) போன்ற சில பெயர்கள் கம்பனுக்கு முன்னரேயே சங்க இலக்கியங் களிலேயே தமிழாக்கம் பெற்றிருப்பதையும் அறிகிறோம்.[30]

30. பின்குறிப்பு: உயர்திரு மீ.தெய்வமணி என்னும் என்னுடைய ஆய்வு மாணவர் ஆய்வியல் நிறைஞர் பட்டத்திற்காக அளித்த (1990), மொழிபெயர்ப்பு நோக்கில் கம்பராமாயணப் பாத்திரப் பெயர்கள் என்னும் ஆய்வேட்டில் காணப்பெறும் தரவுகளுள் சில இக்கட்டுரையில் பயன்படுத்தப் பெற்றுள்ளன.

(ஜ) இரணிய வதைப்படலம்

வான்மீகி இராமாயணம்

வான்மீகி இராமாயணத்தில் இடம்பெறாத ''இரணிய வதைப்படலம்'' என்னும் ஒரு பிரிவு முதன்முதலில் கம்பராமாயணத்தின் ஓர் உறுப்பாக இடம்பெற்றுள்ளது. திறனாய்வுப் பதிப்பு , கோரக்பூர் பதிப்பு மற்றும் தர்மாலயா பதிப்பு என்னும் எந்த வான்மீகப் பதிப்பிலும் இரணிய வதைப்படலம் என்னும் ஒரு பொருட்பிரிவு காணப்பெற வில்லை.

வான்மீகத்தைப் பொறுத்தவரையில் வீடணனின் அறிவுரையும் இராவணனின் மறுப்புரையும் கீழ்வருமாறு இடம்பெற்றுள்ளன:

வீடணனின் அறிவுரை

''மன்னவரே, ஸ்ரீராமருக்குச் சீதாதேவியாரையும் அவரது ஆடை ஆபரணங்களையும் இப்போதே சமர்ப்பித்து விட்டு மனக்கவலை யொழிந்து உயிருடன் வாழ்வோமாக'' என்று வீடணன் இறுதியாக அறிவுறுத்தினான் (VI.15:14).

இராவணனின் மறுப்புரை

''பகைவனோடும் பாம்போடும் கூடி வசிக்கலாம்; ஆனால் நண்பனாகக் காட்டிக் கொண்டு பகைவனிடம் விசுவாசம் உடையவனோடு கூடி வாழ்தல் தகாது. இத்தகைய அறிவுரையைக் கூறும், குலத்தைக் கெடுக்கும் கோடரிக் காம்பாகிய உன்னைக் கண்ணெடுத்தும் பாரேன்'' எனச் சினந்து கூறி இடம்பெயர்ந்தான் (VI.16:2,15).

வீடணனின் முடிவு

''யமனால் கட்டுண்ட மானிடர்கள் இதமான அறிவுரையை ஏற்றுக்கொள்ளார்'' எனக் கூறிவிட்டு வீடணன்

இராம லக்குவர்களிடம் சென்று சேர்ந்து சரண் அடைந்தான் (VI.16:27).

கம்பராமாயணம்

யுத்தகாண்டத் தொடக்கத்தில் அமைந்துள்ள 'இராவணன் மந்திரப் படலத்தில்' வானரக் கூட்டத்தோடு வந்து நிற்கும் இராம லக்குவர்களை எவ்வாறு எதிர்கொள்வது என்னும் பொருளில் ஆலோசனை நடைபெறுகிறது. அப்போது 'அறிஞனின் மிக்கானாகிய வீடணன்',

> **தாங்கள் பெற்றுள்ள புகழையும் செல்வத்தையும் குலப் பெருமையையும் இழந்து தம் குலத்தோடு மடியாமல் இருக்க,**
> ***''அசைவில் கற்பினையுடைய அணங்காகிய சீதையை விடுவித்து அருள்வாயாக; நமக்கு இதனினும் சிறந்த வெற்றியில்லை''***
>
> என்று அறிவுறுத்தினான் (*VI.2:99*).

இதைக் கேட்டுச் சினம் கொண்ட இராவணன், தான் இந்திரனைச் சிறைவைத்த ஞான்று சிவன், நான்முகன், நெடுமாலாம் ஒருவன் –இவர்கள் எல்லாம் தனக்கு அடங்கி நின்றனர் என்று கூறி வீடணனின் அறிவுரையைக் கேளாது வெறுத்து ஒதுக்கினான். இதனைக் கேட்ட வீடணன்,

> **''ஐய, நின்னைவிடப் பன்முக வல்லமைகளை உடைய பெரியோர் பலர்**
> **இவனை (திருமாலை) முனிந்து கிளையொடும் மடிந்தனர். மேலும் நான்**
> **கூறுவது ஒன்று உண்டு கேள்'' என இரணியன் பெற்ற முடிவைக் கூறுவானாயினன்.**
>
> **பின்னும் வீடணன், 'ஐய! நின் தரம் அலாப் பெரியோர், முன்னை நாள், இவன் முனிந்திடக் கிளையொடும் முடிந்தார்;**

இன்னம் உண்டு, யான் இயம்புவது; இரணியன் என்பான்
தன்னை உள்ளவா கேட்டி' என்று உரைசெயச்
சமைந்தான்: *(VI.2:118)*

இந்த இரணியன் வரலாற்றைக் கூறும் முகத்தான் கம்பன் ''இரணியன் வதைப் படலம்'' (176 விருத்தப்பாடல்கள்) என்னும் பிரிவை முதன்முதலாகப் படைத்துக் கதைப்போக் கிற்கு உரியதோர் அமைப்பினைத் தந்துள்ளான். இராம காதைக்குக் கம்பன் அளித்த நன்கொடைகளுள் இதனையும் ஒன்றாகக் கருதலாம்.

துணைநூற்பட்டியல்

Albrecht Weber, **Uber das Ramayana**, Berlin 1870, Pp.1&88.

Desh Pande C.R., Transmission of the Mahabharatha Tradition, Simla: IIAS

Dinesh Chandra Sen, **The Bengali Ramayana**, Calcutta, 1920.

Hermann Jacobi, **Das Ramayana**,Bonn 1893.

Raghavan V., **Ramayana in classical Sanskrit and Prakrit Literature**,Chennai:2004.

Raghavan V., **Ramayana in Classical Sanskrit and Prakrit Literature**, Chennai, 2004.

Raghavan V., **The Ramayana Traditon in Asia**, Sahitya Akademi, NewDelhi:

Shankar Raju Naidu, Kamba Ramayana and Tulasi Ramayan, Madras:Univeristy of Madras, 1971.

SrinivasaIyangar K., **Asian Variations in Ramayana,** Sahitya Akademi, NewDelhi, 1983.

Srimad Valmiki Ramayana, Dharmalaya Edition, Palghat, Kalpathi Subrahmanaya Vadhyar & Sons, 1940.

The Valmiki Ramayana: Critical edition, Vol.I, Balakanda, ed. G.H.Bhatt, 1959.

The Valmiki Ramayana, BalaKanda, Critical edition , Baroda, M.S. University, 1959.

Srimad Valmiki Ramayana, Balakanda , Gorakpur: Gita Press, 1969.

Questioning Ramayanas, Oxford University Press, New Delhi: (2000)

கம்பராமாயணம், (இராமாவதாரம்), கம்பன் கழகம், சென்னை: *1976.*

காமில் புல்கே, ராம்கதா (தோற்றமும் வளர்ச்சியும்), (ஹிந்தி), அலகாபாத்: *1950*

கோமதி நாயகம் தி.சி., தமிழ் வில்லுப்பாட்டு, தமிழ்ப்பதிப்பகம், சென்னை:*1979.*

சாமிநாதையர் உ.வே., பரிபாடல்மூலமும், பரிமேலழகருரையும், சென்னை: *1935.*

தெ.ஞானசுந்தரம், கம்பன் மலர், *1991 (*கோவை: கம்பன் கழகம்*)*

தேவாரத் திருப்பதிகங்கள், சென்னை: கங்கை புத்தக நிலையம்,*1996.*

★★★★★★

புலத்துறை முற்றிய புகழாளர் :



தென்னார்க்காடு மாவட்டம் – அரும்பராப்பட்டு. பிறந்த ஊர், சின்னஞ்சிறிய ஊர், இவரைப் பெற்றதால் அந்த ஊர் மட்டுமா? பரந்து விரிந்த ஆராய்ச்சி உலகமே இமயப் புகழைப் பெற்றுக்கொண்டது. ஆம். மனவளத்தோடு மதிவளம் உடையவர் பேராசிரியர் மணவாளன் அவர்கள். மூச்சிலும் பேச்சிலும் ஆராய்ச்சி முத்திரை பதித்துச் சுடர்வீசும் பேரறிஞர்.

திருநெறிய தீந்தமிழையும் ஆழ்வார்களின் பாசுர ஞானத்தமிழையும் இவர் சிந்தை நிறைய அள்ளிக் கொண்டவர். இலக்கியப் பேராழிகளில் ஆடித்திளைத்து இன்பம் கண்டவர். தமிழுக்கு, புதிய ஆக்கம் தருகின்ற ஊக்கம் உடையவர். ஆதலின், இன்று இராமகாதைக்குக் கம்பனின் நன்கொடையை வாரித் தருகின்றார்.

இவர் பன்மொழிப் புலமையும் பாங்குறப் பெற்ற பண்பாளர். தீந்தமிழ், ஆங்கிலம், இந்தி என்ற மும்மொழிகளையும் செம்மையாய்க் கற்ற இலக்கியச் செம்மல். பன்மொழி கற்றிடும் இளமைக் கனவு முழுமையாய்ப் பலித்திட நாளும் உழைத்த நற்றமிழ் அறிஞர். உயர்பள்ளியில் தொடங்கிய ஆசிரியவாழ்வு படிப்படியாய் ஏற்றம் கண்டது. பல்கலைக்கழகத்தின் ஆங்கிலத்துறையைத் தழுவிக் கொண்டது. அதன்பின், தமிழ்த்துறைத் தலைமையாய்ப் பலரும் வியந்து பாராட்டுமாறு பரவி நின்றது. அங்கே உயர்புகழ் வந்து முடிசூட்டிக் கொண்டது.

நூல்களின் அரிய படைப்பும், அறிவு நலம்காட்டும் மொழிபெயர்ப்பும் இவர்தம் நுண்மாண்நுழைபுலம் காட்டும் கண்ணாடியாய்த் துலங்கும். இவர்தம் ஒப்பாய்வுகள் அனைத்தும் ஒப்பற்றவையாய் உயர்ந்து விளங்கும்.

அடக்கத்தின் உறைவிடமான இவர் அறிவின் நிறைகுடம். ஓய்வறியாத உழைப்பால் உயர்ந்த பேரறிஞர். எத்தனை உயர்ந்தாலும், உற்றவரை, நண்பர்களை, வழிகாட்டிய சான்றோர்களை என்றும் மறவாத இதயம் உடையவர்.

பலமொழிகளில் உலாவரும் நாற்பது இராமாயணங்களையும் கற்றுத்தேர்ந்தவர், முற்றிய புலமையாளர். ஆம்.

அ.அ. மணவாளர் - புலத்துறை முற்றிய புகழாளர்

– கவிஞர். ம. முத்தரசு